APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE.

செந்தமிழ் வேந்தர்

தமிழ்ப்பண்டிதர்

நா. லக்ஷ்மி நரசிம்மன்

எழுதியது

பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்

மதராஸ் & மதுரை

ஜிஸ்தர் செய்தது] 1933 [விலை அணா 8

செந்தமிழ் வேந்தர்



Kr Narayanan

நா. லக்ஷ்மி நரசிம்மன்

எழுதியது



பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்

மதராஸ் & மதுரை

[ரிஜிஸ்தர் செய்தது] 1933 [விலை அணா 8.

Approved by the Text-Book Committee
(Vide Fort St. George Gazatte)
Part I-B, Page 615, Dated 11th November 1930.

முகவுரை

மக்களறிவிற் கின்றியமையாதது தேசசரித்திரம். அது பலவிதப்பட்ட சாத்திரங்களையும், அவற்றின் வரலாறுகளையும் தன்னகத்துக்கொண்டு விளங்குதலால் மற்ற எவற்றினும் தலை சிறந்ததென்ப தொருதலை. முற்காலத்து நாகரீகங்களையும் பழக்க வழக்கங்களையும், அக்காலத்துள்ளார் அறிவின் திறத்தினையும், மற்றும் எவற்றினையும் பிற்காலத்துள்ளார் அறிந்துய்வதற்கேற்ற சாதனமாக இருக்கும்; அதனைப் பேணுதார் யாருமிலர்.

அத்தகைய தேசசரித்திரம் காலத்தாலும், மக்கள் நிலை வேறுபாட்டாலும் காலந்தோறும் தேசந்தோறும் மாறுதலையடையும் என்பது உண்மை. எனினும், அக்காலத்துள்ள அரசர் பெருமைகளைக் கூறுமுகத்தானே புலவர்பெருமக்கள் தன் தாய்நாட்டின் பெருமைச் சிறப்பினையும், மன்னர் பெருமையையும் நாமெல்லாம் அறியுமாறு கூறிப் போந்தனர். ஆனல், அவர்கள் கூறியவற்றையே கற்றுணர்ந்தார் யாவர்க்கும் எளிதன்றாயிருத்தலின் யாவருமுணர்ந்து பயன் பெறுமாறு அவர்கள் உதவியைக்கொண்டே எழுதப்பட்ட 'சேந்தமிழ் வேந்தர்' என்னும் இச்சிறியநூல் உயர்தரவகுப்பு மாணவர்கள் கற்றுப் பயன்படற்குரியதாம். கதாபாடமாக வைப்பதற்கேற்ற முறையில் சரிதவுண்மைகளுடன் சிறிது கதைப்போக்கினையும் தழுவி எழுதப்பட்டுள்ளது.

கலாசாலை அதிகாரிகள் இத்தகைய எனது முயற்சியைப் பயனுறச் செய்யுமாறு வேண்டுகின்றேன். மேலும், இப்புத்தகத்தைத் தமது பிரசுரமாக அச்சிட்டுதவி செய்த P. N. சிதம்பரமுதலியாரவர்கள் கம்பெனியின் மாநேசர் மு. கிருஷ்ண பிள்ளை யவர்கட்கு என்று நன்றியறிதற் கடப்பாடுடையேன். மற்றும், அறிவாளிகள் இதனுட் பல, உண்மைக்கு மாறுபாடானவற்றைக் காண்பாராயினும் அவற்றைப் பொருள்செய்யாது போற்றித் தெருட்டுமாறு வேண்டுகின்றேன்.

நலமறிந்து கொண்டு நவைநீக்கிக் கோடல்
கலையுணர்ந்த மாந்தர் கடன்.

நா. லக்ஷ்மி நரசிம்மன்.

உள்ளுறை

எண் பக்கம்

தமிழ்நாடு

பாண்டியர்

சேரர்

சோழர்

———

செந்தமிழ் வேந்தர்

நடுவு நிலைமையுடன் ஆராய்ச்சி செய்யின் இவ்வுலகத்தில் எவ்விதத்தினும் முதன்மை பெற்று ஓங்குவது நம்மிந்திய நாடு என்பது மிகையன்று. இவ்விந்திய நாட்டுள்ளும் வீரமும் வண்மையும், அரசியல் ஒண்மையும், போரின் றிண்மையும், நட்பின் உண்மையும், கல்வித்திறனும், கற்பின் உரனும், ஆன்மவுணர்ச்சி யாதிய பலவும் இயற்கையிலேயே அமையப்பெற்று எந்நாட்டவர்க்கும் தாயகமாய் வழிகாட்டியாய் நின்றது நம் தமிழ் நாடு.

முற்கூறியவற்றினைப் புறப்பொருள் என்று இலக்கணம் வகுத்துக்காட்டும் பெருமைபெற்றது நம் தமிழ் நாடொன்றே.

"விழித்தகண் வேல்கொண்டெறிய வழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு"

என்ற தமிழ் மறைக்கிலக்காய் வெற்றியுடன் முன்னிற்றல் அல்லது செற்றமர்க்களத்தே கன்னிற்றல் என்ற இரண்டிலொன்றே யுறுதியென்பார் வீரமொழியும், 'சோறன்றிப் போர் தந்திலன் என் ஐயன் ஆதலின் என்தோள் வறிதாயின.' விழுப்புண்படாத நாளெல்லாம் வழுக்கினுள் வைப்பேன் என்பார் வன்மொழியும், யானைமேலன்றி என்வேலை யெறியேன் என்று காத்திருந்து கைவேல் களிற்றொடு போக்கிவருபவன் மெய் வேல்பறியா நகுவானது நெஞ்சத்திட்பமும், சீ என்னை கொல் இது யானைமேல் வேலெறிதல்,

"தானால் விலங்காற் றனித்தாற் பிறன்வரைத்தால்
யானை எறிதல் இளிவரவால்-யானை
யொருகை யுடைய தெறிவலோ யானு
மிருகை சுமந்துவாழ் வேன்."

எனத்தனியே பகைவரிடைப் புக்கு நாழிலாட்டுவான் நோன்மையும், ஒரு சிறிதறியின் எத்தகைக் கோழையும் உலகெலாம் ஒருங்கெதிர்ந்து தன்மேல் வரினும் துளங்காது கலங்கவுள்புகக்கு ஊழித்தீயென்னச் சிதறவடிக்கும் வீரனுத லுண்மை. இத்தகைவீரம் இயற்கையிலேயே தமிழ் மக்க ளிடத்தன்றி வேறியாண்டும் யாரிடத்தும் இருந்ததாக இன்னும் கண்டறியப்படவில்லை.

ஆடவரொன்றே மகளிரும் அதனினும் மூதின்மக ளிரும் வீரம் ததும்பிய மனத்தினராயிருந்தனர் என்பதும் அறியற்பாலது.

"வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டன னென்னு முவகை
ஈன்ற ஞான்றினும் பெரிது"

என்று உவகை கொண்ட அம்முதியாளின் வீரத்தை என்னென்பது!

"மண்டமர்க் குடைந்தன னாயின் உண்டவென்
முலையறுத்திடுவன் யான்."

எனச் சினந்து வாளொடு சென்று படுகளத்துத் தன் மகன் மார்பகத்தே எண்ணற்ற புண்ணை அணிகலமெனக் கொண்டு வீழ்ந்த கிடக்கையைக் கண்ணுற்றுப் பெரிதுவந்த

அன்னையின் வன்மையை என்னென்பது! ஒருமகன் அல்லதில்லோள் செருமுகநோக்கிச் செல்கென விட்ட தாயின் திரத்தை யெய்வதும் யாரே! வருபடை போழ்ந்து வாய்ப் படவிலங்கி 'இடைப்படையழுவத்துச் சிதைந்து வேறாகிய சிறப்புடையாளன் மாண்புகண்டருளி வாடுமுலையூறிச்சுரந்த வீரத்தாயின் திரத்தை யெவ்வாறு புகழ்வது! ஈன்று புறந்தருதல் என்றலைக்கடனே; களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே என்ற வீரமகளை எவ்வாறுவியப்பது! இவ்வீரத் தாய்மாரை நினைக்கும்பொழுதெல்லாம் உள்ளம்பொங்கி யூக்கமேலிட்டு யாரே வீரம் மேவுறார்? மறுகணம் இறக்க இருப்பானும் தெறுவனே பகையை எனச்சீறி யெழுவானென்பதும், கூனிக் குறுகித் தண்டூன்றிச் செல்லும் கிழவனும் நானே மாநிலக்கிழவனென நிமிர்ந்து நின்று தண்டே வாளெனக் கொண்டு லவுவானென்பதும் மிகையாகுமோ!

தமிழ்நாடெங்கணும் ஊறிச்சுரந்து பெருக்கெடுத்தோடும் வீரத்தியற்கையினை யின்னும் சொல்லுவதென்றால் அதுவே ஒரு பெரிய நூலாகுமாதலின் மேற்செல்வாம்.

கொடைத்திறத்திலோ தமிழ்நாடே யதன் உண்மையியல்பை நன்கு விளக்கியது. பயன் நோக்கியும் இசை நோக்கியும் கொடுக்கும் கொடையைக் கூலிக்குச் செய்துண்ணுமாறென விலக்கினர் தமிழர். அதனை அதன்பொருட்டே செய்துவந்தனர். "அறவிலை வாணிகன் ஆயலலன்" என்பதன் பெருமையை யாரே அளவிட்டுரைக்க வல்லார்? கொள் கொம்பில்லாது காற்றால் அலைப்புண்ட முல்லைக்கொடியையும், புயலைக்கண்டு களித்தாடிய மயிலையும் அஃறிணை யென்

பதறிந்தும் தம் கொடையொன்றே கருதியத்திணை கருதாராய்த்தேரும் போர்வையு மீந்துசென்ற வள்ளல்களின் வள்ளன்மையை நோக்கின் ஈகையின்றன்மையை இற்றெனக் கிளத்தலும் வேண்டுமோ.

அரசியல் வன்மைக்கோ உலகத்தில் முதன்முதல் இலக்கியம் இதுவே. பண்டைக்காலத்தில் பன்னாடுகளைச் சீர் பெறச்செய்தது நம் நாடென்பதைச் சரித்திரவாயிலாக நன்கறியலாம். தற்காலத்திற் பன்னாடுகளின் உயர்வுக்கும் மூலகாரணமா யிருப்பதுமிதுவே. கல்வி கேள்வியாதிய பலவற்றினும் சிறந்து விளங்கும் மன்னராயுள்ளார் 'தமக்குறுதிபூண்ட ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் உடையராய்' ஆறங்கமும் கொண்டவராய்ப் பல்லாற்றானும் சின்னாடுடையராயினும் பொன்னாடுபோற்றும் புரவலனென்ன இந்நாட்டில் முன்னாளில் வாழ்ந்தனர். தம் கீழுள்ள சிற்றரசரிடம் நாட்டைப் பிரித்துக்கொடுத்தும், ஒவ்வொரு துறைக்கும் தனித்தனி மந்திரிகளைவைத்தும், போர்ச்சமயத்திற் சிற்றரசராற் சேனை பெருக்கியும், இன்னும் பலவிதத்துவேண்டிய இயற்றியும் ஆண்டுவந்தனர். காட்சிக் கெளிமைமிக்க காவலர் செங்கோல் நெறியிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து வந்தனர். எவர்க்கும் என்றும் எங்கும் குறையின்றி முறை செய்துவந்தனர்.

அறியாது ஆண்கன்றின்மேற் றேரூர்ந்த தன்னொருமகனை அத்தேர்க்காலிடை வீழ்த்த வேந்தனும், நன்மை நாடிக் கதவந்தட்டியது குற்றமென்றேறபட அதற்காகத் தன் கையிழந்த காவலனும், விதிவலியாற் கொல்லென்றேவியது தீதென்றறிந்து அக்கணமே அரசு கட்டிலிலேயே துஞ்சிய

அரசனும் இந்நாட்டவரேயாயின் பண்டைத்தமிழரசர் நீதிக் கஞ்சிய நேர்மையை யென்னென்பது!

போர்த்திறமென்பதே தமிழ் நாட்டிற் பிறந்ததெனல் சாலும். அரசரும், வீரரும் எதிரெதிர் நின்று பொரும் அறப்போரன்றி பள்ளங்களிலும் 'மறைவிடங்களிலும் மறைந்துநின்று பொரும் மறப்போரென்பதே யறியார். போர் முறையை வெட்சிகரந்தை முதலிய பல திறப்படப் பிரிவு செய்து இலக்கணம் வகுத்திருப்பதே அவருடைய போர்த் தேர்ச்சிக்குரிய சான்றும். முன்வைத்தகாலைப் பின்வைத்தே யறியார்.

புலமைத்திறத்திற் குரையாணியாய்நின்று விளங்கியது மிந்நாடே. இதனைப்பற்றிச் சொல்வதெனின் இச்சிறு நூலும் நம்மாயுளும் காணுவாம். எனினும் ஒரு சிறிது சொல்வோம். நாடெலாம் காற்கீழ் வீழ்ந்து வணங்கும் பெருமை பெற்ற அரசரைத் தன்னடிப்படுத்தியதும், பல கொடிய போர்களை நிறுத்தி நட்புப்பூணச்செய்ததும், 'மாங்குடி மருதனாராற் பாடப் பெறுதவனுவேன்' எனச் சபதம்பூணச் செய்வித்ததும், நாடெலாம் நல்வளங் கொழிக்கச்செய்ததும், இவற்றையெல் லாம் இக்காலத்து நாமறியச் செய்ததும் இப்புலமைத்திறமே. அரசர்தம் செங்கோல், கொடை, நட்பு முதலிய பயிர்கள் தீய குணங்களாகிய விலங்கினங்களால் அழிவுறாதபடி காப்பாற்றிய வேலியாயதூஉம் இப்புலமைத் திறமே.

முதன் முதலிற் கப்பல்யாத்திரை செய்யும் வழியைக் கண்டுபிடித்ததனால் உலக முழுவதிற்கும் இன்றியமையாதிருந் ததும் இந்நாடே. கப்பல்மூலம் வியாபாரம் செய்தது மட்டு

மன்று. போர்முகத்தினும் அதனை யுபயோகித்திருந்தனர். இருளிற் செல்லற்கின்றியமையாத கலங்கரைவிளக்கங் கண்ட வரும் நம்மவரே.

இங்ஙனம் எல்லாம் இயற்கையாய் அமையப்பெற்ற மக்களையீன்ற தமிழ்நாட்டின் பெருமையை முற்றவும் சொல்வ தெனின் நம்மாலியல்வதொன்றன்று.

இத்தகைய தமிழ்நாடு அக்காலத்தில் பாண்டி நாடு, சேர நாடு, சோழநாடு என மூன்றுவகையாகப் பிரிக்கப்பட் டிருந்தது. இம்மூன்று நாட்டையும் ஆண்ட மன்னர்க்கு முறையே பாண்டியன், சேரன், சோழன் எனப்பெயர். இவ ருள் சிலரது சரித்திரத்தின்மூலம் தமிழ்நாட்டின் சரித்திரத்தை ஒருவாறு கூறுவாம்.

பொற்கைப் பாண்டியன்

கையரிந்தான் மாறன் கதவிடித்த குற்றத்தால்
எய்யுஞ் சிலைக்கே யிரங்கேசா-பையத்
தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

ஆலவாயின் அவிர்மதிச் சடிலத் தெம்பெருமான் அறு
பானான்கு ஆடலியற்றுதற் கிடமாயதும், தென்றலொடு மேக
மேலாஞ் செந்தமிழின் மணம்வீசப் பெறுவதுமான மதுரை
யம்பதியைத் தலைநகராக்கொடு ஆண்டவருள் இப்பாண்டி
யனும் ஒருவன்.

இவன் மிக்க கல்விமான். புலவர்களைப் போற்றுவதிற்
பொருவிலான். அந்தண ரோம்புதலினும் அத்தகையனே.
அமைச்சர் சொல்வழி ஆற்றுவதே ஆற்றலாவுடையன். எப்
பொழுதும் விற்போரினும் சொற்போரேமிக்குடையான்.
நீதியின் வழியில்நிற்கும் நேர்மையன். தான் முதலில் நின்று
தன் மன்னுயிரையும் அவ்வழி நிறுத்துவான். மன்னுயிர்க்
குக் காண்பதற் கெளிவரவுடையான். செம்மனத்தான், தண்
ணளியான், செங்கோன்மை மிக்கான்.

தானே நேரில் வழக்குகளை விசாரணைசெய்து நியாயம்
இறுப்பான். வழக்குக்குவந்தாரது சொல்லிலிருந்தே

உண்மை, உண்மையின்மை யிவற்றைக் கண்டுதெளிவான். தவறியேனும் நியாயமிருப்பதில் வழுவான். சிறிது தவறினும் வழக்கிழந்தார் மனமுறமறுகிநின் றழூதகண்ணீர் முறையுறத்தேவர் மூவர்காக்கினும், வழிவழியீர்வதோர் வாளாகும், என்பதை நெஞ்சத்தேநன்கு வைத்தவனாதலால், மிக்க அச்சத்துடனேயே எதனையும் செய்வன். காட்சியாலும், ஆவணத்தாலும், ஆட்சியாலும் மற்றும் எவற்றாலும் அறியவியலாத வழக்குகளை,

ஒற்றிற் றெரியா சிறைப்புறத் தோர்துமெனப்
பொற்றோ டுணையாத் தெரிதந்தும்

என்றபடி, தன்னைப் பிறரறிவுறாவண்ணம் மாறுவேடம் பூண்டு யாங்கணும் அலைந்து உண்மையறிந்த பின்னரேதீர்ப்பான். இங்ஙனம் மாறுவேடம்பூண்டு நகரிசோதனை செய்தல் பெரும்பாலும் இரவுகளிலேயே. இங்ஙனம் எவர்க்கும் இனியனாய் முறைசெலுத்துவதில் நிகரற்றவனாய் ஆண்டுவந்தனன் பாண்டியர் தோன்றல்.

இவனது செங்கோன்மைக்கும், நீதிக்கஞ்சிய நேர்மைக்கும் குலசேகரபாண்டியனென்னும் அவனது இயற்பெயர்மறைந்து புகழ்ச்சியால்வந்த செயற்பெயரே இவன் பெயராய் நின்றமையே போதியசான்றாகும். ஒருவனது அருஞ்செயலையும், அரும்பெருங்குணத்தையும், குறிப்பனவற்றையே அவனுக்குப் பெயராயும், பெயர்க்குமுன் அடைமொழியாயும் வழங்குதல் அக்காலத்து வழக்காம். அவ் வழக்கின்படியே இவன் செய்ததோர் அருஞ்செயல் காரணமாக ஏற்பட்ட சிறப்புப்

பெயரே இவனுக்குப் பெயராய்நின்றது. இவ்வழக்கினை அக்காலத்து இருந்தார் யாரிடத்தும் காணலாம். அவன்செய்த அருஞ்செயல் பின்வருமாறு.

இவன் செங்கோல் செலுத்திவருநாட்களில் ஒருநாள் தன் வழக்கப்படியே நள்ளிரவில் நகரிசோதனையின் பொருட்டுப் புறப்பட்டனன். நாடுகாவலன் தனக்குத் துணைக்காவல ரொருவருமின்றித் தன்னந்தனியனாய்ச் சென்றனன். உள்ளம் புதையவே வைத்த பொதுமகளிர் தங்கள் இதயமேபோன்றதும், அஞ்சனத்திரள் போன்றதுமான நள்ளிருளிற் சோதனை செய்வான் புக்கனன். புக்கவன், அவ்விருளைச் சிறிதும் மதியானாய்த் தன்தோட்டுணையே துணையெனவுடையானாய்ப் பற்பல சிறு சந்துகளையும் விடாது காலால்நடந்து காண்பானாயினன். இவன் செல்லுமிடம் யாங்கணும் உறக்கம் தலையெடுத்தாடா நின்று அமைதி குடிகொண்டிருந்தது. எங்கும் ஒரே அமைதி. சிற்சில இடங்களில் ஊர்காவலரின் பேரொலிதவிர யாங்கும் ஓசையற்றிருந்தது. தெருவின் சந்திகளில் ஏற்றப்பட்டுள்ள விளக்கங்களும், தாரகையொளியும் தவிர யாண்டும் இருள் கவிந்திருந்தது. இத்தகைப் பேர்யாமத்திடையே அமைதி மிக்க நகரை முற்றுஞ்சுற்றிவந்தான். இறுதியில் அந்தணர் வீதியை யடைந்தான்.

அங்ஙனம் அந்தணர் தெருவையடைந்தவன் ஆங்கொரில்லிற் றனிவிளக்கமொன்று கண்டனன். இந்நகர் முற்றும் அமைதி குடிகொண்டிருப்ப இவ்வில்லினுள்மட்டும் விளக்கத்தைக்கண்டவுடன் வியப்பெய்தினன் வேந்தன். அவனை யறியாமலே அதனை யறியவேண்டுமென்றெண்ணம்

அவனகத்தே யெழுந்தது. இந்நடுநிசியில் இவ்வந்தணன் மனையில்மட்டும் விளக்கெறிவதன் காரணத்தை யறிவோம் எனத் தீர்மானித்து அவ்வீட்டையடைந்து மறைவிலிருந்து ஆராய்வானாயினன்.

இவன்செய்கை யிவ்வாறிருக்க, அவ்வில்லிற்குரிய அந்தணன் ஒருவன் கீரந்தையென்னும் பெயரினன். வாரணாசி சென்று கங்கையாடிவர விரும்பித் துணையற்ற தன்னிள மனைவியைத் தேற்றிக்கொண்டிருந்தனன். அவன் தன் மனைவியை நோக்கிப் "பெண்ணே! நான் கங்கையாடிவர விரும்பினேன். நான் திரும்பிவருவதற்கு ஓராண்டு செல்லும். அதுவரை நீ மனங்கவலாதிருப்பாயாக என்றனன்." அதற்கவள், நாதனே எங்காயினுமுண்டா? துணையற்ற என்னைப் பெருநகரிற் றனியேயிருத்தித் தீர்த்தயாத்திரை சென்று வருகிறேனென்று கூறுகின்றீர்களே. அதுவும் ஒரு நாளா! இரண்டு நாளா! ஒரு வருடம்! அம்மம்ம! நான் எவ்விதம் தனித்திருப்பேன். என்னால்முடியாது நானும்உடன்வருவேன்" என்றனள். அதற்குக் கீரைந்தை மீண்டும் "பெண்ணே! மனங்கவலேல் நான் வரும்வரையும் என்னைநினைந்து பொறுமையோடிருப்பதே ஏற்றதாம். தீர்த்தயாத்திரை செல்லும்போழ்து நின்னையும் அழைத்துப்போதல் இயலாதாம். இடையிற் பல துன்பங்கள் நேரிடும். நான் போகும் இடமோ அணித்தன்று. பல காவத தூரத்தையும் காலாற்கடந்தே செல்லவேண்டும். அது நின்னால் முடியாது. ஆதலின் ஈண்டிருத்தலே தக்கதாம் நான் சொன்னதை மறாதே. மேலும் நான் இங்கு எவ்விதம் தனித்திருப்பேனென்றாய், இப்பாண்டியநாடுமுழுதையுமே சிறி

தும் குறையின்றித் துன்பநீக்கி இன்பமாக்கி ஆளும் நம் கொற்றவன் இலனோ? நீ ஏன் அவனை மறந்தனை? அவன் துணையாலன்றோ நான் நின்னைக்காப்பது. இல்லையேல் என்காவல் என்னும்? ஆதலின் நீ அஞ்சுவது பேதமைத்தே.

"மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனின் றும்"

"உறங்கு மாயினும் மன்னவன் றன்னொளி
கறங்கு தெண்டிரை வையங் காக்குமால்"

ஆதலின், அவன் தன் கடமையை அறிந்து அதற்குத் தக எதனையும் செய்வன். எனப் பலகூறித் தேற்றினன்.

அதன்மேல் அவன்மனைவியும் ஒருவாறு சம்மதித்தனள். அதன்பின்னும் அந்தணன் வேண்டுவன பலகூறிக் காசியாத்திரை செல்லுதற்கமைந்தான். இவ்வாறு இவர்கள் சம்பாஷணையனைத்தையும் மறைவிருந்து தெளிவாய்க் கேட்டறிந்த அரசன், அதுமுதல் கீரந்தையின் மனைவியைக் காப்பாற்றவேண்டியது தன் கடனாயிற்று என அறிந்தான். அங்ஙனம் தன் கடமையை யுணர்ந்தவுடன் அவளைக்காத்தற் காவனவற்றை யாராய்ந்தான். அவளது உண்டிக்குறுவன யாவும் அளித்தல்வேண்டும். அங்ஙனம் அவற்றை அவட்கு மட்டுமே யளிப்பதென்றால், அது பொருத்தமின்றாய்க் கணவன் சென்றபின் அவளதிளமை நோக்கிய அரசன் ஏதோ சூதுகருதினன்எனத் தன்மேலும், கொண்ட கணவனை மறந்து வேறொருவனைப் பற்றினள்போலும் என அவள் மேலும், பழிச்சொல்லுண்டாதற் கிடமாகுமன்றி உண்மையை உலகம் அறியவியலாது போதலால் இழிவேஏற்படும் என்றுணர்ந்த அரசன் அன்றுமுதல் அவள்கணவன் வரும்வரை

அவள்பொருட்டு அத்தெருவிலுள்ளார்க்கு உண்டிக்காவன வற்றைக் கொடுத்துவருவதே ஏற்புடைத்தாம் எனத்தீர்மானித் தனன். தான் கருதியது நிறைவேறுவதுடன் அறப்பயனும் அளித்தலால் இதனிற் சிறந்ததொன்றில்லை யெனக்கொண்டு அவ்வாறே செய்துவருவானாயினன். மேலும் தினந்தோறும் நகரிசோதனை செய்து பின் ஒரு வழிப்போக்கன்போல் அவ் வீட்டுத்திண்ணையிற்படுத்து ஒருசிறு தீங்கும் நேராவண்ணம் கண்ணிமைகாக்கின்ற இமையிற் காத்துவந்தனன். என்னே! யவன்றன் நேர்மை. மலர்விரித்த பஞ்சணை துறந்து புழுதி படிந்து மறைப்பின்றி நளிர்மிக்க கரடு முரடான தெற்றியே மெல்லணையெனக்கொண்டா னோர்வருடம்.

இங்ஙனம் இவன் கடமையுணற்றுவதிலும், அச்சங் கொண்டியற்றிய பெருங்குணத்தை உலகறிய வெளிப்படுத் தற்கென்றே, ஓராண்டு மெல்லணை துறந்து வெட்டவெளியிற் கிடந்து உறக்கமின்றியிருந்த பலனை யவனடைதற்கென்றே ஒரு சமயம் நேர்ந்தது.

கீரந்தை குறித்துச்சென்ற ஓராண்டுகழிந்தது. அவனும் குறித்தநாள் தவறாமல் வீட்டையடைந்தனன். கணவனும் மனைவியும் நெடுநாள் பிரிந்தவராதலால், ஒருவர்க்கொருவர் மிக்கக் களிப்புடன் தத்தமக்கு நிகழ்ந்தவற்றைச்சொல்லி யுரை யாடிக்கொண்டிருந்தனர். அந்தணன் யாத்திரையின்வரலாற்றை விடாதுசொன்னான். ஆங்காங்கு நிகழ்ந்த பலவிசேடங்களையும், கங்கையாற்றின் பெருமையையும், அதில் ஆடவருவோரையும் பற்றிக் கூறினன். அவன்மனைவியும், அவன் இல்லாதசமயம்

பாண்டியன் காவலில் தான் ஒரு தீதுமின்றி இருத்தலை மிக்கக் களிப்புடன் கூறினள். இவர்கள் பேச்சின்மேல் வைத்த ஆவலால் பொழுது சென்றதையும் கவனித்திலர்.

இஃதிங்ஙனமாக, வழக்கம்போல் பாண்டியன் நகரிசோதனை செய்துவிட்டு, அவ்வீட்டுத் திண்ணையிற் படுக்கவந்தவன் உள்ளே வெளிச்சத்தையும், இருவர்பேசுங்குரலையும் கண்டனன். ஒருநாளும் இல்லாமல் ஆண்மகன் குரலைக்கேட்டவுடன் அஞ்சி நடுங்கினன். ஐயோ! நம்மையும் அறியாமல்இப்பெண்கொண்ட கணவர்க்குத் தீங்கியற்றிவிட்டனளே! என்செய்வேன்! இவள் கணவனே, இவளைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பையெல்லாம், என்றலைமேற் றள்ளினன். நானும் விடாது காத்துவந்தேன். கடைசியில் என் காவலையும் மீறினளேஇவள். ஆஹா! பெண்களின் மனதை யறியவல்லார் யார்? அவர்கள் சாமர்த்தியத்தை யாரால் காணமுடியும்? இவள் கணவன் வரும் நாள் இதில்லையேயென, மாறியுணர்ந்தவனாய் இவன் சோரநாயகனேயென எண்ணினன். கீரந்தையின் குரலை முன்னம் அறிந்தவனாதலால், இப்பொழுது ஓராண்டு பலவேறிடங்களிற் சஞ்சரித்து யாத்திரை செய்து வந்துள்ள அவன்குரல் மாறுபட்டிருக்கவே, அக்குரல் வேற்றுமையாலும் இவன் அந்நியனேயென நிச்சயித்தனன். அவ்வாறு நிச்சயித்தவன் ஐயோ நமது காவலெல்லாம் வீணாகியதே எனக் கலங்கினான்.

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யும்மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை"

"நிறையால் மிகுகில்லா நேரிழையாரைச்
சிறையா னகப்படுத்த லாகா—"

எனப் பலவாறுநினைந்து அந்தோ! கணவனென திரிற் கற்பு மிக்குடையாள்போன்று நடித்துவிட்டு இப்படிச்செய்தனளே! என்செய்வேன் எனக்கலங்கினன். மீட்டும் ஒருகால் இவன் உண்மைக்கணவனாகவே யிருக்கலாமோ எனஎண்ணினன். மறு படியும் அவன் வருவதற்குரிய காலம் இன்னும் வரவில்லையே! என நினைந்தனன். இவ்வாறு பலபல எண்ணி ஒன்றினும் நிலை யிலனாய்க் கோபமூண்டு அவ்வீட்டுக்கதவை ஒரேஅறையாய் அறைந்தனன்.

வெகு ஆவலுடன் பேசிக்கொண்டிருந்த கணவன்மனைவி யர் இருவரையும் அவ்வொலி ஒருங்கே திடுக்கிடச்செய்தது. உடனே கீரந்தை மிக்கத் துணிவுடன் யாரடா? கதவைத்தட்டு பவன் எனச் சினந்துகேட்டனன். அவ்வாறு கேட்டுவிட்டு ஆஹா! நாமில்லாக்காலத்தில் எவனோ வருகின்றான்போலும் என்று நினைந்து தன் மனைவியிடத்து ஐயங்கொண்டவனாய் அவளை நோக்கினன். அவ்வாறு நோக்கியநோக்கிலிருந்தே தன் கணவன் கருத்தையறிந்த கீரந்தைமனைவி நடுநடுங்கி ஐயோ என் அன்பரே! என்மேல் ஐயங்கொள்ளல் வேண்டாம். நான் ஒரு பாவமும் அறியேன். காசியாத்திரையின் பொருட்டாக என்னைத் தனியேவிட்டுப்பிரிந்தகாலத்தில் நான்அஞ்சியதற்குத் தேறுதலாக, காக்கும் கடமைபூண்ட பாண்டியன் இலனோ என்றுரைத்துச்சென்றீர். அவ்வண்ணமே என்னை இதுவரை காத்த அவ்வரசன் இப்பொழுது என்னிடத்து நீர்கொண்ட ஐயத்தினின்றும் நீக்கிக் காவானோ என்றனள்.

இதனைக்கேட்ட பாண்டியன் நடுநடுங்கி அந்தோ! என் னினைந்தென்செய்தேன்? எவ்வளவு குற்றங்களைச் செய்துவிட் டேன். ஆராயாது செய்துவிட்டேனே. உள்ளிருப்பவனைச்

சோரனென்றெண்ணினேன். கற்புமிக்குடையாளைக் கற்பழிந்தவளெனக் கருதினேன். அவசரப்பட்டுக் கதவைத்தட்டி முன்னம் நாம்கொண்ட சந்தேகத்தை இப்பொழுது அவள்கணவனே கொள்ளுமாறு செய்துவிட்டேன். ஐயோ! இத்தகைய பாபங்களை எவ்வாறு போக்கிக்கொள்வேன். அப்பெண்ணோ முன்னம் அவள்கணவன் செய்ததேபோல் பொறுப்பையெல்லாம் என்றலைமேற்றள்ளிவிட்டனள். இந்நிலையில் நான் அவளை எவ்வாறு இச்சந்தேகத்தினின்றும் நீக்கிக் காப்பாற்றுவேன்? தர்மசங்கடமாய் முடிந்ததே? வெளிப்பட்டு ஏதேனும் பேசுவோமென்றால் நம்மையே தினந்தொறும்வரும் சோரனென்றெண்ணி யின்னும் நிச்சயங்கொள்வானே? ஒன்றும்பேசாதுவாளாவிகின் அப்பொழுதும் ஐயமறாதே. உண்மைக்கணவன் வந்ததையறிந்தவுடன் ஓடிவிட்டான்கயவன் என்றெண்ணுவானே? ஐயோ! இருப்பதும் தவறு ஓடுவதும் தவறாய்முடிந்ததே. என்செய்வேன் என்றேங்கினன். ஆராயாது செய்ததால் வருந்தீங்கை நானேயனுபவிக்கவேண்டும் என்று திடரென்று தன்னுள் எழுந்த ஓர் யோசனையின்படி அவ்வீட்டை விட்டு நீங்கி அத்தெருவிலுள்ள மற்ற வீட்டுக்கதவுகளையும் அவ்வாறே படபடஎன்று தட்டிவிட்டு அரண்மனைசேர்ந்தனன்.

தனதுகேள்விக்கு விடைவராததால் கதவைத்தட்டியவன் யாவனென்றறியும்வண்ணம் கீரந்தை கதவைத்திறந்துகொண்டு வெளியேவந்தனன். அவ்வமயத்தில் அவ்வாறே தத்தம் கதவைத்தட்டியவன் யாவன் என்றறியவிரும்பி அக்கம்பக்கத்துள்ள அந்தணர்யாவரும் வெளியேவந்தனர்.

அங்ஙனம் வெளியில்வந்தவர் சுற்றுமுற்றும் பார்த்து தங்களைத்தவிர வேறொருவரையும் அவ்விடத்துக் காணாமையால் அவர்களனைவரும் ஒருங்குகூடி என்னே!யிது நம்முடையரசன் ஆட்சியிலும் இங்ஙனம் ஒருநாளும்இல்லாது நடக்கக்காரணம் என்ன?என்னதுணிவு? பாண்டியனுணையும் பழுதுபட்டதோ! என வினாவியவராய் ஒன்றும்தோன்றாது எவ்விதமேனும் இதனையறிதல்வேண்டும். நாளை நம்மரசனிடம்சொல்லி இவ்வநீதிக்குக் காரணமான கயவனைப்பிடித்துத் தக்கவாறு ஒறுக்கச் செய்யவேண்டும் எனக்கொண்டு தத்தமுறையுள் புக்கனர். கீரந்தையும் தன்மனைவியிடத்துக்கொண்ட சந்தேகம் ஒருவாறு நீங்கப்பெற்றவனாய் நிம்மதியுடன் உறங்கினன்.

மறுநாள் பொழுதுபுலர்ந்தது. அந்தணர்யாவரும் தத்தம் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு அரண்மனையடைந்தனர். அங்கடைந்து தம்வரவை வாயில்காவலன் மூலமாக அரசற்குணர்த்தி அரசனது உத்தரவால் அரசிருக்கை மண்டபமுற்றனர். இவர்களுடைய வரவை எதிர்பார்த்தவன்போல் அரசனும் தன் காலைக்கடன் யாவும்முடித்து ஆடையணிமுதலியவற்றால் தன்னை யலங்காரஞ்செய்துகொண்டு மந்திரிகள், புடைசூழ, மதிவல்லோர் எத்தெடுப்ப அரியணையின்மீது வீற்றிருந்தனன். வந்த அந்தணரைக் கண்டவுடன் அரசன்முதலியயாவரும் எழுந்து வணங்கி அவரதாசிபெற்று அவர்கள் அமர்ந்தபின் யாவரும் அமர்ந்தனர்.

அவ்வாறுயாவரும் அமர்ந்தபின் அரசன் அந்தணர்ஈண்டு வருதற்குற்ற காரணம் என்னெனவினவ அவ்வந்தணருள் ஒருவன் எழுந்து கூறலாயினன். அரசே! இதுவரை நின்

இவனது ஆழ்ந்த கல்வித்திறம் இஃதொன்றிலிருந்தே நன்கு தெரிந்துகொள்ளலாம்.

பின்னுரை

இவ்வாறு பலவிதச்சிறப்பும் குறைவறப்பொலிந்த மன்னர் மன்னனான நெடுஞ்செழியன், யுத்தரங்கங்களிலே முனைந்து நின்று மறக்கள வேள்வி செய்வதையும், கல்வித்திறத்தையும் கண்டமருதனார், இனிமேல் அவ்வுலகத்திற்காம் அறக்களவேள்வியும் செய்வித்தற்குரியகாலம் இதுவெனத்தேர்ந்து செல்லுலகத்தையும், அதன்பெருமையும், அது பெறும்வழியையும், அதற்குமுதலில் நிலையாமைமிக்க இவ்வுலகத்தாசை விடல் வேண்டுவ தின்றியமையாதது என்பதையும் நன்கறிவுறுத்தினர். அதன்பொருட்டுப் பாடியதே மதுரைக்காஞ்சி யென்னும்நூல். அவ் வறவுரைகேட்ட நெடுஞ்செழியனும் பல அறக்களவேள்விகளை யியற்றினன். இவ்வாறு எவ்விதத்தினும் யார்க்கும் இனியனாய்ப் பல்லாண்டு வாழ்ந்தனன் பாண்டியன். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.

காலம்— இவனதுகாலம் கி–பி ஐந்தாம் நூற்றாண்டாகும். அதாவது இற்றைக்குச் சுமார் 1400 வருடங்கட்கு முன் என்பர். சிலர் 2000 வருடங்கட்குமுன் என்றுங்கூறுவர். அது பொருந்தாது. ஏனெனில், இவன்காலமும் செங்குட்டுவன் காலமும் அநேகமாய் ஒன்றே. சிறிது பின்னிருக்கலாம். அவன்காலமோ ஐந்தாம் நூற்றாண்டென்பதனை ஆண்டுக் கூறுதும். ஆகவே, அவன்காலத்தவனான இந் நெடுஞ்செழியனும் அவ்வைந்தாம் நூற்றாண்டிலிருந்தவனாதல் ஒருதலை. இவன்காலத்திருந்த மன்னர்கள் சேரன், செங்குட்டுவன், குட்

டுவஞ்சேரல், சேரமான் மாந்தரஞ் சேரலிரும்பொறை, இராய சூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பவராவர். புலவர்கள் இவ் வரசர்களைப்பாடிய புலவர்களுட்பெரும்பாலர். அவருள் இவனைப் பாடியோர் மாங்குடிமருதனார், குறுங்கோழியூர்கிழார், குடபுலவியனார், கல்லாடனார், இடைக்குன்றூர்கிழார் முதலியவர்களாம்.

சேரன் செங்குட்டுவன்

வடக்குத் திசைபழநி வான்கீழ்த் தென்காசி
குடக்குத் திசைகோழிக் கோடாம்—கடற்கரையில்
ஓரமோ தெற்காகும் உள்ளெண் பதின்காதம்
சேரநாட் டெல்லையெனச் செப்பு.

என்ற, இந் நான்கெல்லையுட்பட்டது சேரநாடு. மலைவளம் மிக்கிருத்தலின் மலைநாடென் றொருபெயரும்உண்டு. தொன்மையும் தூய்மையும் உடையது. தற்காலத்திலும் மற்றைப் பாண்டிய சோழநாடுகளைப்போற் றன் பண்டைத்தமிழரசை விடாத பெருமைமிக்கது.

இதன் தலைநகர் 'வஞ்சிமாநகரம்'. புகாரும் மதுரையும் போன்ற பழமையும் சிறப்பும்உடையது. சிலசமயங்களில் சேரர் பிரிவினர்க்குத் தலைநகர்களாகிய தொண்டி மாந்தைஎன்ற துறைமுகப்பட்டினங்களினும் உயர்வுடையது. புலவர்களாற் புகழப்பெற்றது. ஆன்பொருநை என்னு மாற்றின் கரையின் மேல்உள்ளது. 'கரூர்' என்று அன்றும் இன்றும் அறியப்படும் வேறொரு பெயரினையும் உடையது.

அக்காலத்தில் இந்நகரம் பகைவரைக் கணத்தில் அழிக்க வல்ல பல்விதப்பொறிகளையும், இடையறாத சும்மையுடைய அடையாத நான்கு வாயில்களையும் உடையதான திண்ணிய கோட்டைமதிலாற் சூழப்பெற்றிருந்தது. வானளாவிய மதிலும், அதனைச்சூழ்ந்த பாதலம்புக்க கிடங்கும் மூன்றுலகங்களையும் ஒன்றாக்கி நின்றன.

கோட்டைக்கு வெளியேயுள்ளதற்குப் புறஞ்சேரி யென்றும், உட்புறத்துள்ளதற்கு அகநகர் என்றும் பெயர். புறஞ்சேரியில் கோட்டையைக்காக்கும் வீரர் இருக்கைகளும், தடாகங்களும், அமணப்பள்ளிகளும் மற்றும் பலவும் உளவாம். அகநகரோ, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகியோர் வீதிகளின் ஒழுங்கினாலும், பல தெய்வகோட்டங்களாலும், பலமதப்பள்ளிகளாலும், பொது அம்பலங்களாலும், நடனசாலைகளாலும், ஆவணங்களாலும், நியாயசபைகளாலும், கல்விச்சபைகளாலும், மற்றும் தலைநகர்க்கு வேண்டிய எவ்விதத்தாலும் தன்னிகரற்றுவிளங்கியது.

இந்நகரைத் தலைநகராக்கொண்டு ஆண்டுவந்தோர் சேரர் எனப்படுவோர். இவர்கள் மிக்க தொல்குடியோர். இவர்கள் மற்றைப்பாண்டியரும் சோழரும் மதிகுலத்தவர், சூர்யகுலத்தவர் என்று அறியப்படுதல்போல இன்னகுலத்தவர் என்று அறியப்படாமையே இவர் தொன்மைக்குச் சான்றாகும். சிலர் வடநாட்டரசரென சூர்யகுலம், சந்திரகுலம், அக்கினிகுலம் என முக்குலம் வகுக்க நினைந்து இவர்களை அக்கினிகுலத்தினர் எனக் கூறுகின்றனர். ஆனால், அதற்கு ஆதாரம் ஒன்றும் இன்று. தமிழ்நூல்களும் இவர்களை இன்ன குலத்தின

ரென் றுரையாதொழிந்தது. ஆனால், அவை பெரும்பாலும் இவர்களை வானவர் என்று அழைத்தலால், இவ்வம்ஸம் ஆதியில் தெய்வசம்பந்தமுள்ளது என்பது ஒருவாறு தெளிவாம். மேலும் இவர்களது தொன்மையை சேரசோழபாண்டியர் என்ற வழக்கிலும் 'போந்தைவேம்பேயாரென வரூஉம்' குட்டுவன், செழியன், செம்பியன் எனவரும் செய்யுளிலும் சேரரும் அவர் மாலையும் முதலிற் கூறப்படுவதால் நன்கறியலாம்.

இன்னும் வடநாட்டுப் புராதன இதிகாஸ சம்பந்தமுமுடையோர். உதியஞ்சேரல் என்னுமொருசேரன் பாண்டவ கௌரவயுத்தத்தில் பாண்டவர்க்குணவளித்தானென்பர். இதனை,

ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன்....................என்று இளங்கோவடிகளும்
அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பாலம் பூந்தும்பை
ஈரைம் பதின்மரும் பொருது களத்தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்

என முஞ்சியூர் முடிநாகராயருங் கூறுதல் காண்க.

இத்தகைத்தொன்மையும் வன்மையும் வாய்ந்த சேரருட் சிறந்து விளங்கியவன், 'இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்' என்பவன். இவன் 'உதியஞ்சேரல்' என்பானுக்கு 'வேண்மாள் நல்லினி' என்பவளிடத்துப்பிறந்தவன். இவனுக்குப் 'பல்யானைச்செல்கெழுகுட்டுவன்' என்றொரு சகோதரன் உண்டு. இந்நெடுஞ்சேரலாதன் தன் காலத்தரசரிற் சிறந்த வீரனாய் விளங்கினான்.

தமிழ்நாடு முழுமையும் இவனாட்சிக்குட்பட்டிருந்தது. தமிழ் நாட்டை வென்றதோடமையாது, வடவாரியரையும் வென்று வடநாட்டிலும் தன் கீர்த்தியைப்பரப்பி அதற் கறிகுறியாக இமயத்தில் விற்குறியிட்டான். யவனர்களை வென்றடிப்படுத்தி, அவர் தலையில் நெய்பெய்து ஓட்டி, அவருடைய அருவிலை நன் மணியாவும் தன்னாட்டிற் கொணர்ந்து யாவர்க்கும் வரையாது வழங்கினன். கடலிடைத் தீவொன்றில் வசித்த பகைவரை மரக்கலப்படையால் அழித்தனன். மற்றும் எழுபகைவரை வென்று அவர்முடியாற் சமைந்ததோ ராரம்பூண்டவன்.

> "குமரியொடு வடவிமயத்
> தொருமொழிவைத் துலகாண்ட"

பெருவீரனாகிய நெடுஞ்சேரலாதன் வள்ளன்மையானும் கல்விகேள்விகளானுஞ் சிறந்து விளங்கினான். இவனைக் 'குமட் டூர்க்கண்ணனார்' என்ற புலவர் பதிற்றுப்பத்துள் இரண்டாம் பத்தால் பாடினார். அதற்காகத் தன்னாட்டுட்பட்ட உம்பற் காட்டில் ஐஞ்ஞூறு ஊர்களைத் தானமாகக்கொடுத்ததோடு, முப்பத்தெட்டியாண்டு தென்னாட்டு வருவாயுட்பாகமுங் கொடுத்தனன்.

இவனது தம்பியாகிய பல்யானைச் செல்கெழுகுட்டு வனும் இவன்போன்று பெருவீரனே. முன், தங்கட்குரியதாக இருந்து பின்னால் வேறொருவராற் கொள்ளப்பட்ட உம்பற் காட்டைத் தன் வீரச்செயலால் தன்னதாக்கி ஆண்டிருந்து அரசுசெலுத்தியவன். முடி சூட்டிக்கொள்ளுங்காலையில் மேல் கடல்நீருங் கீழ்கடல்நீரும் ஒரே நாளில் வரும்படித் தன்னாட்டி லிருந்து யானைகளை நிறுத்திக் கடனீர் கொணர்ந்து அபிடே

கஞ் செய்துகொண்டானாதலால், பல்யானைச் செல்கெழு குட்டுவனென்றழைக்கப்பட்டான்.

இவன் வீரனாய்விளங்கியதோடு மகா ஞானியாயும் விளங்கினான். அக்காலத்துத் தமிழ்நாட்டின் ஆன்ம வுணர்ச்சியையும், வேள்விப் பெருமையையும் இவன் சரிதமொன்றாலேயே அறியலாம்.

இவனைப் 'பாலைக்கௌதமனார்' என்பவர் பதிற்றுப்பத்துள் மூன்றாம்பத்தாற் பாடினார். அதற்கு அரசன் வேண்டியதுகொண்மின் என, அவர் நானும் என்மனைவியும் வான்சேரல் வேண்டும் என்றனர். அதற்குரியவழி யாதெனப் பலபெரியோரையும் வினவினன். அவர்கள், வானகம் வேண்டுவோன் வேள்விகள் செய்யவேண்டும் என விடையிறுத்தனர். அதன்படி அவர்பொருட்டாகப் பத்துயாகம் செய்தனன். யாகமுடிவில் கௌதமனாரும் அவர் மனைவியும் உடலோடு சுவர்க்கம் புக்கனர் என்ப.

விஸ்வாமித்திரராலும் செய்யமுடியாத அரிய காரியத்தைச் செய்துமுடித்த இவ்வரசனின் பெருமையும், இதனால் தமிழ்நாட்டின்மேன்மையும் அளவிலடங்கா. இறுதியிற் றன் புரோகிதர் நெடும்பாரதாயனார் என்பவரோடு துறவுபூண்டான்.

நெடுஞ்சேரலாதன், சோழன்மணக்கிள்ளியின் மகளாகிய நற்சோணை என்பவளையும், வேளாவிக்கோமான் பதுமன் மகளையும் மணந்தனன். ஒவ்வொரு மனைவியரிடத்தும் இவ்விரு புதல்வரைப் பெற்றான். அந்நான்கு புத்திரருள் முதல்வனே நம் கதாநாயகனாகிய செங்குட்டுவன்.

செங்குட்டுவனுடன் பிறந்த மற்றைய மூவர்க்கும் முறையே இளங்கோ, நார்முடிச்சேரல், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் எனப்பெயர். நெடுஞ்சேரலாதனும், அவன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவனுமே யிவர்என்னும்படி யியற்கையாகவே குணங்களால் அமைந்திருந்தனர் செங்குட்டுவனும் இளங்கோவும். இளமையிலேயே செங்குட்டுவன் இவ்வுலகமதிக்கும் வீரனாய்த்தோன்றினன். அவ்வாறே இளங்கோவும் அவ்வுலகத்து அந்தமில் இன்பத்தை அளப்பான் போற் றோன்றினன். ஒவ்வொரு செயலிலும் முன்னவன் மணிமுடிதரிக்கும் மன்னனாதலை விளக்கினன். இளையவனோ சடைமுடிதரிக்கும் சாந்தனாதலைக் காட்டினன்.

இவர்களது தோற்றம் ஒருநாள் அவ்விதமே பலித்தது. தன் வழக்கப்படி பலதுறைகளினும் தேர்ந்த மதிவல்லோர் பலர்சூழச் சபையில் நெடுஞ்சேரலாதன் வீற்றிருந்து அளவளாவுவானாயினன். அக்காலத்து அவனது இருபக்கத்தும் செங்குட்டுவனும் இளங்கோவும் வீற்றிருந்தனர். இவ்வாறிருக்கும் பொழுது திடீரென நிமித்திகனொருவன் எழுந்து நின்று அரசே! வாழிய நினக்குப்பின் அரசனாதற்குரியவன் இளங்கோவே. அவனிடத்தேயே அரசர்க்குரிய இலக்கணம் பலவும் அமைந்துகிடக்கின்றன என்றான்.

இதனைக்கேட்ட செங்குட்டுவன் முகம் திங்களைக்கண்ட பங்கயம் என்ன மலர்ச்சிநீங்கியது. நிமித்திகன்சொல்லையும் அதனாற்றன் றமையன்நிலையையும் அறிந்த இளங்கோ எழுந்து மிக்கசினத்துடன் நிமித்திகனைநோக்கி யாதுகூறினை? நின்னிமித்திகம் முழுதும் பழுதுபட்டதே? சபையில் எதனைக் கூறினும் நன்காராய்ந்தன்றோ சொல்லல்வேண்டும். வாய்க்கு

வந்தவா பிதற்றுதல்முறையோ? இந்நாடொன்றோ பன்னாடும் காற்கீழ்வணங்கும் மன்னர்மன்னற்குரிய இலக்கணங்கள் என் தமையனிடத்தே அமைந்து கிடத்தலை ஏன் அறிகிலை? இதனை நீயும் பின்னர்க்காண்பாய். மேலும் இன்றிருந்து நாளை அழியும் தரணியாளும் தார்வேந்தர்க்குரிய இலக்கணம் என்னிடத்தில்லை. என்று மழியா வீட்டின்பத்தை யடைவோர்க்குரிய இலக்கணங்களே என்னிடமுள்ளன. அதனை யானும் மெய்யாக்குகின்றேன். காண்டி எனக்கூறிப் பல்லோர் குழீஇய அவ்வவையிலேயே துறவெய்தினன். இதனை,

பத்தினிக்கடவுளின் அருள்வாக்காகத்தானே தன் வரலாற்றைக் கூறுவதனால் நன்கறியலாம்.

வஞ்சிமூதூர் மணிமண்டபத்திடை
நுந்தைதாணிழ லிருந்தோய்நின்னை
அரசுவீற்றிருக்குந் திருப்பொறியுண்டென்
றுரைசெய்தவன்மே லுருத்துநோக்கி
கொங்கவிழ் நெடுந்தேர்த்தானைச்
செங்குட்டுவன்றன் செல்லல் நீங்க
பகல்செல்வாயிற் படியோர்தம்முன்
அகலிடப்பாரம் அகலநீங்கி
சிந்தைசெல்லாச் சேணெடுந்தூரத்து
அந்தமில்இன்பத் தரசாள் வேந்தென
என்றிறமுறைத்தனள் இமையோரிளங்கொடி

இதனைக்கேட்ட செங்குட்டுவன், தன்தம்பியின் உன்னத நினைவுக்கு வியப்பும், தன்னரசுரிமை கிடைத்ததற்கும், தம்பியின் சோதரவாஞ்சைக்கும் மகிழ்ச்சியும், அத்தகை யருமைத்

தம்பி துறவெய்திப் பிரிதற்கு வருத்தமுமே வடிவாக வீற்றிருந்தனன். நெடுஞ்சேரலாதனும் அவ்வாறேயாயினன். இங்ஙனம் துறவெய்திய இளங்கோ அதுமுதல் 'இளங்கோவடிகள்' என்றழைக்கப்பெற்றார். தன் தமையன் வேண்டுகோட்கிணங்கிக் கருவூர்ப்புறத்தேயுள்ள குணவாயிற்கோட்டத்தில் வசித்து வருவாராயினன்.

இங்ஙனம் நெடுங்காலம் அறம் மல்க வீற்றிருந்த பெருவீரனாகிய நெடுஞ்சேரலாதன், தன் கடைசிக்காலத்தில் சோழன் வேற்பஃறடக்கை பெருநற்கிள்ளி, என்பானொடு பொருது அவனையும்வீட்டித் தானும் வீந்தனன்.

அதன்மேற்றன் இருபதாவது வயதிற் செங்குட்டுவன் அரியணையேறினன். அதுமுதல் நாடெங்கும் தன் தந்தைபரப்பியபுகழை நிலைநிறுத்தினன். தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனையும், சோழன்கரிகாலனையுமே இவனுக்கு ஒருவாறு உவமை கூறலாமன்றி, முன்னும் பின்னும் அறிவு திருவாற்றல்களிற்சிறந்த இவனுக்கு வேறெவரும் சமானமாகார். மகாவீரன்; சகலசற்குணசம்பன்னன்; கல்வி கேள்விகளிற் சிறந்தோன்; தெய்வபக்தியிற் சிறந்தோன்; வயதாற்சிறியனாயினும் அறிவாற்பெரியோன்; ஏகதாரவிரதமுடையோன்; முடிவாக அரசர்க்குரிய இலக்கணங்களெல்லாவற்றிற்கும் இலக்கியம் இவனே.

அரசியல்

தன்னாட்டைத் தன் தந்தையினும் சீர்பெறஆண்டனன். இளங்கோ, நிமித்திகற்கெதிராகக் கூறியவனைத்தும் மெய்யாக்கினன். தன்னாயுளிற் பெரும்பாலும் போரிலேயே கழித்த

னன் எனினும், நாட்டின்நலம் சிறிதும் குறையாவாறு அமைத்து அரசுசெலுத்தினன். ஒவ்வொருதுறைக்கும் தனித் தனி மந்திரிகளை நியமித்தனன். அவற்றைப்பற்றிய விவரம் முழுதையும் அவர் கையிலேயே ஒப்புவித்தனன். அவர்களும் தன்னலமின்றி மன்னுயிர்க்கும் மன்னவற்கும் உறுதிபூண்ட வர்களாய் விளங்கினர். எவ்விஷயமும் அவரோடு சூழ்ந்தே செய்வான். அவருள் முக்கியமாய் விளங்கினவர், சேனைத்தலை வன் 'வில்லவன்கோதையும்' தேசவருவாய்த்தலைவன் 'அழும்பில் வேளும்' தூதுவர்தலைவன் 'சஞ்சயனுமே' யாவர். தூதரன்றி இவனது ஒற்றர்கள் நாடெங்கும் நிறைந்திருந்தனர். ஐம்பெருங் குழுவும், எண்பேராயமும்தவிர, கருமவினைஞர், கணக்கியல் வினைஞர், தருமவினைஞர், தந்திரவினைஞர், பெருங்கணி என்றித் திறத்தோர் பலவகுப்பினரால் நாட்டை நன்குபுரந்தனன்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங் கைம்புலத்தாறோம்பும்" குடிகட்கு ஐந்துபங்குபோகத் தான் ஆறில் ஒரு பங்கையே கொண்டு அதனையும் அவர்நன்மைக்கே செலவழித்து வந்தனன். அரசுரிமையைக் குடிகட்காவனசெய்ய ஏற்பட்ட சேவகம் என்றே கருதினான். வையகம் முழுமையும் வறிஞனோம்புமோர் செய்யெனக்காத்தினி தரசுசெய்தனன். இவன் அரசுரிமையை எவ்வாறு கருதினன் என்பதை ஆரியப் படைதந்த பாண்டியன் நெடுஞ்செழியன், கோவலனைக்கொல் வித்ததாற் செங்கோன்மை பிழைப்புண்டது என்றறிந்தவுடன், அரசு கட்டிலிலேயே இறந்துவீழ்ந்தான் என்றதைக்கேட்ட வுடன் அவன் கூறிய கூற்றுக்களாலே தெளிவாம்.

எம்மோ ரன்ன வேந்தற் கிற்றெனச்
செம்மையி னிகந்தசொற் செவிப்புலம் படாமுன்
உயிர்பதிப் பெயர்ந்தமை யுறுக வீங்கென
வல்வினை விளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது
மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லை

இதிலிருந்து இவன் செங்கோன்மையை எவ்வளவு உயர்வாகக் கருதினனென்பதையும், அதில் எவ்வளவு ஜாக்கிரதையுடனிருந்தானென்பதையும், அங்ஙனம் செங்கோலைத் தன்னுயிராகக்கொண்ட நெடுஞ்செழியனை எவ்வாறு கருதுகின்றனென்பதையும், அவனது அறிவின்றிறத்தையும் நன்கறியலாம்.

போர்கள்

இவன் அரியணை ஏறிய முதலிருந்து இறுதிவரை இணையிலாவீரனுதலை விளக்கியிருக்கின்றான். இவன் செய்த போர்களில் இப்பொழுது நமக்குத்தெரிவன ஆறே. அவை,

1. முதல் வடநாட்டுப்போர்
2. கொங்கர் செங்களத்துப்போர்
3. கடலிடைப்போர்
4. மோகூர்ப்போர்
5. ஒன்பது சோழருடன்போர்
6. இரண்டாவது வடநாட்டுப்போர்

1. முதல் வடநாட்டுப்போர்

நெடுஞ்சேரலாதன், வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளியொடு பொருது வீழ்ந்தபொழுதே செங்குட்டுவன் தாயாகிய நற்சோணை என்பவளும் தன் கணவனுடன் உயிர்நீத்தனள். அக்காலத்தியற்கை யதுவாகலின்,

காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி
யூதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்காது
இன்னுயிர் ஈவர் ஈயா ராயின்
நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்

என்றதூஉம் அவ்வறக்கற்பின் இயல்பை வலியுறுத்தும். அவ்வாறு, காதலனொடிறக்கும் கனங்குழையாரும் கணவனிறந்ததைப் பிறர்வாயாற் கேட்குமுன்பே மனவுணர்ச்சியினுற்றுமையால் உயிர்நீப்பார் தலையாயாரெனவும், பிறர் கூறிக்கேட்டவக்கணமே உயிர்நீப்பார் இடையாயார் எனவும், பின் உடன் கட்டையேறுவோர் கடையாயாரெனவும் முத்திறப்படுவர்.

இவ்வாறு உயிர்நீத்த தன்தாயின் பத்தினித் தன்மைக்காக, அவள்போற் படிமஞ்செய்து பூசித்தற்கு விரும்பினன் செங்குட்டுவன். அவ்வாறு படிமஞ்செய்தற்குக் கல்லெடுத்தற்குரிய இடம் எதுவென மதிவல்லோரை வினவினன். அவர்களும், பத்தினிகட்கும் கடவுளர்க்கும் படிமஞ் செய்ய விரும்புவோர் அவற்றிற்குரிய கல்லை பொதியிலினின்றுவது இமயத்தினின்றுவது எடுக்கலாம். பொதியிலிற் கல்லெடுப்பின் காவிரியிலும், இமயத்திற் கல்லெடுப்பின் கங்கையினும் நீர்ப்படை செய்தல் வேண்டும். ஆதலின், அரசே! எற்றது நோக்கிச்செய்க என்றனர். அதுகேட்ட அரசன் பொதியிலிற் கல்

லெடுத்தல் நம் போன்ற வீரர்கட்கு வியத்தற்குரிய செய்கை யில்லை. ஆதலின் இமயத்தினின்று கற்கொணர்தலே ஏற்றது எனக் கூறி வடநாட்டியாத்திரைக்கு வேண்டியவற்றைச் சித்தம் செய்யுமாறு கட்டளையிட்டனன். யாவும் விரைவில் நடந்தன. பின் நல்லதொரு சுபமுகூர்த்தத்தில் நாற்படை யும் சூழ வடநாடு சென்றனன்.

யாதொரு தடையுமின்றி வடநாட்டை யடைந்து இமை யத்திற் கல்லெடுப்பித்து கங்கையில் முறைப்படி நீர்ப்படை யும் செய்தனன். இவ்வமயத்தில், இவன் வரவையுணர்ந்த ஆரியவரசர் பலர் வயதிற்சிறியன்; மேலும் தனியன் என நினைந்து ஒருங்கு பொரவெழுந்தனர். உடனே சிறிதுந் தாழாது எதிர்த்துவந்த ஆரியவரசர் பலரையும் தானொரு தனியனாய் நின்றே வென்று தனதுவீரத்தையும், தமிழ்நாட் டின் பெருமையையும் நிலைநாட்டினன். இவனது போர்திறத் துக் காற்றாராய்ப் பல ஆரியமன்னர் அஞ்சியோடி யொளித் தனர்; எஞ்சிய சிலர் நட்பாளராயினர். இங்ஙனம் தாய்க்குக் கல்லெடுக்கச்சென்று தன் இசைபரப்பி மீண்டனன். இதனை,

> கங்கைப் பேர்யாற்றுக் கடும்புன னீத்தம்
> எங்கோ மகளை ஆட்டிய வந்நாள்
> ஆரிய மன்னரீ ரைஞ்ஞூற் றுவர்க்கு
> ஒருநீ யாகிய செருவெங் கோலம்
> கண்விழித்துக் கொண்டது கடுங்கட் கூற்றம்

என்ற இளங்கோவடிகள் கூற்றால் அறியலாம்.

2. கொங்கர் செங்களத்துப் போர்

அக்காலத்திலிருந்த சோழபாண்டியரும், மற்றும் சிலசில சிற்றரசரும் இவன் பெருமையுணராராய் இகழ்ந்தமையாற் சினங்கொண்டு போரவெழுந்தனன். கொங்கர் செங்களத்தில் அனைவரையும் முறியடித்தனன். இதனை,

நும்போல் வேந்தர் நும்மோ டிகலிக்
கொங்கர் செங்களத்துக் கொடுவரிக் கயற்கொடி
பகைப் புறத்துத் தந்தன ராங்கவை
திசைமுக வேழத்தின் செவியகம் புக்கன

என்ற சிலப்பதிகாரவடிகளால் அறியலாம்.

3. கடலிடைப்போர்

கடலைத் தமக்கரணகக் கொண்டமையாற் றருக்கித் தீங்கியற்றினரை, இவன்றந்தை மரக்கலங்களாற் கடலைக்கடந்து சென்று அடக்கித் தன்னடிப்படுத்தினன் என்று முன்னமே கூறியுள்ளோம். அவ்வாறு, நெடுஞ்சேரலாதனால் வெல்லப் பட்ட அவர்கள் அவன்இறந்தவுடன் மீண்டும் பழையபடி செருக்குக்கொண்டு செங்குட்டுவனை மதியாராயினர்.

அதுகண்ட செங்குட்டுவன் மிகச்சினந்து, 'அறிவிலிகள் கடலைப் பெரியதொரு அரண்என்று நினைந்தல்லவோ தருக்கு கின்றனர்' எந்தைக்கு அவ்வரண் எவ்வாறாயிற்று? என்பதை யும் மறந்தனர் போலும்! எனக்கூறி மரக்கலப்படையைச் சித் தஞ்செய்ய வேவினன். உடனே வேற்படைகள் ஏற்றிய கப் பல்கள் பல சித்தமாயின. அவற்றின் உதவியாற் கடலிற் சென்று அவரோடு பொருதனன். அப்போரில், வலியழிந்த

அவர் தந்தையினும் இவன் பெருவீரனுதலை யுணர்ந்து பணிந்தனர். இவ்வாறு கடலிடைத்தீவும் இவன் வசமாயது. அது முதல் இவன் 'கடலோட்டிய வேல்கெழுகுட்டுவன்' என்ற அடைமொழிகொடுத்து அழைக்கப்பெற்றான். இதனை,

படைநில விலங்குங் கடன்மரு டானை
மட்டவிழ் தெரியன் மறப்போர்க் குட்டுவன்
பொருமுரண் பொறாது விலங்குசினஞ் சிறந்து
செருச்செய் முன்பொடு முன்றின் முற்றி
ஓங்கு திறல்பௌவ நீங்க வோட்டிய
நீர்மா ணெஃக நிறுத்துச் சென்றழுந்த
கூர்மத னழியரோ நெஞ்சே.

என்ற அகநானூற்றுச் செய்யுளால் அறியலாம்.

4. மோகூர்ப்போர்

பாண்டியனது படைத்தலைவனுகிய பழயன் என்பவன் மோகூர் என்ற ஊருக்கு உரியவனுதலால் 'பழயன்மோகூர்' என்று அழைக்கப் பெற்றான். இவன் மகாவீரன்; பாண்டியர்க்குப் பல போரில் வெற்றிவிளைத்தவன்; மோரியவரசன் ஒருவன், (சமுத்திரகுப்த னென்பது நூலாராய்ச்சியில் வல்லோர் துணிபு.) தன் வன்மையால் இந்தியா முழுமையும் திக்விஜயம் செய்து அடிப்படுத்தித் தென்னுட்டில் பிரவேசித்த பொழுது, எதிரற்ற அவனை பொதியமலைக்கருகே எதிர்த்துப் பாண்டியர்க்குப் பொதுவாக தமிழ்நாட்டிற்கே கீர்த்தியை விளைத்தவன். தமிழ்நாட்டின் ஸ்வதந்தரத்தைக் காத்தவன்.

ஆனால், தன் வீரமிகுதியால் பிறரை மதியாது செருக்குக் கொண்டிருந்தான். செங்குட்டுவனுக்கு நட்பரசனாகிய அறுகை யென்பானுக்கு இப்பழையன் பகைவன். ஆதலால், அவனுக்கு உதவியாக இவனை அடக்க நினைத்தான் செங்குட்டுவன். மோகூரும் வீரனாதலால் செங்குட்டுவனை மதித்திலன். இருவர்க்கும் பெரும்போர் மூண்டது. அப்போரில் பழயனைக் கொன்றனன. பழயனும் இறக்கும்வரை செங்குட்டுவன் சேனையைச் சின்னபின்னங்கண்டு முன்வைத்தகாலைப் பின்வை யாது கௌரவமாகவே இறந்தான். இவ்விதமாக மோகூர்ப் போரிலும் வெற்றிபூண்டான்.

5. ஒன்பது சோழருடன் போர்

இச் செங்குட்டுவன் சோழன்மணக்கிள்ளியின் மகள் வயிற்றுப் பேரனாதலால், அவ்வமிசத்தாரிடத்து இவன் அன்பு பூண்டிருந்தான் என்று சொல்வது மிகையாம். மணக்கிள்ளி யினது தலைநகர் உறையூராம். ஆதலால், அவர்கள் உறையூர்ச் சோழர் எனப்படுவார். இவரது தாயாதிகள் காவிரிப்பூம் பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தனர். இவ் விருவர்க்கும் அடிக்கடி சண்டைகள் நிகழும். வன்மைமிக்க வன்பால் மற்றையது அடங்கியிருக்கும். ஒரு சமயம் உறை யூர்ச்சோழர் மேலாக விளங்குவார். இன்னொருசமயம் புகார்ச் சோழர் விளங்குவர்.

மணக்கிள்ளிக்குப் பின் அவன்மகன் நெடுங்கிள்ளி ஆண்டுவந்தனன். அந்நெடுங்கிள்ளியும் சின்னாள் ஆண்டபின் தன்னொருமகன் பெருங்கிள்ளி யென்பவனைக் கவனிப்பா ரின்றி விட்டுவிட்டு இறந்தனன்.

இவனது ஆழ்ந்த கல்வித்திறம் இஃதொன்றிலிருந்தே நன்கு தெரிந்துகொள்ளலாம்.

பின்னுரை

இவ்வாறு பலவிதச்சிறப்பும் குறைவறப்பொலிந்த மன்னர் மன்னனான நெடுஞ்செழியன், யுத்தரங்கங்களிலே முனைந்து நின்று மறக்கள வேள்வி செய்வதையும், கல்வித்திறத்தையும் கண்டமருதனார், இனிமேல் அவ்வுலகத்திற்காம் அறக்களவேள்வியும் செய்வித்தற்குரியகாலம் இதுவெனத்தேர்ந்து செல்லுலகத்தையும், அதன்பெருமையும், அது பெறும்வழியையும், அதற்குமுதலில் நிலையாமைமிக்க இவ்வுலகத்தாசை விடல் வேண்டுவ தின்றியமையாதது என்பதையும் நன்கறிவுறுத்தினர். அதன்பொருட்டுப் பாடியதே மதுரைக்காஞ்சி யென்னும்நூல். அவ் வறவுரைகேட்ட நெடுஞ்செழியனும் பல அறக்களவேள்விகளை யியற்றினன். இவ்வாறு எவ்விதத்தினும் யார்க்கும் இனியனாய்ப் பல்லாண்டு வாழ்ந்தனன் பாண்டியன். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.

காலம்— இவனதுகாலம் கி-பி ஐந்தாம் நூற்றாண்டாகும். அதாவது இற்றைக்குச் சுமார் 1400 வருடங்கட்கு முன் என்பர். சிலர் 2000 வருடங்கட்குமுன் என்றுங்கூறுவர். அது பொருந்தாது. ஏனெனில், இவன்காலமும் செங்குட்டுவன் காலமும் அநேகமாய் ஒன்றே. சிறிது பின்னிருக்கலாம். அவன்காலமோ ஐந்தாம் நூற்றாண்டென்பதனை ஆண்டுக் கூறுதும். ஆகவே, அவன்காலத்தவனான இந் நெடுஞ்செழியனும் அவ்வைந்தாம் நூற்றாண்டிலிருந்தவனாதல் ஒருதலை. இவன்காலத்திருந்த மன்னர்கள் சேரன், செங்குட்டுவன், குட்

டுவஞ்சேரல், சேரமான் மாந்தரஞ் சேரலிரும்பொறை, இராய சூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பவராவர். புலவர்கள் இவ் வரசர்களைப்பாடிய புலவர்களுட்பெரும்பாலர். அவருள் இவனைப் பாடியோர் மாங்குடிமருதனார், குறுங்கோழியூர்கிழார், குட புலவியனார், கல்லாடனார், இடைக்குன்றூர்கிழார் முதலிய வர்களாம்.

சேரன் செங்குட்டுவன்

வடக்குத் திசைபழநி வான்கீழ்த் தென்காசி
குடக்குத் திசைகோழிக் கோடாம்—கடற்கரையில்
ஓரமோ தெற்காகும் உள்ளெண் பதின்காதம்
சேரநாட் டெல்லையெனச் செப்பு.

என்ற, இந் நான்கெல்லையுட்பட்டது சேரநாடு. மலைவளம் மிக்கிருத்தலின் மலைநாடென் றொருபெயரும்உண்டு. தொன் மையும் தூய்மையும் உடையது. தற்காலத்திலும் மற்றைப் பாண்டிய சோழநாடுகளைப்போற் றன் பண்டைத்தமிழரசை விடாத பெருமைமிக்கது.

இதன் தலைநகர் 'வஞ்சிமாநகரம்'. புகாரும் மதுரையும் போன்ற பழமையும் சிறப்பும்உடையது. சிலசமயங்களில் சேரர் பிரிவினர்க்குத் தலைநகர்களாகிய தொண்டி மாந்தைஎன்ற துறைமுகப்பட்டினங்களிலும் உயர்வுடையது. புலவர்களாற் புகழப்பெற்றது. ஆன்பொருநை என்னு மாற்றின் கரையின் மேல்உள்ளது. 'கரூர்' என்று அன்றும் இன்றும் அறியப்படும் வேறொரு பெயரினையும் உடையது.

அக்காலத்தில் இந்நகரம் பகைவரைக் கணத்தில் அழிக்க வல்ல பல்விதப்பொறிகளையும், இடையறாத சும்மையுடைய அடையாத நான்கு வாயில்களையும் உடையதான திண்ணிய கோட்டைமதிலாற் சூழப்பெற்றிருந்தது. வானளாவிய மதிலும், அதனைச்சூழ்ந்த பாதலம்புக்க கிடங்கும் மூன்றுலகங்களையும் ஒன்ருக்கி நின்றன.

கோட்டைக்கு வெளியேயுள்ளதற்குப் புறஞ்சேரி யென்றும், உட்புறத்துள்ளதற்கு அகநகர் என்றும் பெயர். புறஞ்சேரியில் கோட்டையைக்காக்கும் வீரர் இருக்கைகளும், தடாகங்களும், அமணப்பள்ளிகளும் மற்றும் பலவும் உளவாம். அகநகரோ, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆதியோர் வீதிகளின் ஒழுங்கினலும், பல தெய்வகோட்டங்களாலும், பலமதப்பள்ளிகளாலும், பொது அம்பலங்களாலும், நடனசாலைகளாலும், ஆவணங்களாலும், நியாயசபைகளாலும், கல்விச்சபைகளாலும், மற்றும் தலைநகர்க்கு வேண்டிய எவ்விதத்தாலும் தன்னிகரற்றுவிளங்கியது.

இந்நகரைத் தலைநகராக்கொண்டு ஆண்டுவந்தோர் சேரர் எனப்படுவோர். இவர்கள் மிக்க தொல்குடியோர். இவர்கள் மற்றைப்பாண்டியரும் சோழரும் மதிகுலத்தவர், சூர்யகுலத்தவர் என்று அறியப்படுதல்போல இன்னகுலத்தவர் என்று அறியப்படாமையே இவர் தொன்மைக்குச் சான்ருகும். சிலர் வடநாட்டரசரென சூர்யகுலம், சந்திரகுலம், அக்கினிகுலம் என முக்குலம் வகுக்க நினைந்து இவர்களை அக்கினிகுலத்தினர் எனக் கூறுகின்றனர். ஆனல், அதற்கு ஆதாரம் ஒன்றும் இன்று. தமிழ்நூல்களும் இவர்களை இன்ன குலத்தின

ரென் றுரையாதொழிந்தது. ஆனல், அவை பெரும்பாலும் இவர்களை வானவர் என்று அழைத்தலால், இவ்வம்ஸம் ஆதியில் தெய்வசம்பந்தமுள்ளது என்பது ஒருவாறு தெளிவாம். மேலும் இவர்களது தொன்மையை சேரசோழபாண்டியர் என்ற வழக்கிலும் 'போந்தைவேம்பேயாரென வரூஉம்' குட்டுவன், செழியன், செம்பியன் எனவரும் செய்யுளிலும் சேரரும் அவர் மாலையும் முதலிற் கூறப்படுவதால் நன்கறியலாம்.

இன்னும் வடநாட்டுப் புராதன இதிகாஸ சம்பந்தமுமுடையோர். உதியஞ்சேரல் என்னுமொருசேரன் பாண்டவ கௌரவயுத்தத்தில் பாண்டவர்க்குணவளித்தானென்பர். இதனை,

ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றுது தானளித்த
சேரன்......................என்று இளங்கோவடிகளும்
அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்டி பாலம் பூந்தும்பை
ஈரைம் பதின்மரும் பொருது களத்தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்

என முஞ்சியூர் முடிநாகநாகராயருங் கூறுதல் காண்க.

இத்தகைத்தொன்மையும் வன்மையும் வாய்ந்த சேரருட் சிறந்து விளங்கியவன், 'இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்' என்பவன். இவன் 'உதியஞ்சேரல்' என்பானுக்கு 'வேண்மாள் நல்லினி' என்பவளிடத்துப்பிறந்தவன். இவனுக்குப் 'பல்யானைச்செல்கெழுகுட்டுவன்' என்றொரு சகோதரன் உண்டு. இந்நெடுஞ்சேரலாதன் தன் காலத்தரசரிற் சிறந்த வீரனாய் விளங்கினன்.

தமிழ்நாடு முழுமையும் இவனாட்சிக்குட்பட்டிருந்தது. தமிழ் நாட்டை வென்றதோடமையாது, வடவாரியரையும் வென்று வடநாட்டிலும் தன் கீர்த்தியைப்பரப்பி அதற் கறிகுறியாக இமயத்தில் விற்குறியிட்டான். யவனர்களை வென்றடிப்படுத்தி, அவர் தலையில் நெய்பெய்து ஒட்டி, அவருடைய அருவிலை நன் மணியாவும் தன்னாட்டிற் கொணர்ந்து யாவர்க்கும் வரையாது வழங்கினன். கடலிடைத் தீவொன்றில் வசித்த பகைவரை மரக்கலப்படையால் அழித்தனன். மற்றும் ஏழுபகைவரை வென்று அவர்முடியாற் சமைந்ததோ ராரம்பூண்டவன்.

"குமரியொடு வடவிமயத்
தொருமொழிவைத் துலகாண்ட"

பெருவீரனாகிய நெடுஞ்சேரலாதன் வள்ளன்மையானும் கல்விகேள்விகளானுஞ் சிறந்து விளங்கினான். இவனைக் 'குமட் டூர்க்கண்ணனார்' என்ற புலவர் பதிற்றுப்பத்துள் இரண்டாம் பத்தால் பாடினார். அதற்காகத் தன்னாட்டுட்பட்ட உம்பற் காட்டில் ஐஞ்ஞூறு ஊர்களைத் தானமாகக்கொடுத்ததோடு, முப்பத்தெட்டியாண்டு தென்னாட்டு வருவாயுட்பாகமுங் கொடுத்தனன்.

இவனது தம்பியாகிய பல்யானைச் செல்கெழுகுட்டு வனும் இவன்போன்று பெருவீரனே. முன், தங்கட்குரியதாக இருந்து பின்னால் வேறொருவராற் கொள்ளப்பட்ட உம்பற் காட்டைத் தன் வீரச்செயலால் தன்னதாக்கி ஆண்டிருந்து அரசுசெலுத்தியவன். முடி சூட்டிக்கொள்ளுங்காலையில் மேல் கடல்நீருங் கீழ்கடல்நீரும் ஒரே நாளில் வரும்படித் தன்னாட்டி லிருந்து யானைகளை நிறுத்திக் கடனீர் கொணர்ந்து அபிடே

கஞ் செய்துகொண்டானாதலால், பல்யானைச் செல்கெழு குட்டுவனென்றழைக்கப்பட்டான்.

இவன் வீரனாய்விளங்கியதோடு மகா ஞானியாயும் விளங்கினான். அக்காலத்துத் தமிழ்நாட்டின் ஆன்ம வுணர்ச்சியையும், வேள்விப் பெருமையையும் இவன் சரிதமொன்றாலேயே அறியலாம்.

இவனைப் 'பாலைக்கௌதமனார்' என்பவர் பதிற்றுப்பத்துள் மூன்றாம்பத்தாற் பாடினார். அதற்கு அரசன் வேண்டியதுகொண்மின் என, அவர் நானும் என்மனைவியும் வான்சேரல் வேண்டும் என்றனர். அதற்குரியவழி யாதெனப் பலபெரியோரையும் வினவினன். அவர்கள், வானகம் வேண்டுவோன் வேள்விகள் செய்யவேண்டும் என விடையிறுத்தனர். அதன்படி அவர்பொருட்டாகப் பத்துயாகம் செய்தனன். யாகமுடிவில் கௌதமனாரும் அவர் மனைவியும் உடலோடு சுவர்க்கம் புக்கனர் என்ப.

விஸ்வாமித்திரராலும் செய்யமுடியாத அரிய காரியத்தைச் செய்துமுடித்த இவ்வரசனின் பெருமையும், இதனால் தமிழ்நாட்டின்மேன்மையும் அளவிலடங்கா. இறுதியிற் றன் புரோகிதர் நெடும்பாரதாயனார் என்பவரோடு துறவுபூண்டான்.

நெடுஞ்சேரலாதன், சோழன்மணக்கிள்ளியின் மகளாகிய நற்சோணை என்பவளையும், வேளாவிக்கோமான் பதுமன் மகளையும் மணந்தனன். ஒவ்வொரு மனைவியரிடத்தும் இவ்விரு புதல்வரைப் பெற்றான். அந்நான்கு புத்திரருள் முதல்வனே நம் கதாநாயகனாகிய செங்குட்டுவன்.

செங்குட்டுவனுடன் பிறந்த மற்றைய மூவர்க்கும் முறையே இளங்கோ, நார்முடிச்சேரல், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் எனப்பெயர். நெடுஞ்சேரலாதனும், அவன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவனுமே யிவர்என்னும்படி யியற்கையாகவே குணங்களால் அமைந்திருந்தனர் செங்குட்டுவனும் இளங்கோவும். இளமையிலேயே செங்குட்டுவன் இவ்வுலகமதிக்கும் வீரனாய்த்தோன்றினன். அவ்வாறே இளங்கோவும் அவ்வுலகத்து அந்தமில் இன்பத்தை அளப்பான் போற் றோன்றினன். ஒவ்வொரு செயலிலும் முன்னவன் மணிமுடி தரிக்கும் மன்னனுதலை விளக்கினன். இளையவனோ சடைமுடி தரிக்கும் சாந்தனுதலைக் காட்டினன்.

இவர்களது தோற்றம் ஒருநாள் அவ்விதமே பலித்தது. தன் வழக்கப்படி பலதுறைகளிலும் தேர்ந்த மதிவல்லோர் பலர்சூழச் சபையில் நெடுஞ்சேரலாதன் வீற்றிருந்து அளவளாவுவானாயினன். அக்காலத்து அவனது இருபக்கத்தும் செங்குட்டுவனும் இளங்கோவும் வீற்றிருந்தனர். இவ்வாறிருக்கும் பொழுது திடீரென நிமித்திகனொருவன் எழுந்து நின்று அரசே! வாழிய நினக்குப்பின் அரசனாதற்குரியவன் இளங்கோவே. அவனிடத்தேயே அரசர்க்குரிய இலக்கணம் பலவும் அமைந்துகிடக்கின்றன என்றான்.

இதனைக்கேட்ட செங்குட்டுவன் முகம் திங்களைக்கண்ட பங்கயம் என்ன மலர்ச்சிநீங்கியது. நிமித்திகன்சொல்லையும் அதனாற்றன் றமையன்நிலையையும் அறிந்த இளங்கோ எழுந்து மிக்கசினத்துடன் நிமித்திகனைநோக்கி யாதுகூறினை? நின்னிமித்திகம் முழுதும் பழுதுபட்டதே? சபையில் எதனைக் கூறினும் நன்காராய்ந்தன்றோ சொல்லல்வேண்டும். வாய்க்கு

வந்தவா பிதற்றுதல்முறையோ? இந்நாடொன்றோ பண்ணுடும் காற்கீழ்வணங்கும் மன்னர்மன்னற்குரிய இலக்கணங்கள் என் தமையனிடத்தே அமைந்து கிடத்தலை ஏன் அறிகிலை? இதனை நீயும் பின்னர்க்காண்பாய். மேலும் இன்றிருந்து நாளை அழியும் தரணியாளும் தார்வேந்தர்க்குரிய இலக்கணம் என்னிடத்தில்லை. என்று மழியா வீட்டின்பத்தை யடைவோர்க்குரிய இலக்கணங்களே என்னிடமுள்ளன. அதனை யானும் மெய்யாக்குகின்றேன். காண்டி எனக்கூறிப் பல்லோர் குழீஇய அவ்வவையிலேயே துறவெய்தினன். இதனை,

பத்தினிக்கடவுளின் அருள்வாக்காகத்தானே தன் வரலாற்றைக் கூறுவதனால் நன்கறியலாம்.

வஞ்சிமூதூர் மணிமண்டபத்திடை
நுந்தைதாணிழ லிருந்தோய்நின்னை
அரசுவீற்றிருக்குந் திருப்பொறியுண்டென்
றுரைசெய்தவன்மே லுருத்துநோக்கி
கொங்கவிழ் நெடுந்தேர்த்தானைச்
செங்குட்டுவன்றன் செல்லல் நீங்க
பகல்செல்வாயிற் படியோர்தம்முன்
அகலிடப்பாரம் அகலிடநீங்கி
சிந்தைசெல்லாச் சேணெடுந்தூரத்து
அந்தமில்இன்பத் தரசாள் வேந்தென
என்றிறமுறைத்தனள் இமையோரிளங்கொடி

இதனைக்கேட்ட செங்குட்டுவன், தன்தம்பியின் உன்னத நினைவுக்கு வியப்பும், தன்னரசுரிமை கிடைத்ததற்கும், தம்பியின் சோதரவாஞ்சைக்கும் மகிழ்ச்சியும், அத்தகை யருமைத்

தம்பி துறவெய்திப் பிரிதற்கு வருத்தமுமே வடிவாக வீற்றி ருந்தனன். நெடுஞ்சேரலாதனும் அவ்வாறேயாயினன். இங் ஙனம் துறவெய்திய இளங்கோ அதுமுதல் 'இளங்கோவடிகள்' என்றழைக்கப்பெற்றார். தன் தமையன் வேண்டுகோட் கிணங்கிக் கருவூர்ப்புறத்தேயுள்ள குணவாயிற்கோட்டத்தில் வசித்து வருவாராயினன்.

இங்ஙனம் நெடுங்காலம் அறம் மல்க வீற்றிருந்த பெரு வீரனாகிய நெடுஞ்சேரலாதன், தன் கடைசிக்காலத்தில் சோ ழன் வேற்பஃறடக்கை பெருநற்கிள்ளி, என்பானொடு பொருது அவனையும்வீட்டித் தானும் வீந்தனன்.

அதன்மேற்றன் இருபதாவது வயதிற் செங்குட்டுவன் அரியணையேறினன். அதுமுதல் நாடெங்கும் தன்தந்தைபரப் பியபுகழை நிலைநிறுத்தினன். தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனையும், சோழன்கரிகாலனையுமே இவ னுக்கு ஒருவாறு உவமை கூறலாமன்றி, முன்னும் பின்னும் அறிவு திருவாற்றல்களிற்சிறந்த இவனுக்கு வேறெவரும் சமானமாகார். மகாவீரன்; சகலசற்குணசம்பன்னன்; கல்வி கேள்விகளிற் சிறந்தோன்; தெய்வபக்தியிற் சிறந்தோன்; வயதாற்சிறியனாயினும் அறிவாற்பெரியோன்; ஏகதாரவிரத முடையோன்; முடிவாக அரசர்க்குரிய இலக்கணங்களெல்லா வற்றிற்கும் இலக்கியம் இவனே.

அரசியல்

தன்னாட்டைத் தன் தந்தையினும் சீர்பெறஆண்டனன். இளங்கோ, நிமித்திகற்கெதிராகக் கூறியவனைத்தும் மெய்யாக் கினன். தன்னாயுளிற் பெரும்பாலும் போரிலேயே கழித்த

னன் எனினும், நாட்டின்நலம் சிறிதும் குறையாவாறு அமைத்து அரசுசெலுத்தினன் ஒவ்வொருதுறைக்கும் தனித் தனி மந்திரிகளை நியமித்தனன். அவற்றைப்பற்றிய விவரம் முழுதையும் அவர் கையிலேயே ஒப்புவித்தனன். அவர்களும் தன்னலமின்றி மன்னுயிர்க்கும் மன்னவற்கும் உறுதிபூண்ட வர்களாய் விளங்கினர். எவ்விஷயமும் அவரோடு சூழ்ந்தே செய்வான். அவருள் முக்கியமாய் விளங்கினவர், சேனைத்தலை வன் 'வில்லவன்கோதையும்' தேசவருவாய்த்தலைவன் 'அழும்பில் வேளும்' தூதுவர்தலைவன் 'சஞ்சயனுமே' யாவர். தூதரன்றி இவனதுஒற்றர்கள் நாடெங்கும் நிறைந்திருந்தனர். ஐம்பெருங் குழுவும், எண்பேராயமும்தவிர, கருமவினைஞர், கணக்கியல் வினைஞர், தருமவினைஞர், தந்திரவினைஞர், பெருங்கணி என்றித் திறத்தோர் பலவகுப்பினரால் நாட்டை நன்குபுரந்தனன்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங் கைம்புலத்தாரோம்பும்" குடிகட்கு ஐந்துபங்குபோகத் தான் ஆறில் ஒரு பங்கையே கொண்டு அதனையும் அவர்நன்மைக்கே செலவழித்து வந்தனன். அரசுரிமையைக் குடிகட்காவனசெய்ய ஏற்பட்ட சேவகம் என்றே கருதினான். வையகம் முழுமையும் வறிஞனோம்புமோர் செய்யெனக்காத்தினி தரசுசெய்தனன். இவன் அரசுரிமையை எவ்வாறு கருதினன் என்பதை ஆரியப் படைதந்த பாண்டியன் நெடுஞ்செழியன், கோவலனைக்கொல் வித்ததாற் செங்கோன்மை பிழைப்புண்டது என்றறிந்தவுடன், அரசு கட்டிலிலேயே இறந்துவீழ்ந்தான் என்றதைக்கேட்ட வுடன் அவன் கூறிய கூற்றுக்களாலே தெளிவாம்.

எம்மோ ரன்ன வேந்தற் கிற்றெனச்
செம்மையி னிகந்தசொற் செவிப்புலம் படாமுன்
உயிர்பதிப் பெயர்ந்தமை யுறுக வீங்கென
வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது
மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லை

இதிலிருந்து இவன் செங்கோன்மையை எவ்வளவு உயர்வாகக் கருதினனென்பதையும், அதில் எவ்வளவு ஜாக்கிரதையுடனிருந்தானென்பதையும், அங்ஙனம் செங்கோலைத் தன்னுயிராகக்கொண்ட நெடுஞ்செழியனை எவ்வாறு கருதுகின்றனென்பதையும், அவனது அறிவின்றிறத்தையும் நன்கறியலாம்.

போர்கள்

இவன் அரியணை ஏறிய முதலிருந்து இறுதிவரை இணையிலாவீரனாதலை விளக்கியிருக்கின்றான். இவன் செய்த போர்களில் இப்பொழுது நமக்குத்தெரிவன ஆறே. அவை,

1. முதல் வடநாட்டுப்போர்
2. கொங்கர் செங்களத்துப்போர்
3. கடலிடைப்போர்
4. மோகூர்ப்போர்
5. ஒன்பது சோழருடன்போர்
6. இரண்டாவது வடநாட்டுப்போர்

1. முதல் வடநாட்டுப்போர்

நெடுஞ்சேரலாதன், வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளியொடு பொருது வீழ்ந்தபொழுதே செங்குட்டுவன் தாயாகிய நற்சோணை என்பவளும் தன் கணவனுடன் உயிர்நீத்தனள். அக்காலத்தியற்கை யதுவாகலின்,

காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்காது
இன்னுயிர் ஈவர் ஈயா ராயின்
நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்

என்றதூஉம் அவ்வறக்கற்பின் இயல்பை வலியுறுத்தும். அவ்வாறு, காதலனொடிறக்கும் கனங்குழையாரும் கணவனிறந்ததைப் பிறர்வாயாற் கேட்குமுன்பே மனவுணர்ச்சியினாற்றமையால் உயிர்நீப்பார் தலையாயாரெனவும், பிறர் கூறிக்கேட்டவக்கணமே உயிர்நீப்பார் இடையாயார் எனவும், பின் உடன் கட்டையேறுவோர் கடையாயாரெனவும் முத்திறப்படுவர்.

இவ்வாறு உயிர்நீத்த தன்தாயின் பத்தினித் தன்மைக்காக, அவள்போற் படிமஞ்செய்து பூசித்தற்கு விரும்பினான் செங்குட்டுவன். அவ்வாறு படிமஞ்செய்தற்குக் கல்லெடுத்தற்குரிய இடம் எதுவென மதிவல்லோரை வினாவினன். அவர்களும், பத்தினிகட்கும் கடவுளர்க்கும் படிமஞ் செய்ய விரும்புவோர் அவற்றிற்குரிய கல்லை பொதியிலினின்றாவது இமயத்தினின்றாவது எடுக்கலாம். பொதியிலிற் கல்லெடுப்பின் காவிரியிலும், இமயத்திற் கல்லெடுப்பின் கங்கையினும் நீர்ப்படை செய்தல் வேண்டும். ஆதலின், அரசே! எற்றது நோக்கிச்செய்க என்றனர். அதுகேட்ட அரசன் பொதியிலிற் கல்

லெடுத்தல் நம் போன்ற வீரர்கட்கு வியத்தற்குரிய செய்கையில்லை. ஆதலின் இமயத்தினின்று கற்கொணர்தலே ஏற்றது எனக் கூறி வடநாட்டியாத்திரைக்கு வேண்டியவற்றைச் சித்தம் செய்யுமாறு கட்டளையிட்டனன். யாவும் விரைவில் நடந்தன. பின் நல்லதொரு சுபமுகூர்த்தத்தில் நாற்படையும் சூழ வடநாடு சென்றனன்.

யாதொரு தடையுமின்றி வடநாட்டை யடைந்து இமையத்திற் கல்லெடுப்பித்து கங்கையில் முறைப்படி நீர்ப்படையும் செய்தனன். இவ்வமயத்தில், இவன் வரவையுணர்ந்த ஆரியவரசர் பலர் வயதிற்சிறியன்; மேலும் தனியன் என நினைந்து ஒருங்கு பொரவெழுந்தனர். உடனே சிறிதுந் தாழாது எதிர்த்துவந்த ஆரியவரசர் பலரையும் தானொரு தனியனாய் நின்றே வென்று தனதுவீரத்தையும், தமிழ்நாட்டின் பெருமையையும் நிலைநாட்டினன். இவனது போர்திறத்துக் காற்றாராய்ப் பல ஆரியமன்னர் அஞ்சியோடி யொளித்தனர்; எஞ்சிய சிலர் நட்பாளராயினர். இங்ஙனம் தாய்க்குக் கல்லெடுக்கச்சென்று தன் இசைபரப்பி மீண்டனன். இதனை,

கங்கைப் பேர்யாற்றுக் கடும்புன னீத்தம்
எங்கோ மகளை ஆட்டிய வந்நாள்
ஆரிய மன்னரீ ரைஞ்ஞூற் றுவர்க்கு
ஒருநீ யாகிய செருவெங் கோலம்
கண்விழித்துக் கொண்டது கடுங்கட் கூற்றம்

என்ற இளங்கோவடிகள் கூற்றால் அறியலாம்.

2. கொங்கர் செங்களத்துப் போர்

அக்காலத்திலிருந்த சோழபாண்டியரும், மற்றும் சிலசில சிற்றரசரும் இவன் பெருமையுணராராய் இகழ்ந்தமையாற் சினங்கொண்டு பொரவெழுந்தனன். கொங்கர் செங்களத்தில் அனைவரையும் முறியடித்தனன். இதனை,

நும்போல் வேந்தர் நும்மோ டிகலிக்
கொங்கர் செங்களத்துக் கொடுவரிக் கயற்கொடி
பகைப் புறத்துத் தந்தன ராங்கவை
திசைமுக வேழத்தின் செவியகம் புக்கன

என்ற சிலப்பதிகாரவடிகளால் அறியலாம்.

3. கடலிடைப்போர்

கடலைத் தமக்கரணாகக் கொண்டமையாற் றருக்கித் தீங்கியற்றினாரை, இவன்றந்தை மரக்கலங்களாற் கடலைக்கடந்து சென்று அடக்கித் தன்னடிப்படுத்தினன் என்று முன்னமே கூறியுள்ளோம். அவ்வாறு, நெடுஞ்சேரலாதனால் வெல்லப் பட்ட அவர்கள் அவன்இறந்தவுடன் மீண்டும் பழையபடி செருக்குக்கொண்டு செங்குட்டுவனை மதியாராயினர்.

அதுகண்ட செங்குட்டுவன் மிகச்சினந்து, 'அறிவிலிகள் கடலைப் பெரியதொரு அரண்என்று நினைந்தல்லவோ தருக்குகின்றனர்' எந்தைக்கு அவ்வரண் எவ்வாறாயிற்று? என்பதையும் மறந்தனர் போலும்! எனக்கூறி மரக்கலப்படையைச் சித்தஞ்செய்ய வேவினன். உடனே வேற்படைகள் ஏற்றிய கப்பல்கள் பல சித்தமாயின. அவற்றின் உதவியாற் கடலிற் சென்று அவரோடு பொருதனன். அப்போரில், வலியழிந்த

அவர் தந்தையினும் இவன் பெருவீரனுதலை யுணர்ந்து பணிந்தனர். இவ்வாறு கடலிடைத்தீவும் இவன் வசமாயது. அது முதல் இவன் 'கடலோட்டிய வேல்கெழுகுட்டுவன்' என்ற அடைமொழிகொடுத்து அழைக்கப்பெற்ருன். இதனை,

படைநில விலங்குங் கடன்மரு டானை
மட்டவிழ் தெரியன் மறப்போர்க் குட்டுவன்
பொருமுரண் பொறுஅது விலங்குசினஞ் சிறந்து
செருச்செய் முன்பொடு முன்றின் முற்றி
ஓங்கு திறல்பௌவ நீங்க வோட்டிய
நீர்மா ணெஃக நிறுத்துச் சென்றழுந்த
கூர்மத னழியரோ நெஞ்சே.

என்ற அகநானூற்றுச் செய்யுளால் அறியலாம்.

4. மோகூர்ப்போர்

பாண்டியனது படைத்தலைவனுகிய பழயன் என்பவன் மோகூர் என்ற ஊருக்கு உரியவனுதலால் 'பழயன்மோகூர்' என்று அழைக்கப் பெற்ருன். இவன் மகாவீரன்; பாண்டியர்க்குப் பல போரில் வெற்றிவிளைத்தவன்; மோரியவரசன் ஒருவன், (சமுத்திரகுப்த னென்பது நூலாராய்ச்சியில் வல்லோர் துணிபு.) தன் வன்மையால் இந்தியா முழுமையும் திக்விஜயம் செய்து அடிப்படுத்தித் தென்னுட்டில் பிரவேசித்த பொழுது, எதிரற்ற அவனை பொதியமலைக்கருகே எதிர்த்துப் பாண்டியர்க்குப் பொதுவாக தமிழ்நாட்டிற்கே கீர்த்தியை விளைத்தவன். தமிழ்நாட்டின் ஸ்வதந்தரத்தைக் காத்தவன்.

ஆனால், தன் வீரமிகுதியால் பிறரை மதியாது செருக்குக் கொண்டிருந்தான். செங்குட்டுவனுக்கு நட்பரசனாகிய அறுகை யென்பானுக்கு இப்பழையன் பகைவன். ஆதலால், அவனுக்கு உதவியாக இவனை அடக்க நினைத்தான் செங்குட்டுவன். மோகூரும் வீரனாதலால் செங்குட்டுவனை மதித்திலன். இருவர்க்கும் பெரும்போர் மூண்டது. அப்போரில் பழயனைக் கொன்றனன். பழயனும் இறக்கும்வரை செங்குட்டுவன் சேனையைச் சின்னபின்னங்கண்டு முன்வைத்தகாலைப் பின்வை யாது கௌரவமாகவே இறந்தான். இவ்விதமாக மோகூர்ப் போரிலும் வெற்றிபூண்டான்.

5. ஒன்பது சோழருடன் போர்

இச் செங்குட்டுவன் சோழன்மணக்கிள்ளியின் மகள் வயிற்றுப் பேறாதலால், அவ்வமிசத்தாரிடத்து இவன் அன்பு பூண்டிருந்தான் என்று சொல்வது மிகையாம். மணக்கிள்ளி யினது தலைநகர் உறையூராம். ஆதலால், அவர்கள் உறையூர்ச் சோழர் எனப்படுவார். இவரது தாயாதிகள் காவிரிப்பூம் பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தனர். இவ் விருவர்க்கும் அடிக்கடி சண்டைகள் நிகழும். வன்மைமிக்க வன்பால் மற்றையது அடங்கியிருக்கும். ஒரு சமயம் உறை யூர்ச்சோழர் மேலாக விளங்குவார். இன்னொருசமயம் புகார்ச் சோழர் விளங்குவர்.

மணக்கிள்ளிக்குப் பின் அவன்மகன் நெடுங்கிள்ளி ஆண்டுவந்தனன். அந்நெடுங்கிள்ளியும் சின்னாள் ஆண்டபின் தன்னொருமகன் பெருங்கிள்ளி யென்பவனைக் கவனிப்பா ரின்றி விட்டுவிட்டு இறந்தனன்.

இதுவே தக்கசமயமெனக் கண்ட புகார்ச்சோழரும் மற்றுமவர் ஞாதியருமாகிய ஒன்பது சோழர்கள் இவ்வரசை அபகரிக்க ஒருங்கு திரண்டெழுந்தனர். பாவம் வயதிலும், அனுபவத்திலும், மிகச் சிறியன் பெருங்கிள்ளி என் செய்வன். ஒன்பது சோழர்க்கு எதிர்நிற்கலாற்றாது தியங்கிக்கொண்டிருந்தனன்.

இந்த ஆபத்தான சமயத்தில் இவனது நல்வேளையால் சோழர்க்கு உற்ற நண்பினனாகிய கோவலூர்ச் சிற்றரசன் திருமுடிக்காரி என்பவன் இவனுக்கு உதவியாக வந்தான். அதன்மேல் ஒன்பது சோழர்களுடைய சூழ்ச்சி பலிக்கவில்லை. பயன்பெறாது மீண்டனர்.

ஆனால், இந்த அதிருஷ்டமும் நெடுநாள் நிற்கவில்லை. சின்னாளில் அத்திருமுடிக்காரியும் இறந்துபட்டனன். இப்பொழுது பெருங்கிள்ளி உதவிசெய்வார் ஒருவரும் இலனாயினான். இங்ஙனம் உதவியற்றது கண்ட அச்சோழர் மீட்டும் வந்து இவனைத்துரத்திவிட்டு அரசைக் கைப்பற்றிக் கொண்டனர். பெருங்கிள்ளியும் தன் உயிர்க்குத் தப்பியோடி முன்னம் தனக்குதவிசெய்த திருமுடிக்காரியின் மகனாகிய திருக்கண்ணனால் உபசரிக்கப்பட்டு முள்ளூர்மலையில் இருந்தனன்.

இதுவரை வேறுபோர்களிற் றன்சிந்தையைச் செலுத்தியிருந்ததனால், தன் அம்மான்சேயாகிய பெருங்கிள்ளி யென்பவனைப்பற்றிய விஷயங்களைச் செங்குட்டுவன் அறிந்திலன். இவ்வாறு பெருங்கிள்ளி நாட்டைவிட்டுத் துரத்தப்பட்ட பின்னரே யாவும் அறிந்தான். இதையறிந்ததும் அவனகத்

தெழுந்த வெகுளியை இற்றெனை யாவராற் கூறவியலும்? தன் அம்மான்சேயின் நிலையை ஆராய்ந்தான்; தான் ஒருவனே அவனுக்கு உதவியென்பதையும் அறிந்தான்; தானும் கவனியாதிருந்ததைப்பற்றி மனங்கசிந்தான். அநியாயமாகத் தாயாதியராற்றுரத்தப்பட்டபொழுது அவனது உதவியற்ற நிலைமைக்கு மிகவும் வருந்தினான். தான் உயிரோடிருந்தும் சமயத்துப்பயனின்றாகியதே என்றெண்ணியெண்ணி வருந்தினன்.

இவ்வாறு வருத்தமெல்லாம் அச்சோழர்மேல் ஊழித்தீயெனக் கோபமாய்த் திரும்பியது; உடனே சிறிதுந்தாழாது போர்க்கோலம் பூண்டனன். நேரிவாயிலிடத்தே ஒன்பது சோழரொடுங் கலந்தனன். செங்குட்டுவனைக்கண்ட சோழரொன்பதின்மரும் நிலைகுலைந்தனர். சின்னாழிகையும் போர்க்களத்தில் நிற்கவியலாது புறமிட்டனர். வீரத்தையும் மானத்தையும் களத்தேபோட்டு அச்சம் பிடர்பிடித்துந்த ஓடினர். இவ்வாறு முறியடிக்கப்பட்டவருள் முக்கியமானவர் சோழன் கரிகாலன் மக்களாகிய கிள்ளிவளவனும் நலங்கிள்ளியுமாவர்.

ஒன்பதுசோழரையும் ஒருங்கே முறியடித்தோட்டியபின் தன் அம்மான்சேய் பெருங்கிள்ளியை முன்போற் பட்டத்தில் நிறுவினான். வருத்தமும் கோபமுந்தீர்ந்தான். அதன்பின் பெருங்கிள்ளிக் காவனபலவும் செய்து அவனிடம் விடைபெற்றுமீண்டான்.

இங்ஙனம் பிறருதவியை எதிர்பார்த்துநின்ற இப்பெருங் கிள்ளியே, செங்குட்டுவன் கைவிசேடத்தால் பிற்காலத்தில் தன்போன்ற பலர்க்குதவிசெய்யவல்ல பெருவீரனாய்ப், பேரரசனாய், "இராயசூயம்வேட்ட பெருநற்கிள்ளி" யென்றியாவரும் புகழ விளங்கினான்.

இந்நேரிவாயிற் சோழரை முறியடித்தபொழுது செங் குட்டுவனுக்கு வயது நாற்பத்தைந்து எனக் கருதப்படுகின் றது. நாடுமுழுதும் இவன்பெயர் சொல்லவே நடுங்கலாயிற்று. கொடுங்கோன்மையாலன்று. பகைமைக்குணமுடையார் யாவ ரும் நடுங்கலாயினர். தனக்காகச் செய்யும்போர்களே இப் பொழுதில்லை. நட்பினர்க்கும், உறவினர்க்கும், நல்லோர்க்கும் உதவியாகப் பகைவரையும், துஷ்டரையும் தண்டிக்கும் க்ஷத் திரியதர்மத்தைப் பூண்டிருந்தான். சோழன் பெருங்கிள்ளிக் காகச் செய்த போர்த்திறனை,

> மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்த
> ஒத்த பண்பின ரொன்பது மன்னர்
> இளவரசு பொறாஅர் ஏவல் கேளார்
> வளநா டழிக்கும் மாண்பின ராகலின்
> ஒன்பது குடையு மொருபக லழித்தவன்
> பொன்புனை திகிரி யொருவழிப் படுத்தோய்

என்னும், இவ்வடிகளாலும் அறியலாம்.

இதன்பின் கடற்கரைக்கண்ணுள்ள வியலூரையும், கொடு கூரையும், சோழபாண்டியரை எதிர்த்தெறிந்தபோர்களையும், இடும்பிற்புறம் முதலிய இடங்களிற்செய்த போர்களையும் விரிப் பின் அப்போர்த்திறங்களே ஒருபெரிய சரிதம்ஆகும். ஆதலின், இவன் கடைசியாகச்செய்த ஒரு பெரும்போரையும் அதுபற் றிய மாப்பெருங்கதையையும், கூறுதும்.

கண்ணகி மலைநாடுவருதல்

தன் கணவன் கோவலனை, அறியாதுகொன்ற பாண்டியன் நெடுஞ்செழியன் உண்மையுணர்ந்தவுடன் இறந்தும் சினம் நீங்கப் பெற்றிலளாய்க் கண்ணீராடிய கதிரிளவனமுலை திண்ணி திற்றிருகிப் பார்ப்பார், அறவோர், பசுப்பத்தினிப்பெண்டிர், மூத்தோர், குழவி யென்றிவரைவிட்டுத் தீத்திறத்தார் பக்கமே சேர்க்கவெனக்கூறிக் காவலன்பேரூர் கனையெரியூட்டித் தன் மறக்கற்பை நிலைநாட்டினள்.

நாட்டியும் சினம்தீர்ந்திலளாய் நிற்றல்கண்ட அவ்வூர்க் காவற்றெய்வதம் அவள்புறத்தே வந்துநின்று மாபெரும் பத்தினி! நான்சொல்வதைக்கேள் என்றது. உடனேகண்ணகி, யாரைநீ? என்றனள். அம்மா! நான் இவ்வூர்காக்கும் காளியாவேன்; நீ யுன் சினந்தவிர்ந்து நான் சொல்வதைக்கேள். பாண்டியமரபினர் செங்கோன்மையைத் தம் உயிரெனக்கருதுவோர். இந் நெடுஞ்செழியனும் அத்தகையனே. நின் கணவனைக் கொன்றனெனக் கருதி அவன் இறந்தொழிதற்குக் காரணமான சினங்கொண்டனை; அச்சினம் நீங்காமல் இவ்வூரையும் அழித்தனை; இனிமேலாவது சினம் நீங்குதி; ஊழ்வினை வந்துன் கணவனையுண்டதன்றி வேறெவரும் காரணமாகார். அவ்வுண்மை வரலாற்றினைக் கூறுவேன் கேள். என்று முன்னைப் பிறப்பை யுணர்த்தத் தொடங்கியது.

முன்னம் சிங்கபுரம் கபிலபுரம் என்ற இரண்டு நகரங்கள் இருந்தன. அவ்விரண்டையும் தாயாதியர் இருவர் ஆண்டு வந்தனர். அவ்விருவர்க்குள் தாயாதிப்பகைமையால் அடிக்

கடி போர்நிகழ்ந்து வந்தது. ஆதலால் ஒருவர்க்கொருவர் மிக்க வைரங்கொண்டிருந்தனர். இப்பிறப்பில் உன் கணவனாய்த் தோன்றிய 'பரதன்' என் ப வ ன் சிங்கபுரத்தரசற்கு மிக்க நண்பினன். இவ்வாறிருக்க, கபிலபுரத்திலிருந்து சங்கமன் என்னும் வணிகன் ஒருவன் வியாபாரத்தின் பொருட்டாக சிங்கபுரம்வந்து சேர்ந்தனன். ஒரு பாவமும் அறியாத அச் சங்கமனை, கபிலபுரத்தரசன் குமரனது ஒற்றன் எனத் தன்னட் பரசன் வசுவென்பவனுக்குக் கூறிக் கொலைசெய்வித்தனன் பரதன். இவ்விதம் அநியாயமாய்க் கொலை செய்யப்பட்ட சங்கமன் மனைவி நீலியென்பாள், பலவாறாகப் பிரலாபித்து பதின்மூன்றுநாள் உண்ணுதலைந்து பதினான்காம்நாள் ஓர் மலை மேலேறி "என்னை யிப்பிறப்பில் இத்துன்பங்கண்டோர் மறு பிறப்பில் தாமும் இதனையடையக்கடவர்" என்று சபித்து விட்டு இறந்தாள். கற்பின் மிகுந்த பத்தினியிட்ட சாபமாத லின் பலித்தது. அப்பரதனே இக்கோவலன். ஆதலின் அவன் வினையை அவனே அனுபவித்தான் எனக்கூறியது.

இவ்வாறு கோவலன் முன்னை வரலாறு கூறியபின், கண் ணகியை நோக்கி நீ வையைக்கரைவழியே மலைநாடு சென்று இற்றைக்குப் பதினான்காநாள் நின் கணவனைக் கண்டு அவனொ டும் சுவர்க்கம் புகுவை எனக்கூறியகன்றது.

அதன்மேல் கண்ணகி, அம்மதுரா தெய்வத்தின் சொற் படியே வையைக்கரைவழியே மேற்றிசை நோக்கிச் சென்று மலைநாடடைந்து திருச்செங்குன்றென்னு மலைமீதேறி வேங் கைமரமொன்றின் கீழ் நின்றனள். கடைசியில் கோவலன், இறந்த பதினான்காம்நாள் தெய்வவடிவத்தோடு விமானமீது

தோன்றிக் கண்ணகியைத் தன்னொடு விமானத்தேற்றிச் சென்றனன். கண்ணகியின் கற்பிற்கு வியந்த தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.

இவ்வாறு கண்ணகி வேங்கைமர நிழலில் வந்துநின்றதும், விமானந்தோன்றியதும், கண்ணகி விமானமேறிச் சென்றதும் கண்ட அம்மலைக்குறவர் வியப்புற்று இவள் தெய்வத்திற முடையாள் ஆதலின், இவள்பொருட்டுக் குரவையாடுதல் அவசியம் எனக் குறவர் பலரும் குரவைக்கூத்தாடினர்.

செங்குட்டுவன் கண்ணகிக்கு படிமம் செய்ய நினைத்தல்

குன்றக்குறவர் செய்கையிவ்வாறிருக்கச், செங்குட்டுவன் மலைவளங்காண நினைந்தவனாய் அம்மலைக்கருகுள்ள பேரியாற்றங்கரையைப் பரிவாரங்களுடன் வந்தடைந்தான். இவன் வருகையை அறிந்த குறவர்கள் இச்செய்தியை அவனுக்கறிவிக்க விரும்பினர். தங்கள் அரசனாதலின் அரசனைக் காணவேண்டிய முறைப்படி,

யானைவெண் கோடு மகிலின் குப்பையும்
மான்மயிர்க் கவரியும் மதுவின் குடங்களும்
சந்தனக் குறையும் சிந்துரக்கட்டியும்
அஞ்சனத் திரளும் அணியரி தாரமும்
ஏல வல்லியும் இருங்களி வல்லியும்
கூவை நீறும் கொழுங்கொடிக் கவலையும்
தெங்கின் பழனுந் தேமாங் கனியும்
பைங்கொடிப் படலையும் பலவின் பழங்களும்

காயமுங் கரும்பும் பூமலி கொடியும்
கொழுந்தாட் கமுகின் செழுங்குலைத் தாறும்
பெருங்குலை வாழையின் இருங்கனித் தாறும்
ஆளியின் அணங்கும் அரியின் குருளையும்
வாள்வரிப் பறழும் மதகரிக் களபமும்
குரங்கின் குட்டியும் குடாவடி யுளியமும்
வரையாடு வருடையும் மடமான் மறியும்
காசறைக் கருவும் மாசறு நகுலமும்
பீலி மஞ்ஞையும் நாவியின் பிள்ளையும்
கானக் கோழியும் தேமொழிக் கிள்ளையும்

ஆதிய பல மலைபடுபொருள்களைக் கையுறையாகக்கொண்டு சென்று கண்டனர். இவற்றை யெல்லாம் அவன் திருமுன்பு வைத்து, அண்ணல்! வில்லேறுயர்த்த சொல்லருந் திறற்றா யோய் வாழிய! அரசர்க்கரசே வாழிய! சேரநாடாளும் செம்மால் வாழிய! நுமக்குரித்தாகிய யாம் வாழும் இம்மலையின் கணே, ஓர் வேங்கைமரநீழலில் தெய்வமாதுபோல்வா ளொருத்தி துன்பமே யொருவடிவுபெற்றதென்ன வந்து நின்றனள். உடனே தேவர்கள்பலரும் சூழத் தெய்வசரீரத்துடன் வந்த அவள்கணவன் அவளைத் தன் விமானத்தேற்றிக் கொண்டு சுவர்க்கம்புக்கனன். இத் தெய்வநிகழ்ச்சிகளை எம் கண்ணாரக் கண்டேம். தங்கள் திருமுன் விண்ணப்பிப்பதற்கே வந்தேம் என்றனர்.

இதனைக்கேட்டு, வியப்பே வடிவாய்வீற்றிருந்த செங்குட்டுவனை அப்பொழுது அவன்சபையை அலங்கரித்துக்கொண்டிருந்த 'சாத்தனர்' என்னும் புலவர்பெருமான் நோக்கி அரசே!

இவர்கள் சொல்வன யாவும் உண்மையே; அங்ஙனம் வந்து நின்றுள் யாவளென்பதையும் அவளது சரிதத்தையும் அறிவேன்; அதனைக் கேட்பாய் என்று சொல்லத் தொடங்கினர்.

ஆதியோடந்தமாகக் கதையைக்கூறிப் பத்தினிப்பெண்டிரின் பெருமைகளையும் விளங்கக்கூறினர். அதனைக்கேட்ட செங்குட்டுவன் பாண்டியனது செங்கோன்மையை வியந்து தன்னருகிருந்த தன் தேவியைநோக்கி நங்காய்! தன் நாதனிறந்த அக்கணமே மனவொற்றுமையுணர்ச்சியால் உயிர்நீத்த பாண்டியன்தேவி, தன் கணவனைக்கொன்றதற்காக மதுரையையழித்து ஈண்டுப்போந்த கண்ணகியென்றிருவருள் சிறந்தவர் யாவர்? என வினவ அவ்விருவர் போலும் கற்பின்மிகுந்தவேண்மாள் என்பவள், தன் கணவன் இறந்தபொழுதே தானும் வானமடைந்த பாண்டியன் மாதேவி அவ்வானகத்தே பெருந்திருவுறுக. வேற்றுநாட்டாளாயினும் நம்நாடு நோக்கிவந்த பத்தினிக்கடவுளை நாம்போற்றி வழிபடக்கடவேம் எனவுரைத்தனள்.

அதுகேட்ட செங்குட்டுவன் தன்மனைவி விரும்பியவாறே செய்தற்கு யாதுசெய்யவேண்டும்? என அமைச்சரைநோக்க அவர்கள் பொதியிலினின்றுவது இமயத்தினின்றுவது கற்கொணர்ந்து பிரதிட்டை செய்யவேண்டும் என்று கூறினர்.

அதற்குச் செங்குட்டுவன் தாய்க்கெடுப்பித்ததுபோல் இப்பத்தினிக் கடவுட்கும் இமயத்தினின்றும் கற்கொணர்தலே எம்போல்வீரர்க் கேற்புடைத்தாம். அன்றியும் ஆரிய அரசரான கனகனும் விஜயனும் தம்போல்வார் பலருடன் கூடித் தமிழ்நாட்டரசரை இகழ்ந்துளார். ஆதலின், அவர்கள்

செருக்கையும் அடக்கிவரல்வேண்டும்; ஆதலின் வடநாட்டி யாத்திரைக்கு வேண்டுவன செய்க; நமது சேனைகளைச் சித்தப் படுத்தி முன்னே அனுப்புக என்றனன்.

அதனைக்கேட்ட வில்லவன்கோதை அரசனைவணங்கி மன் னர்மன்ன! தேவரீர் பத்தினிக்கடவுட்குக் கற்கொணரக் கருதியே வடநாடு செல்லுதலால், தமது வருகையை வடநாட் டரசர் அறியும் வண்ணம் "வில்கயல்புலி" என்னுமிவற்றை இலச்சினையாகவுடைய தமது திருமுகத்தை முன்னே அனுப் புதல்வேண்டும் என்றனன். உடனே "அழும்பில்வேள்" என்ற அமைச்சன, வேந்தர் வேந்தே! இவ்விந்தியநாட்டில் வேந்தரா யுள்ளா ரனைவருடைய ஒற்றர்களும் இவ்வஞ்சிமா நகரத்திருக் கின்றனர்; ஆதலின், தங்கள் வடநாட்டியாத்திரையை அவர்க் கறிவிக்க அவ்வொற்றர்களே அமையும் எனக்கூறச் செங்குட்டு வனும் அதற்குடம்பட்டனன்.

வடநாட்டி யாத்திரை

உடனே வஞ்சியில் செங்குட்டுவனது வடநாட்டி யாத் திரையைப்பற்றியும்,பணியாதாரடையும் துன்பத்தைப்பற்றியும்

"வாழ்க எங்கோ மன்னவர் பெருந்தகை
ஊழிதோ றூழி யுலகங் காக்கென
விற்றலைக் கொண்ட வியன்பே ரிமயத்தோர்
கற்கொண்டு பெயருமெங் காவல னாதலின்
வடதிசை மருங்கின் மன்னவ ரெல்லாம்
இடுதிறை கொண்டுவந் தெதிரீ ராயின்
கடற்கடம் பெறிந்த கடும்போர் வார்த்தையும்
விடர்ச்சிலை பொறித்த வியன்பெரு வார்த்தையும்

கேட்டு வாழுமின் கேளீ ராயின்
தோட்டுணை துறக்குந் துறவொடு வாழுமின்
தாழ்கழன் மன்னன் றன்றிரு மேனி
வாழ்க சேனைமுகம்,, என்று பறையறையப்பட்டது.

பின்னர் யாத்திரைக்குரிய நல்வேளை குறிக்கும்படியாக சோதிட நூல்வல்லானிடங்கூற, நிமித்திகம்வல்ல மௌத்திகன் வாழ்த்தி அரசே! நின் வெற்றிக்குரிய நல்வேளை இது பொழுதே என்றனன். செங்குட்டுவன் அந்நன்முகூர்த்தத்தில் தனதுவாளையும் குடையையும் நாட்கோள் செய்வித்தனன். அதுகேட்டுச் சேனைகள் ஆரவாரித்தன; சங்கங்கள்முழங்கின; நாடுமுழுதும் வாழ்த்துக்கூறின. இவ்வளவு சிறப்புடன்வாளும் குடையும் பட்டத்துயானைமேலேற்றப்பட்டு வஞ்சிநகர்ப்புறத்தேயுள்ள கோட்டையிற் கொண்டுபோய் வைக்கப்பட்டன.

மறுநாட்காலையில் செங்குட்டுவன், தான் செய்கடன்களை முடித்துக்கொண்டு தான்புறப்படும் நல்வேளை அறிந்து தன் வழிபடுகடவுளாகிய சந்திரமோலிப் பெருமானை வணங்கி அவரது பிரசாதங்களைத் திருமுடியிலேற்றுக்கொண்டு அந்தணர்களையும் வணங்கித் தனது பட்டத்துயானைமீதேறினன். அப்போழ்தத்து ஆடகமாடத்தறிதுயிலமலனது பிரசாதத்தைச் சிலர் கொண்டுவந்துகொடுப்ப அதனையும் வணங்கியேற்று கொற்றப்புயங்களிற்கொண்டான். அதன்மேல் வாழ்த்தொலி பின்னாக படையொலியும் வடநாடும் முன்னாகச்சென்றனன் நாற்படைகளும் இவையிவை யின்னபண்டமென்றெழுதியிட்ட பண்டநிறைத்த நூற்றுக்கணக்கான வண்டிகளும், விகடர்குழுவும், நாடகமகளிரின் நலங்கிளர்தொகுதியும் கடல்கிளர்ந்தென்னக் காவலனுடன்சென்றன.

இவ்வாறு வழிக்கொண்டு சின்னாளில் நீலகிரியை அடைந்தனன். அங்குப் பாடிவீடுசெய்து இளைப்பாறும்போழ்து, தூதர்தலைவன் சஞ்சயனென்பான் போந்து வாயில்காவலனாற் றன் வரவறிவித்து அரசனாணையாற்புகுந்து வணங்கி அரசே! தங்கள் வடநாட்டு வரவையறிந்த தங்கள் நட்பரசராகிய நூற்றுவர் கன்னர் பத்தினிக்கடவுட் படிமஞ்செய்யச் சித்தமாயிருக்கின்றனர் என்றறிவித்தனர் என்றான். அதற்குச் செங்குட்டுவன் யாம் பத்தினிக்கல் ஒன்றிற்காகமட்டும் வடநாடு செல்லவில்லை, ஆரியவரசரை அடக்கவும் கருதிச்செல்கின்றோமாதலின், நீ நின்பரிவாரங்களுடன் முன்னர்ச்சென்று கன்னரைக் கங்கைகடப்பதற் காவனசெய்யுமாறு அவர்களிடம் அறிவிப்பை என்றனன். சஞ்சயனும் அக்கட்டளையைச் சிரமேற்றாங்கி வடநாடுசென்றனன்.

அதன்பின் செங்குட்டுவன் நீலகிரியினின்றும் புறப்பட்டு நேரே கங்கைக்கரையையடைந்து, சஞ்சயனாற் றன்கட்டளையை முன்னமேயறிந்து காத்துக்கொண்டிருந்த நூற்றுவர் கன்னருதவியால் கங்கையாற்றைக்கடந்தனன்.

போர்

கங்கையைக்கடந்து பகைவர்நாட்டை நெருங்கவும் அதனை அறிந்த அந்நாட்டரசரான கனகவிஜயர் தம் நட்பரசருடன் கூடிப் போர்க்கெழுந்தனர். இதனை ஏற்கெனவே எதிர்பார்த்த செங்குட்டுவன்சேனை அலைகடலென்ன ஆரவாரித்தது; இருதிறப்படைகளும் 'குயிலாலுவம்' என்றவிடத்திற் கைகலந்தன. போர்க்கடுமையைக் கண்டோர் அனைவரும் தேவாசுர யுத்தமோ என அஞ்சியொதுங்கினர். சின்னாழிகையில் அக்

களம் இரத்தவாறுகள் பலஓடப்பெற்றது. அந்நதியின் இரு கரையென்னுமாறு முறிந்ததேர்களும், விழுந்தயானைகளும், அழிந்தபரிகளும், உருண்டகாலாட்களுமே கரைசெய்தன; எங்கும் பிணக்காடாயின; ஆரியரும் வீரத்துடன்பொருதனர்; வாட்படையும் வேற்படையுமேகொண்ட தமிழரை விற்படையாற் கொன்றுவந்தனர். தமிழ்வீரரோ தம் கைவாளின் ஒரு வீச்சுக்கு ஒன்பதாரியர் தலைகளையுருட்டினர். விற்படையாற்றம் தலைபோயிடினும், தம்தலையைச் சட்டெனக்கரத்திற்றுங்கிக குறிவைத்தெய்தவன் றலையைத் தன்றலையாலெறிந்து கைகள் வாட்படைதாங்கும் வன்மைபெறும்வரை எதிரிகளை வீட்டியேவீழ்வர். என்னே! யிவர்கள்மறம். இவ்வாறு தமிழ் வீரரிற் சிலரும் ஆரியரிற் பெரும்பான்மையோரும் அக்களத் தொழிந்தனர்; கழுகுகள்பந்தரிட்டன; கூகைகள் கூயின; அலகைக்திரள் ஆடின; நரிகள் ஊளையிட்டன. பேய்கள் படுகளத்து வீழ்ந்த வீரர்தலைகளை எடுத்துக் கண்டொட்டுண்டு தண்டாக்களிப்பின், பாரத யுத்தத்திற்குப்பின் பன்னெடுநாள் உணவின்றுயதைத் தீர்த்தான் வாழ்க! என வாழ்த்தித் துணங்கையாடின.

இங்ஙனம் முரசினார்ப்பும், படைக்கலஓதையும், வீரர்கள் ஆரவாரமும், தேருருள் ஒலியும், யானைகள்பிளிறலும், குதிரைகள் கனைப்பும் மிக்கிருந்தகளம் அலகைநரிகளின் ஆடல்பாடல்கள் மிக்கன. தமது ஆபத்தான நிலையைக்கண்ட ஆரியமன்னர் நடுநடுங்கி இனியிருப்பின் நமக்கு இறுதியே என்றெண்ணினவராய் பலதிசைகளிலும் ஓடத்தலைப்பட்டனர். அங்ஙனம்ஓடியவர் செங்குட்டுவன்றன் ஒற்றர்கட்கஞ்சி புத்தபிக்ஷுவாகவும் பாடகனகவும், புலவராகவும், யாசகராகவும் பிறரறியாவாறு

தம்மைக் கரந்து சென்றனர். தமிழரை எள்ளியுரையாடிய கனக விஜயரும் அவரைச் சேர்ந்த தேர்வீரர்கள் சிலரும் செங்குட்டுவனாற் சிறைப்படுத்தப் பட்டனர். இவ்வாறு செங்குட்டுவன் ஆரியர்களை அவர்கள் நாட்டிலேயே முறியடித்து வெற்றிவீரனாய் விளங்கினன்.

இவ்விதம் தான் வடநாட்டிற் செய்யக் கருதிய காரியம் இரண்டனுள் ஒன்று எளிதில் முடிந்தவுடன், பத்தினிக்கல்லைக் கொணரும்பொருட்டாக தானைத்தலைவன் வில்லவன் கோதையைச் சிறுபடையுடன் இமயம்நோக்கியனுப்பினன். அவனும் அவ்வாறுசென்று இமயத்தினின்றும் பத்தினிக்கல்லைக் கொணர்ந்தனன். உடனே செங்குட்டுவன் தான் முன்னம் தன்சபையிற்செய்த சபதப்படி அக்கல்லைக் கனகவிஜயரின் முடிமேலேற்றிக் கங்கையைஅடைந்து நீராட்டுவித்தனன். கல்லை நீராட்டியபின் கங்கையைக்கடந்து அதன்கரையில் கன்னராற் செய்விக்கப்பெற்ற பாடிவீட்டிற்றங்கினன்.

பின்னர்ச் செங்குட்டுவன் தன்பொருட் டுயிர்விட்டார்க்குரியவர்களால் நீர்க்கடன் முதலியனயாவும் செய்வித்து சன்மானமுந்தந்தனன். இறவாது தமதருந்திறல்காட்டிய வீரர்க்குத் தகுதிப்படியே வில்லவன்கோதையாற் பற்பலசிறப்புக்களைச்செய்து இனிதுவீற்றிருக்கும் எல்லையில் கோவலற்கு நண்பினனாகிய மாடலன் என்னுமோரந்தணன், தமிழ்நாட்டினின்றும் கங்கையாடுதற்குவந்து செங்குட்டுவனைக் கண்டனன். செங்குட்டுவன் மாடலனை உபசரித்து வீற்றிருக்கச்செய்து அவனது யோகக்ஷேமங்களையும் தான்வந்தபின் தமிழ்நாட்டில் நடந்த விசேடங்களையும் வினவினன். அதற்கு மாடலன், மதுரையிற் கோவலன் கொலையுண்டிறந்த செய்தியைக் காவிரிப்

பூம்பட்டினத்துச்சென்று கூறியதனாற் கோவலன்தாயும், கண்ணகியின்றாயும், தோழியும் இறந்துபடுதற்குக் காரணமாயிருந்தமையின் அப்பாவங்களை நீக்குதற்காகக் கங்கையாடவந்தேன்; நான் வரும்வரை தமிழ்நாட்டில் ஈண்டெடுத்துச் சொல்லுதற்குரிய விசேடமொன்றும் நிகழ்ந்திலது எனக்கூறினன். அதன்மேல் மீண்டும் தன் அம்மான்சேய் பெருங்கிள்ளியைப்பற்றி வினாவினன். மாடலன் அதற்கு விடையாக சேரர்பெருமானாகிய தங்களது அன்புநிறைந்த அவனை நெருங்கவல்ல தீமையும் உளதாகுமோ என்று கூறினன்.

இவ்வாறு பலவற்றையும் வினவி யறிந்துகொண்டு பின்னர் தன்னளவு நிறையுள்ள பொன்னை அம் மறையவனுக்குத் தானம் செய்தனுப்பினன். அதன்மேல் அங்கு இருந்த பெருங்கணியை நோக்கி நாம் வஞ்சியினின்றும் புறப்பட்டு எத்தனை மாதங்களாகின்றன என்றுவினவினன்; உடனே அவன் அரசே! இன்றோடு முப்பத்திரண்டு மாதங்களாகின்றன என்றான். அப்பால் செங்குட்டுவன் தன் நட்பரசராகிய நூற்றுவர் கன்னர்க்கும் முகமன்கூறி யனுப்பிவிட்டுக் கனகவிஜயரைக் கொண்டு முன்செல்லுமாறு சேனைகளுக்குக் கட்டளையிட்டுத் தானும் பின்னே அங்கு நின்று புறப்படலாயினன்.

பத்தினிப் பிரதிட்டை

செங்குட்டுவன் வருகையை யறிந்தவுடன் நகரமாந்தரனைவரும் கார்பெற்ற தோகைபோலும், நீர்பெற்ற நிறைபுலம்போலும் களிப்புற்றவராய் பூரண கும்பத்துடன் எதிர்சென்று வரவேற்றனர்; நகரமுழுதும் அலங்கரிக்கப்பட்டது; பழமணன் மாற்றிப் புதுமணம் பரப்பப்பெற்றது யாங்கணும். பாவை விளக்குகள் பலவிடத்தும் வைக்கப்பெற்றன. இவ்வாறு

அலங்கரிக்கப்பட்ட நகரில் சங்கமுமுரசும் எங்கணும்முழங்க, வாழ்த்துரைபலவும் வகைபடஒலிக்கச் சகலபரிவாரங்களும் தற்சூழ்ந்துவரப் புக்கனன்.

புக்கவன், நேரே வடதிசைச்சென்ற தன்கணவன் வருகையை நினைந்துநினைந்து தோழியர்பலர் ஆற்றியும் ஆற்றாளாய், மாடத்தும்பர்ப்பள்ளிமீதிருந்தவாறே உண்பதுமிலளாய், வடதிசையில் வைத்தகண் வாங்காளாய்த், தன்கணவன் வெற்றியேவேண்டுவாளாய் இருக்கும் தன்தேவி வேண்மாளைச் சென்றுகண்டு அவள்துயரம் போக்கினன்.

அதன்பின் சிற்பம்வல்லாரால், தான் இமயத்தினின்றும் கொணர்ந்த கல்லில் பத்தினிக்கடவுளின் உருவத்தைத்தீட்டி அணிகலன்பலவும் அழகுறப்பூட்டி, மங்கலநீர்பல மஞ்சனமாட்டி, மற்றும் வேதமுறைப்படி அப் படிமத்திற்குச் செய்ய வேண்டுவன யாவும்செய்து வேதவொலியும், வாழ்த்தொலியும், முரசொலியும், வாத்தியவோசையும் எங்குங்கலந்திசைப்ப நல்லதொரு ஓரையில் பிரதிட்டை செய்தபின் பூசனையும் வழாதியற்றினன். இப்பொழுது அவன்பத்தினிக்கடவுளின்மேலேயே தன் சிந்தைமுழுதுஞ்செலுத்தி அசைவறநின்று, வீரரஸம் மிகுந்தஅவன்முகம் பக்திரஸம் வழிந்தோட இருந்தநிலை யாவரையும் தன்வயமாக்கியது. அப்பிரதிட்டைக்கு அநேகநாட்டு வேந்தர்களும், வீரர்களும் வந்திருந்தனர். அவருள் நெடுஞ்செழியனும் பெருங்கிள்ளியும் இலங்கையரசன் கயவாகும் முக்கியமானவர்.அந்தணரில்மாடலன் முக்கியமானவன். பூசனை முடிந்தபின் பத்தினிக்கடவுளும் நல்வரமீந்தனள்; ப்ரத்யக்ஷ தெய்வமாய் நின்று அருள்செய்துவந்தனள்.

பத்தினித்தெய்வத்தின் பெருமையுணர்ந்த கயவாகும், நெடுஞ்செழியனும், மற்றுமுள்ள அரசரும் தங்கள் தங்கள் நாட்டகத்தேயும் பத்தினிக்கடவுளைப் பிரதிட்டைசெய்து விழவணியியற்ற நாடெலாம் நல்வளங்கூர்ந்தன.

மாடலன் அறவுரைகேட்டல்

பத்தினிக்கடவுளைப்போற்றுவதில், செங்குட்டுவன்காட்டிய பக்தியையும் ஸ்ரத்தையையும் கண்ட மாடலன் அதனையேஏற்ற சமயமெனக்கொண்டு அறமுரைத்தனன். அரசே! நீ இதுவரை இவ்வுலகத்தையே பெரிதெனக்கொண்டு செல்லுலகத்தைச் சிறிதும் நினைந்திலை. வீரமே ஆரமெனக்கொண்டு நீ அரசியலை எற்றதுமுதல் போர்முகங்களையே பெரிதும் விரும்பி பலவுயிர்களுக்குச் சேதம்விளைக்கும் மறக்களவேள்விகளையே இயற்றினை; நின்னுயிர்க்குறுதிதரும் அறக்களவேள்வியொன்றும் ஆற்றிலை; நின் பகைவரெல்லாரையும் வீரத்தாலடக்கினையன்றி வாரத்தாலும் சாந்தத்தாலும் அடக்கிலை. வீரக்கயிறு விரைவிற் பிணியவிழுந்தன்மையது; அன்பெனுங்கயிறு அவ்வுலகத்தையும் சேரப்பிணிப்பது. ஆதலால், இதுவரை மன்னுயிர்க் குறுதிசூழ்ந்ததுபோல் இனிமேலேனும் நின்னுயிர்க் குறுதிசூழநேர்வாய் எனப் பலவாறு செவியறிவுறுத்தான். அதன்மேல் செங்குட்டுவன் வீரமேயுருவாயிருந்தவன் சாந்தமே வடிவாய்மாறினன். எப்பொழுதும் வீரர்குழுவின் இடையில் இருப்பவன், புலவர் குழாத்திடைப் புக்கனன். அறக்களவேள்விகள் பலவியற்றினன்.

இவனைப் பரணர் என்பவர் பதிற்றுப்பத்துள் ஐந்தாம் பத்தாற் பாடினர். அங்ஙனம் பாடின அவர்க்குச் செங்குட்டுவன் உம்பற்காட்டிலிருந்து வரும் வரும்படியையும், தன் மகன்

குட்டுவஞ்சேரலையும் பரிசிலாகக்கொடுத்தான். இவ்வாறு வீர னையும், மன்னர்மன்னனையும், பெருங்கல்வியாளனையும் ஐம்பத் தையாண்டு வீற்றிருந்தனன்.

காலம்

இவனது காலத்தை ஆராய்ச்சியாளரிற் சிலர், கி. பி. இரண்டா நூற்றாண்டின் பிற்பகுதியும் மூன்றா நூற்றாண்டின் முற்பகுதியும் எனக் கணிக்கின்றனர். அதற்கு ஆதாரம் இலங்கையரசன் கயவாகுவின் காலமே. பின்னும் வேறுசிலர் கி. பி. நான்காம்நூற்றாண்டின் பிற்பகுதியும் ஐந்தாம்நூற் றாண்டின் முற்பகுதியும் எனக் கணிக்கின்றனர். இவற்றுட் பின்னதே பலவற்றிற்கும் ஏற்புடைத்தாதல் நன்குற்று நோக்குவோர்க்குப் புலனும். பின்னதற்கு ஆதாரமாக மறுக்க முடியாத பலவற்றை நன்குவிளக்கியுள்ளார்கள்.

பின்னுரை.

இச்செங்குட்டுவன்; இயற்கையிலேயே யாவரினும் அறிவு திருவாற்றல்களிற் சிறந்துவீற்றிருந்தா னென்பதை இவன் குலத்துள்ளார் யாவருமே அரசுச் செல்வமுடையராக இருந் தமையே நன்கு புலனுக்கும். இவனது மாற்றாந்தாய் வயிற் றுச் சோதரரான நார்முடிச்சேரலும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் தனித்தனி தம்தம் வீரத்தினல் அரைசுச் செல்வமெய்தினர். அவருள் நார்முடிச்சேரல் முன் தமக் குரியதாயிருந்து பின் நன்னன் என்பவனுற் கொள்ளப்பட்ட பூழிநாட்டினை தன்வசமாக்கி யாண்டனன். இவனும் பெரு வீரனய் விளங்கினன். முடிசூடற் கென்றமைத்த முடியையும் மாலையையும் பகைவர் கவரவே, களங்காய்க் கண்ணியையும் நாரினியன்ற முடியையும் சூடினன். ஆதலால், களங்காய்க்

கண்ணி நார்முடிச்சேரல் என்றழைக்கப்பட்டான். ஆடுகோட் பாட்டுச்சேரலாதனும் அவ்வாறே வீரத்தாலரசெய்தினன். மற்றும் இவன்குலத்துள்ளார் பெருமையைக் கூறப்புகின் விரியுமாதலால் இத்துடன் நிறுத்துவாம். இங்ஙனம் தங்கள் குலத்தார் முழுதும அரிதிற்றேடிய புகழைத் தன்புகழால் மிகச்சிறிதெனச் செய்து நிலைநிறுத்தினன் செங்குட்டுவன்.

வடவ ருட்கும் வான்றோய் வெல்கொடிக்
குடவர் கோமான் நெடுஞ்சேர லாதற்குச்
சோழன் மணக்கிள்ளி யீன்ற மகன்
கடவுட் பத்தினிக் காற்கோள் வேண்டிக்
கானவில் கானங் கணையிற் போகி
ஆரிய வண்ணலை வீட்டிப் பேரிசை
இன்ப லருவிக் கங்கை மண்ணி
இனந்தெரி பல்லான் கன்றொடு கொண்டு
மாறுவல்வி லிடும்பிற் புறத் திறுத்து
உறுபுலி யன்ன வயவர் வீழச்
சிறுகுரல் நெய்தல் வியலூர் நூறி
அக்கரை நண்ணிக் கொடுகூர் எறிந்து
பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்
முரணை முழுமுதல் துமியப் பண்ணி
வாலிழை கழித்த நறும்பல் பெண்டிர்
பல் லிருங்கூந் தன்மு ரற்சியால்
குஞ்சர வொழுகை பூட்டி வெந்திறல்
ஆராச் செருவிற் சோழர்குடிக் குரியோர்
ஒன்பதின் வீழ வாயிற்புறத் திறுத்து
நிலைச் செருவி னாற்றலை யறுத்து
கெடலருந் தானை யொடு
கடல்பிறக் கோட்டிய வெல்கெழு குட்டுவன்.

சேரமான் கணைக்காலிரும்பொறை

"ஊனமே யான ஊனிடை யிருக்கும்
உயிரினைத் துறந்துமொண் பூணும்
மானமே புரப்ப தவனிமேல் எவர்க்கும்
வரிசையுந் தோற்றமு மரபும்"

இவன் சேரவரசருள் இரும்பொறை வம்ஸத்தினன். மாந்தரஞ் சேரலிரும்பொறையின் வழிவந்தவன். இவனுக்கு உறவினர்கள் இன்னாரென நிச்சயமாகக்கருதுதற்கு ஏற்ற ஆதாரம் சரியாக இல்லை யெனினும், இவன்காலத்திலேயே தொண்டியைத் தலைநகராகக்கொண்டு ஆண்டுவந்த சேரமான் கோக்கோதைமார்பன் ஒருவனைமட்டும் உறவினனாகக் கருதலாம். ஆனால், எம்முறையினன் என்பது விளங்கவில்லை; இவ்விருவரும் ஒற்றுமையுடன் வாழ்ந்தார்களென்பதற்கும் இடமில்லை. தாயாதிப்பகைமையால் வேறுபட்டவர் என்றே எண்ணவேண்டியிருக்கின்றது.

இவன் காலத்தில் பொய்கையார் என்னும் புலவர் ஒருவர் இருந்தார். இவர் மலைநாட்டிலுள்ள கோதைமார்பன் தலைநகராகிய தொண்டியென்னும் ஊரிற்பிறந்தவர்; பெருங் கல்விச் செல்வர்; ஆன்மவுணர்ச்சி மிக்கவர்; முற்றத்துறந்த முழுமுனிவராய் விளங்கியவர். அமயத்துக் கேற்றபடி மாந்தரைத் தெருட்டுவதில் வன்மைமிக்கார். இரும்பொறையிடத்து நட்புறுதி பூண்டு அவனது அவைக்களத்துப் புலவராய் விளங்கியதுடன் ஆசிரியனாகவும் அமைந்தவர்; அச்சேரமானும் இவரது நல்லுபதேசங்களை நன்கு அகத்துட் கொண்டு போற்றிவந்தனன். இவரே ஆழ்வார் பன்னிருவரில் ஒருவராகிய பொய்கையாழ்

வார் எனக் கூறுவாருமுளர். ஆனால் அவர்கள் மறந்தும் புறந் தொழா இயல்பினராதலின் இவர் வேறு அவர் வேறு என்பதே ஏற்புடைத்தாம்.

இத்தகைய புலவர் பெருமானை ஆசிரியராகக் கொண்ட சேரமான் தன்னாட்டைச் செவ்வனே கோலோச்சி வந்தனன். இவன் புலவர்களது புலமை நிரம்பிய அறவுரைகளைக் கேட்டானந்திப்பதே பெருவழக்கமாகவுடையான். இவனும் செய்யுள்செய்யவல்ல புலமைத்திறமுடையனாயிருந்தான். இத்தகைய இவனது விருப்பத்திற் கேற்பப் பொய்கையாரை ஆசிரியராக அடைந்தது இவனை யளவிலா இன்பத்துள் ஆழ்த்தியது. இடையீடின்றி எப்பொழுதும் அவருடன் அளவளாவுதலையே பேரின்பமெனக் கருதினான். அவருடைய உபதேசமொழிகளின் வன்மையால் சிறிது சிறிதாக உலகப்பற்றும் இவன் மனத்தைவிட்டகல வாரம்பித்தது. அரசுச் செல்வத்தையும் அழிவுடைத்தாதலின் இழிவுடைத்தென எண்ணினன். ஆன்ம விலக்கணமறிந்தார் ஆற்றலின் முன் இவ்வுடல் வலியென்னாம்! இச்சேனைப் பெருக்காற் பயனென்னாம்! என ஆற்றலையும் இகழ்ந்தனன். இவ்வாறு இவ்வுலகத் ததனையும் வெறுத்து, அவ்வுலகத்தும் அப்புறத்ததாகிய அழியா வீட்டின்பத்தையே பெரிதும் விழைந்தவனாய் இருந்ததனால் அரசகாரியங்களைச் சரிவரக் கவனியாதிருந்தனன். நாடுகாவலைச் சிறிதும் நாடினானல்லன். படைவலியினது இன்றியமையாமையைச் சிறிதும் எண்ணிலன். இவ்வாறு இவன் வேற்றரசரைத் தன்மேல் வஞ்சி சூடுமாறு கூறுவான்போல் இருந்தானெனினும் அவர்கள் இவனது ஆற்றலுக் கஞ்சியவராய் அடங்கியிருந்தனர்.

இங்ஙனம் இவன் மனம் இவ்வளவுதூரம் வீட்டின்பத்தை விரும்பியதெனினும், அதற்கு முற்றும் விரோதமான ஒரு அருங்குணத்தை இயற்கையிலேயே அமையப்பெற்றிருந்தான். அதுவே மானமென்பது. உண்மை க்ஷத்திரியர்க் குரியதாகிய அதனை யொறுத்தற்கு இவனால் முடியவில்லை. அவ்வொன்றினாலேயே இவன் அரசைத்துறந்திலன் என்றாலும் அமையும். மானத்தையே தன்னுயிரென மதித்த மாசற்ற வீரனா யிருந்தான். தனக்கும் தன்னைச் சேர்ந்தார்க்கும் நேரும் இழிவிற்குப் பெரிதும் அஞ்சினன். தன்னை இழிவு படுத்தியவர் எவரேயாயினும் அப்பொழுது வேறொன்றையும் கருதானாய் அவரைத் தண்டித்துத் தனக்குற்ற குறையை நீக்குவதிலேயே தன் முழுநோக்கத்தையும் செலுத்துவன். பலபல கூறுவானேன்? மயிரொன்று நீப்பினும் வாழாக் கவரிமா வனையான்; தன் பெருமைக்கழிவுற்ற விடத்துத் தன் உயிரேபோயினும் பணிந்துரையாடுத லென்றும் இலன்.

ஒருசமயம் மூவன் என்னும் சிற்றரசன் ஒருவன் இவனை அவமதித்துவிட்டான். அது பொறாமல் உடனே அவன்மேல் வஞ்சி சூடிச் சென்று அவனுடன் பொருது வெற்றிகொண்டு அவனைச் சிறைபிடித்தான். அப்பொழுதும் சினம் மாறாமல் அவன் பல்லைப்பிடுங்கித் தொண்டிநகரத்துக் கோட்டைக்கதவிற் பலருங்காணப் பதித்துவைத்துச் சினம் தீர்ந்தான்.

இவ்வாறிருக்கையில், இவனுக்கும் அக்காலத்துச் சோணாட்டை ஆண்டுவந்த சோழன்செங்கணான் என்பவனுக்கும் என்ன காரணத்தினாலோ பகைமை யுண்டாயிற்று. இச்செங்கணானும் சேரமான்போலவே அறிவு திருவாற்றல்களிற் சிறந்தவன்; அருங்குணம் பல அமைந்தவன்; செங்கோன்

மன்னன்; தெய்வபக்தியிற் சிறந்தவன்; புலவர்களைப்போற்று வதிற்பொருவிலான்; இவன் உறையூரைத்தலைநகராகக்கொண்டு அரசாண்டுவந்தான்; ஆட்சிமுறையினின் மாட்சிமை மிக்கான்; அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவன். இவனது சரிதம் பின்வருமாறு:—

உறையூரைஆண்ட செங்கோற்சோழனாகிய சுபதேவ னென்பவனுக்கும் அவன்மனைவி கமலாவதி என்பவளுக்கும் பிறந்தவன். கமலவதி இவனைக் கருவுயிர்க்கும் சமயத்தில், சோதிடர்கள் இன்னும் ஒரு முகூர்த்தம் கழித்து இக்குழந்தை பிறக்குமாயின் உலகமெலாம் ஒரு குடைக்கீழ்த் தனியாளும் ஏகசக்ராதிபத்தியத்தை யடையும் என்றனர். அதனைக்கேட்ட கமலவதி தன்வயிற்றிற் பிறக்கும் குழந்தை அவ்வாறுதல் வேண்டுமென்று விரும்பினளாய் இம்முகூர்த்தம் வருமளவும் கருவுயிர்க்காம லிருக்கும்பொருட்டுத் தன்னிருகால்களையும் கட்டித் தலைகீழாய்த் தொங்கவிடுமாறு கட்டளையிட்டனள். அதுகேட்ட சேடியரும் அவ்வண்ணமே செய்தனர். பின்னர் அம்முகூர்த்தத்தில் அவிழ்த்துவிட உடனே கமலவதி ஓராண் குழந்தையினை ஈன்றாள். பிறகு அக்குழந்தை அவ்வாறுபிறக்க வேண்டிய நேரங்கழித்துப் பிறந்தமையால் அதன்கண்கள் மிக வும் சிவந்திருந்தன. அதனால் அவன் செங்கணான் என்றழைக் கப்பட்டான். (இவ்வரலாறு இயற்கைக்கு விரோதமாகவுள தெனினும் தெய்வத்திறமிக்க அக்காலத்திற்கு மாறன்றாம் எனத் துணிவதேமரபு) இவனது முற்பிறப்பு வரலாறும் பின் வருமாறு கூறப்படும்.

இவன் முற்பிறப்பில் ஒருசிலம்பியாகப் பிறந்திருந்தான். அச்சிலம்பி இப்பொழுது 'திருவானைக்கா' வென்றழைக்கப்

படும் திருத்தலத்தில், நாவல்மரத்தின் கீழுள்ள சிவலிங்கத்தின்மேல் அன்புபூண்டு அதன்மேல் இலை சருகு முதலியன உதிராவண்ணம் தன்னிடத்துண்டாம் நாலினால் மேற்கட்டி வழிபட்டுவந்தது. அவ்விதமே அதனைவழிபடும் யானை யொன்று அவ்வலையைக் கண்டு அசுத்தமெனவெண்ணி அதனை அழித்துவிட்டுப் பூசித்தது. மறுநாள் சிலம்பி தன் வலை சிதைந்திருப்பதைக்கண்டு வருத்தமுற்று மீண்டும் அதைச் செம்மைசெய்து பூசித்துச்சென்றது. அன்றும் யானை அவ்வாறே அழித்தது. இவ்வாறு தன்வலையை அறுத்தெறிபவன் யாவன்? எனச் சினங்கொண்டசிலம்பி அதனை யறியுமாறு காத்திருந்தது. வழக்கம்போல் வந்த யானை தன்வலையை அறுப்பதைக் கண்டவுடன் சினமீக்கொண்டு அதன் துதிக்கையிற்புகுந்து கடித்தது. சிலம்பி கடித்ததனால் விடம்பொறாத யானை தரையிற்றன் துதிக்கையை யறைந்துகொண்டு வீழ்ந்து உயிர் துறந்தது. அதன் துதிக்கையில் அகப்பட்ட சிலந்தியும் உயிரிழந்தது. சிவலிங்கத்தை அன்புடன் பூசித்ததனால் யானை சிவசாயுஜ்யமுற்றது. சிலம்பியோ தன் இழிபிறப்பு நீங்கி உலகம்புரக்கும் அரசனாகப் பிறந்தது. யானையாற் பூசிக்கப் படுதலின் அத்தலத்திற்கு 'யானைக்கா' என்ற பெயர் உண்டாயிற்று.

இம் முன்னைப் பிறப்புணர்ச்சியினாலேயே செங்கணன் யானைக்கா முதலிய பல சிவஸ்தலங்களுக்குக் கோயில் எடுப்பித்தானெனக் கூறுவர். சிவபூஜாதுரந்தரன்; கோச்செங்கட் சோழநாயனார் என்றும் அழைக்கப்படுவன். சிவனடியார்களில் ஒருவனென் றெண்ணப்பட்டவனேனும் விஷ்ணுபக்தியும் மிக்கவனென்றறியப்படுகின்றான். திருமங்கை மன்னனாற் சிறப்பிக்கப் பெற்றிருக்கின்றான்.

இத்தகைய செங்கணானுக்கும் சேரமானுக்கும் நேர்ந்த பகைமைகாரணமாகப் போர்மூண்டது. அறிவுதிருவாற்றல் களானும், மற்றும் எவற்றானும் இவ்விருவருக்கும் தம்மில் இணையொத்தனரெனினும் கணைக்காலிரும்பொறை செங்கணானினும் படைவலியிற் சிறிது குறைந்தவனே. மேலும் செங்கணான் படைவீரர் நன்கு பயிற்றப்பட்டவர்கள்; சேரமான்படைவீரர்களோ அவர்கட் கெதிர்நிற்கும் ஆற்றலமைந்தவரல்லர். இருப்பினும் அரசனது வீரக்கிளர்ச்சியால் ஊக்கம் நிறைந்தனர். இருவர்படைகளும் கழுமலத்தருகிற் கைகலந்தன. செங்கணனது கடலெனப் பரந்த படைமிகுதியைச் சிறிதும் மதித்திலராய்ப் பொருதனர் சேரநாட்டுவீரர். கடும்போர் நடந்தது; குருதிவெள்ளம் பெருக்கெடுத்தோடாநின்றது; வெற்றி தோல்வி யாருடையதென்று அறியமுடியவில்லை; சேரன்படை சிறிதெனினும் வீரந் தவப் பெரிதாகலின் சோழன் படைவீரர்கள் வியப்புற்றனர். எனினும் போர்ப் பயிற்சி மிக்காராதலின் சேரன் படையினரைக்கொன்று குவித்துக்கொண்டே வந்தனர். இவ்வமயத்து கணைக்காலிரும் பொறை, துணைக்காவலர் ஒருவருமின்றிப் போர்க்கொடுமையினையும் அதனால் விளைகின்ற உயிர்ச் சேதத்தையும் கண்டு மனம் வருந்தி பலவாறு சிந்தித்துக்கொண்டே நிற்கின்றான்! தன் வீரர் அடைந்துள்ள நிலையினையும் சோழன் படைவீரர் மேற் சேறலையும் கவனித்திலன். என்னே! உலகியல்; என்னே! யரசியல்; இப்பொழுது நேரும் உயிர்ச்சேதங்கட்கு நானும் செங்கணானுமல்லவோ உத்திரவாதிகள் என்று பலவாறு மனங்கசிந்து தன்னைமறந்து நின்றனன். இவ்வாறு இவன் இருக்கும் நிலையினைச் சோழன் சேனைவீரர் கண்ணுற்றனர். உடனே சிறிதும் தாழ்க்காது ஒய்யெனப்பாய்ந்து சேரமானைப்

பற்றினர். அப்பொழுதே தன்னிலை யின்னதெனவறிந்தான் சேரமான். தன்வாளை எடுத்தற்கும் இயலாதவாறு கைகளி லும் கால்களிலும் யாப்பிடப்பட்டான். உடனே சோழன் படையினர் ஆரவாரம் செய்தனர். இதனைக்கண்ட சேரமான் படைஞர் நிலையழிந்து தம் தலைவனையும் மீட்பது கருதாராய்த் தம்முயிரையே பெரிதெனக்கொண்டு ஓடியொளிந்தனர். இவ் வாறு சேரமானும், சேரமானைவிட்டு என்றும்நீங்காதபொய்கை யாரும் சிறைப்படுக்கப்பட்டனர். போரும் முடிவடைந்தது.

சேரமானைப்போலவே, போரின்கொடுமையையும் உயிர்ச் சேதத்தையும் கண்டுவருந்திய சோழன், எப்பொழுது போர் முடியுமோ என அதன் முடிவையே எதிர்பார்த்திருந்தான். இங்ஙனம் சடுதியில் நின்றவுடன் மிக்க மகிழ்ச்சியுற்றான். போர் நின்றதே போதும் என நினைந்தவனாய்ச், சேரமான் சிறைப் பட்டவாலாற்றையும் விசாரியாது சேனையுடன் தன்னூர்சேர்ந் தனன் சோழன்செங்கணான்.

உறையூர்சேர்ந்ததும் சோழன், சேரமான் சிறைப்படுக் கப்பட்டவிதத்தை வினவினான். பெருவீரனாகிய சேரமானைத் தன் படைவீரர் சிறைபிடித்த விதத்தை அறிந்தவுடன் நினைத் தேன்! இவ்வாறில்லையேல் எவ்வாறு அத்தகைப் பெருவீர னைச் சிறைப்பிடித்தல் இயலும்? அந்தோ! எத்தகை இழிவான காரியத்தைச் செய்துவிட்டீர்கள்? நீங்களோ வீரர்கள்? என் முன் நிற்றலிர்! எனக் கடிந்துரைத்தனன். அதன்மேல் சேர மானை அரசவரிசைகளிற் சிறிதும் பிழையாவண்ணம் போற் றுதிர் என்றேவலரை ஏவினன். இவ்வமயத்தே பொய்கையா ரும் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றறிவிக்கப்பட்டனன்;

மிகக்கொதித்தெழுந்தனன்; ஆ! அறிவிலிகளே அவரையுமேன் சிறைபிடித்தீர்கள்? நன்று! நன்று! உங்கள் போர்த்திறம்! நிராயுதபாணிகளையும் புலவர்களையும் சிறைபிடிக்கும் ஆற்றல்! அவரை யாரெனநினைந்தீர்? அவர் மனத்தில் நினைத்தால் இவ்வுலகமுழுதையுமே சிறையாக்கு மாற்றல்வாய்ந்தவர் என்றறியீரோ? முடிமன்னர்கள் வந்துவீழும் அடியுடையார் என்றுணராததென்? அவர் சினங்கொண்டால் நம்நாடென்படும்? செல்லுமின்! இன்னே அவரை ஈண்டுக்கொணர்திர் என்றேயினன். இத்தகைய அறிவிலிகளைத் துணைக்கொண்டதாலன்றோ உற்றசமயத்தில் துணைக்கொருவருமிலனாய்ச் சிறையாயினன் சேரமான்; எனப் பலவாறு வருந்தினன்.

சின்னாழிகைக்குள் பொய்கையார் செங்கணானை யடைந்தனர். அவரைக் கண்டவுடன் செங்கணான் எழுந்துவணங்கி புலமைத்திறமிகு புலவர்சிகாமணி! மனமாசறுக்கும் வளங்கெழுபுலவீர்! இக்கொடியேனையும் மன்னிப்பீரோ; நுந்தமதாற்றல் சிந்தியாராய்ச் சிறைசெய்த அறிவிலாவீரரைத் துணையெனக்கொண்டு நானிலம்புரக்கும் நாயேனையும்மன்னிப்பீரோ; நாடெலாம் நாவினிற் சிறைசெய்யும் நும்மை, என்னுளத்தினிற் சிறைசெய்யவேண்டிய யான் புறச்சிறைசெய்தேனே! என்பேதமை யென்னே! யெனப் பலவாறு வருந்தி யிறைஞ்சினன். அவனது உண்மைத் தூய்மைநிலையைக்கண்ட பொய்கையாரும் அரசே! வருந்தாதை! உன்வீரர் என்னைச் சிறைசெய்தாரல்லர். இந்நெடுநாளாய்ச் சேரமான் என்னைச்செய்த சிறையினின்றும் வீடுசெய்தனர். கட்டிலிலும் பஞ்சணைகளிலும் சிறையிடப்பட்ட நான் உன்படைவீரரால் என் இயற்கையன்னையாகிய தரையிடைப் படுத்துறங்குமாறு செய்யப்பட்

டேன். நேற்றிரவு நான் அடைந்த இன்பத்திற் கெல்லையே யில்லை. நின் படைவீரர்கள் எனக்குத்தந்த இன்பத்தினை நீ அழிக்கப் பார்க்கின்றனைபோலும்! என்றனர். செங்கணான் புலவருடைய மாசற்ற மனத்தின்நிலையை அறிந்து உவகை பூத்தான். அதன்மேற் சின்னாள் பொய்கையார் சோழன் அவைக்களத்தை அலங்கரித்து வீற்றிருந்தனர். அக்காலத்தில் ஒருகணமேனும் தன் மாணவன் சேரமான் சிறைவீட்டினைப்பற்றிய சிந்தனையை நீங்கிறாரல்லர்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் சோழனைநோக்கிப் பொய்கையார், அரசே! நும் கழுமலப்போர்த்திறனைப்பற்றி நாற்பது செய்யுள்களால் களவழிநாற்பதென ஒருநூல் செய்துளன், அதனைக்கேட்டி யென்றனர். அரசனும் உடனே பணிவுடன் யான் என்னபாக்கியம் செய்தேனோ! தங்களாற்பாடல்பெறும் பேறுபெற்றேன் என மகிழ்ந்துரையாடினன். அதன்மேல் அவ்வவையிலே தான்பாடிய களவழிநாற்பது என்ற நூலைக் கூறி உரைவிரித்தனர். தான்செய்த போர்த்திறனை வியந்துள்ள அழகிற்காக அரசனும் போர்க்களத்தினையும், வீரர்கள் போர்செய்யும் ஆற்றலையும், ஆர்ப்பொலிகளையும் தம் கண்ணெதிரே பார்ப்பதுபோன் றுணர்ச்சிபெறுதலால், அவையிலுள்ளவரும் அந்நூலினது போர்க்கள வர்ணனைகட்குப் பெரிதும் வியந்தனர். வீரரஸமிக்க அந்நூலின் சிலபாக்களை எண்டுத்தருதும்.

"நாண்ஞாயி றுற்ற செருவிற்கு வீழ்ந்தவர்
வாண்மாய் குருதி களிறுழக்கத்—தாண்மாய்ந்து
முற்பக லெல்லாங் குழம்பாகிப்—பிற்பகற்
றுப்புத் துகளிற் கெழூஉம் புனனாடன்
தப்பியா ரட்ட களத்து"

"கவளங்கொள் யானையின் கைதுணிக்கப் பட்டுப்
பவளஞ் சொரிதரு பைபோற்—றிவளொளிய
வொண்செங் குருதி யுமிழும் புனனாடன்
கொங்கரை யட்ட களத்து"

"இருசிறக ரீர்க்குப் பரப்பி யெருவை
குருதி பிணங்கவருந் தோற்றம்— அதிர்விலாச்
சீர்முழாப் பண்ணமைப்பான் போன்ற புனனாடன்
நேராரை யட்ட களத்து"

"கடிகாவிற் காற்றுற் றெறிய வெடிபட்டு
வீற்றுவீற் றோடு மயிலினம்போல்—நாற்றிசையும்
கேளி ரிழந்தா ரலறுபவே செங்கட்
சினமால் பொருத களத்து"

"ஓஓ வுவம னுறழ்வின்றி யொத்ததே
காவிரி நாடன் கழுமலங் கொண்டநாள்
மாவுதைப்ப மாற்றார் குடையெலாங் கீழ்மேலா
யாவுதை காளாம்பி போன்ற புனனாடன்
மேவாரை யட்டகளத்து"

களவழிப்பாவின் அருமை பெருமைகளை வியந்தசோழன் புலவரைநோக்கி புவியரசெல்லாம் வணங்கும் கவியரசே! நீர் விரும்பியது கொண்மின் என்றான். உடனே புலவரும் வெங்கண்யானைச் செங்கட்சோழ! என்னருநண்பன் சேரமான் கணைக்காலிரும்பொறையைச் சிறைவீடுசெய்தியோ? என்றனர். சோழன் புலவருடைய நட்பின் திறத்தினை வியந்து அருந்தமிழறிந்த அண்ணல்! நான் அதனை முன்னரே என் மனத்தாற் செய்துவிட்டேன்; உமது பிரிவையஞ்சியே வெளிப்

படையாய்ச் செய்திலேன்; அப்பொழுது உங்கள் வேண்டுகோளும் சேருதலால், இன்னே அதனைப் புறத்தும் செய்வேன் எனக்கூறி சேரமானை யழைத்துவருமாறு மந்திரிகளை யேவினன். சின்னாழிகையில் மந்திரிகள்சூழச் சேரமான் அவைக்களத்தை அடைந்தனன். சோழன் மிக்க மரியாதையுடன் வரவேற்றுத் தன்னையொப்ப ஓர் அரியணையின் மீதிருத்தினன். புலவரும் சேரமானும் ஒருவரையொருவர் கண்டு மகிழ்வுற்றனர். அதன்மேல் புலவருக்குப் பல சிறப்புக்களைச் செய்து சேரனையும் நாற்படையுடன் வஞ்சிநகர்க்கு அனுப்புவித்தனன். இங்ஙனம் ஸ்வதந்திரமுற்றுத் தன்னுடைடைந் தனன் சேரமான்கணைக்காலிரும்பொறை.

சோனாட்டினின்றும் வந்ததுமுதல் சேரமான் மகிழ்ச்சியென்பதையே அறியாதவனாயினான். அவன்முகம் எப்பொழுதும் கவலைக்குறியுடனேயே யிருந்தது. இதனைக்கண்ட பொய்கையார் ஒருநாள் மன்னனைநோக்கி மன்ன! நின் மனக்களிப்பிற்கு யாதொரு குறையுமில்லாதிருக்க நீ வாட்டமுறுங்காரணமென்? ஏனோ நின் மதிமுகம் கவலைக்குறியுடையதா யிருக்கின்றது? அதன்காரணத்தை யானறியக் கூறலாமோ? என்று கேட்டனர். அதற்கரசன் அண்ணல்! என்னே இவ்வரசின் றன்மை; அக் கழுமலப்போர்முதல் என்மனம் இவ்வரசை முற்றும் வெறுக்கின்றது; இதுவேகாரணம் என்றான். உடனே பொய்கையார் அவன் மனத்திலுள்ளதை அறிந்தவராய்ச் சிறிதும் தாழாது, அன்புகொள் அரசே! கழுமலப்போர்முதலாய் நின் மனமும் அறிவும் மாறியதுண்மை. ஆனால், அரசியலை வெறுக்கின்றேன் என்பதுமட்டும் சிறிது உண்மைக்கு மாறுபடுகின்றது; என்னைகொல்! நீயும் என்னிடம் இவ்வணம்

உரைக்கின்றனை; அப்போர்க்குமுன் அதனை எவ்வளவுவெறுப் புடன் நோக்கினையோ? அவ்வளவு விருப்புடன் இப்பொழுது நோக்குவதனால் நைகின்றாய் என்பதுண்மை என்ன நன்கறிந் தேன். இங்ஙனம், நீ அறிவொளி மழுங்கியதன் காரணம் நினது இயற்கைப்பெருங்குணமாகிய மானமே. சிறைப்பட் டதனால்வந்த இழிவை எங்ஙனேபோக்குவது? என ஏங்குகின் றாய்; இவையே உண்மையென்றார்.

அதுகேட்ட அரசன், தன்னுளத்தில் நிகழ்வனவனைத்தும் தவறின்றிக் கூறியதனால் மேலும் பொய்கையாரைத் தடுத்துப் பேசுதற்கு வலியிலனாய்த் தலையிறக்கங்கொண்டான். அதன் மேற் பொய்கையார் மீட்டும் பின்வருமாறு கூறுகிறார். சிறைப்பட்டதற்காக நீ மனங்கவல்கின்றனை; மன்ன! நான் சொல்வதனைக்கேள். மானத்தையே பெரிதெனமதித்து மனங்கவன்று மாய்வோர் அறிவிலிகளே. பெருமையென் பதும் இழிவென்பதும் எவை? அவற்றை அடைவது எது? தான் அடைந்ததாக நினைப்பதுஎது? நான் அடைந்தேன் என்று நினைக்கும் அந்த நான் என்பதுயார்? இவற்றையெல்லாம் நன்கு ஆலோசித்தனையா? நான் என்று கருதப்படுவது உடலோ? உயிரோ? உடலாயின் சொன்றிக்குழிசியளவாய் நிற்கும் அதற் கெனத் தனி உணர்ச்சியும் உண்டோ? உயிர்நீங்கியபின் அவ் வுடல் களவுசெய்த கள்வனைப்போலக் காலுமார்த்துக் கையு மார்த்து கூரைகளைந்து கோவணங்கொளுவி ஈமத்தீயை எரி யெழமூட்டிச் சுடப்படுவதனை யுணரும் இயல்பினதாயுளதோ? உயிரேயாயின், அதனை யன்றும் இன்றும் கண்டதுண்டோ? அதற்கு இத்தகைய உணர்ச்சிகளும் உளவோ? அன்றியும் இன்பமே மயமாய் இலகிடும் அதற்குத் துன்பமென்பதும்

ஒன்றுஉண்டோ? அதற்கு இழிவென்பதும் உயர்வென்பதும் உண்டோ? ஆதலின், அரசே! நினக்கு இழிவு என்பது எங்குளது? மேலும் நின்னினைவின்வண்ணமே இழிவென்பதும் உயர்வென்பதும் அதைப் பிறர்அடைவதும் உண்டாயின் அவைதான் யாவரால் அடைவிக்கப்படுவன? அவமதிப்பும் ஆன்றமதிப்பும் இரண்டும் மிகன்மக்களான் மதிக்கற்பாலன வன்றோ? செங்கணான் எவ்விதத்தான் நின்னினும் உயர்ந்தவன்? இவற்றையெல்லாம் நன்காராயாது ஏனோ வறிதே மனங்கவல்கின்றனை? என்றிவ்வாறு பலகூறி இறுதியில் அரசே? நின் ஆன்மஉணர்ச்சியெல்லாம் அவலப்பட்டொழிந்தன. நினதியற்குணம் தலைசிறந்து நிற்கின்றது. ஆதலின் நீ நின் முன்னைய நிலையை யடையும்வரை நின்னைப்பிரிந்திருப்பேன். இப்பொழுதே செல்கின்றேன் எனக்கூறி அகன்றனர்.

இங்ஙனம் அவரது உபதேசங்களால் மனமிளகிநின்ற சேரமான், திடீரென்று நான் சென்றுவருகின்றேன் எனக் கூறியதைக்கேட்டதும் மிகவும் வருந்தி எவ்வளவோ மன்றாடித்தடுத்தனன். தடுத்தும் பயனின்றாயது; அதன்மேல் அவரது பிரிவாற் சின்னாள் வருந்தினன். அதன்பின் அவர் செல்லும்பொழுது கூறியவற்றைச் சிந்தித்தனன்; அச்சிந்தனையும் அவனை முற்றும் கவர்ந்துகொண்டிருந்த மானமும் ஒன்றற்கொன்று போராடத்தொடங்கிற்று.

இவ்வாறு சின்னாள் மன்னன்மனம் இருபாற் கவர்வுற்றிடையூசலாடி ஒருபாற்படாது நின்றது. கடைசியில் மானமே வெற்றிகொண்டது. செங்கணானாற் சிறைசெய்யப்பட்ட இழிவைப் போக்குதலிலேயே தன் முழுநினைவையும் செலுத்

தினன். அதற்குப் போரே தக்கவழியென்றுன்னினன். உடனே மீட்டும் ஒருமுறை செங்கணன் மேல் வஞ்சிசூடினன். சேனைகள்யாவும் கடலெனப் புடைசூழ வஞ்சிநீங்கி வஞ்சி மேற்சென்றனன். அவ்வாறுசென்றவன் சேனைகளுடன் திருப் போர் என்னும் ஊர்ப்புறத்தே தங்கினன்.

இவ்வாறு வஞ்சியில் நடந்தவற்றையெல்லாம் ஒற்றர்கள் மூலம் அவ்வப்பொழுது அறிந்துகொண்டிருந்த செங்கணன், இரும்பொறை வஞ்சிசூடிப் புறப்பட்டதை யறிந்தவுடன் தானும் தன்சேனைகளுடன் காஞ்சிசூடிக் கடுகினன். இருவர் சேனைகளும் திருப்போர்ப்புறத்தே சந்தித்தன. முன்னையினும் கடும்போர் நிகழ்ந்தது. இருதிறத்தாரும் வீராவேசத்துடன் பொருதனர். இறுதியில் சேரமான்சேனை நாலாபக்கங்களிலும் சிதறுண்டோடியது. தமக்கெத்துணைச்சேதம் விளைத்தனனேனும் சேரமானைக்கொல்ல விரும்பிலாத சோழனது வீரர் படையிழந்த சேரமானைப்பற்றி யாப்பிட்டனர். இவ்வாறு தன் விதிவலியால் மீட்டும் சிறையாயினன்சேரமான். சோழன் அவனது வீரத்திற்கு வியந்தும் விடாப்பிடித்தனத்திற்கு வருந்தியும் குடவாயிற் கோட்டத்தில் இருத்தினன் சேரநாடும் இவனடிப்பட்டது.

சேரமானோ இம்முறையும் சிறைப்பட்டதை நினைத்து நினைத்து நெஞ்சழிந்தான். ஆஹா! என்னைகொல்! என்வீரம்! என்போல் இழிந்தார் வேறியாரே! இருமுறையினும் போரிற் படைஞரையும் வீரத்தையும் தொலைத்தேன்! என் உயிர்தொலைத்தேனல்லேன்! தோல்வியுறுதலே மிகவும் இழிந்தது; தோல்வியுற்றும் சிறையும்உற்ற என்னை என்னென்பது? என்

சேரகுலத்திற்கே என்று மழியாப்பழியைத் தேடினேன் பதக னேன். அந்தோ! இம்முறையும் என்மானமழிந்தது! இனிமேல் யார்முகத்தே விழிக்கப்போகின்றேன்; பகைவன் கையகப்பட்டுச் சிறையில் நகைபலராட ஞமலிபோல இருப்புத்தொடரிற் பிணிப்புண் டுண்டை இருத்தலிற் சாதலேமேல்; எனப்பலபல தன்னுட்கூறி நைந்தனன். உயிரைவெறுத்தனன்; மானம்மதித் தனன்; அவ்வளவிற் சிறைக்காவலர் கொணர்ந்துவைத்த உணவைநோக்கினன். ஹா! இத்தகைய இழிதகவுடைய காவல ரால் உணவளிக்கப் பெறுநிலையினை யடைந்தேனே! இதனி னும் யானடையும் இழிவும்உண்டோ? இந்நிலையில் இவ்வுணவை யுண்டு யான்செய்யப்போவதென்? எனக்குறும் இழிவை அதி கப்படுத்தலன்றி வேறென்? பதியிழந்தேன்! நிதியிழந்தேன்! துதியிழந்தேன்! மதியழிந்தேன்! இவ்வுலகத்தும் இனிவரும் செல்லுலகத்தும் கதியிழந்தேன்! இத்தகைத் தீவினையேற்கு இவ்வுணவுதான்எதற்கு? ஆதலின் இறத்தலே இனி எனக்குள தாவது எனப் பலநினைந்து உணவினைவெறுத்து இறக்கத் துணிந்தனன். மீட்டும் அந்தோ! ஊன்பிண்டமாய்ப் பிறப்பி னும் குழவிப்பருவத்தே யிறப்பினும் வாளாற்போழ்ந்து வீர சுவர்க்கத்தை யடைவிக்கும் வீரர்மரபை யான் பிறந்து பாழாக் கினேனே! அவ் வூன்பிண்டத்தின் பெருமையுமுற்றிலேனே! மூப்பாலும் நோயாலும் இறப்பதே இழிவென்றெண்ணும் குடி யிற்பிறந்து அவையுமின்றிச் சிறைக்களத்து உயிர்விடும் இழிவை யன்றோ அடைந்தேன்! வருபிறப்பிலும் எத்தகைக் கதியுறு வனோ? எனப்பல நினைந்து நைந்தனன். இவ்வளவில் நீர்வேட் கையால், நாவறட்சி மிகவே தன்னையும்மறந்து சிறைக்காவலனை தண்ணீர்கொடுவெனக் கேட்டனன். அவ்வறிவிலி அவன் பெருமையுணரானுய்க் காலந்தாழ்த்து மரியாதையின்றிக்

கொடுத்தனன். நெஞ்சுலர்ந்து சாகுந்தறுவாயிலும் அதனைக் கண்டு மனம்நைந்து இறப்பதேமேல் எனத்துணிந்து தண்ணீரைக்குடியாது கொட்டிக்கவிழ்த்தனன். பசியாற் கண்களும் பஞ்சடைந்தன; நாவறட்சிமிக்கு நெஞ்சும் சருகெனஉலர்ந்தது; அந்நிலையிலும் பசியையும் தாகத்தையும் போக்கிக்கொள்ள நினைந்தானல்லன். பசிவந்திட மானம்பறந்துபோம் என்பதைப் பொய்யாக்கினன். இந்நிலையிற்றன் மனநிலையைப் பின்வருமாறு வெளிப்படுத்தினன்.

குழவி யிறப்பினும் ஊன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
ஈன் மரோவிவ் வுலகத் தானே

இவ்வாறு மானமே பெரிதெனமதித்துப் பசியாலும், தாகத்தாலும் அனலிடைப்பட்ட புழுவெனத் தன்னுடல் துடிப்பதையும் கருதாது இறுதியில் தன்னுயிர்நீத்து மண்ணின்மேல் மாளாத வண்புகழைநிறுவினன். மானமேயுருவாய் குணனாய், நிலையாய், நினைவாய், அழகாய், அணியாய், உயிராய்உடைய அம்மன்னன் மாண்பினை என்னென்பேம்? தான் பிரிந்ததன்பின்னால் நிகழ்ந்த இவற்றையெல்லாம் கேட்ட பொய்கையார் அடைந்த துயரத்திற்களவுண்டோ?

இவனதுகாலம் நன்குஆராயப்படவில்லை; பொய்கையார், செங்கணன் இவர்களதுகாலத்தின் உதவிகொண்டு ஆராயலா மெனின் அவர்கள்காலமும் நன்கு நிச்சயிக்கப்படுமாறில்லை. சேரமான்கோக்கோதைமார்பனால் வெல்லப்பட்ட மூவனும், பெருந்தலைச்சாத்தனரால் இகழ்ந்துரைக்கப்பட்ட மூவனும் ஒருவனுயிருக்கும்பக்ஷத்தில், அப்பெருந்தலைச்சாத்தனர் இருந்தகாலமாகிய ஐந்தாம்நூற்றண்டின் பிற்பகுதியே கணைக் காலிரும்பொறையின் காலம்என்று ஒருவாறு நிச்சயிக்கலாம்.

முடிவுரை

சேரமான்கணைக்காலிரும்பொறை, சோழன்செங்கணனெடு நடாத்தியபோர்கள் இரண்டாம். இவற்றில் முதற்போரிலே தோற்றுச் சிறைப்பட்ட சேரமானைப் பொய்கையார் தான் பாடிய களவழிப்பாவால் மீட்டனர். மீட்டும் இரண்டாமுறை செய்தபோரிலும் தோற்றுச் சிறைப்பட்டுச் சிறைக்களத்தே யே இறந்தனன். இவனதுவரலாற்றை இவ்வாறுகொள்ளாது, சேரமான் செய்தபோர் ஒன்றேயென்று கூறிவிட்டுப் பின்வரு வனவற்றல் இடர்ப்படுவாருஞ் சிலருளர்.

"களவழிக்கவிதை பொய்கையுரை செய்யவுதியன்
கால்வழித்தளையை வெட்டியர சிட்டவனும்"

இன்னருளின்—

"மேதக்க பொய்கைக் கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திபனும்"
"பொறையனைப் பொய்கைக் கவிக்குக்
கொடுத்துக் களவழிப்பாக் கொண்டோனும்"
"பொய்கைக் களவழி நாற்பதுக்கு
வில்லவன் காற்றளையை விட்டகோன்"

"களவழிநாற்பதென்னும் நூலைப்பாடி அச்சேரனை மீட்ட பேரருளாளர்"

இவற்றால் நாமறிவது சேரமான்விடுதலை. இனிப் புறநானூற்றுரைகாரர் கூறுவதைக் கவனிப்போம்.

"சேரமான்கணைக்காலிரும்பொறை, சோழன்செங்கணனோடு திருப்போர்ப்புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டுக் குடவாயிற்கோட்டத்துச் சிறையிற்கிடந்து தண்ணீர் தாவென்று பெறாதுபெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான்சொல்லித் துஞ்சியபாட்டு" இதிலிருந்து நாமறிவது சேரமான் சிறைக்களத்திலேயே இறந்தான் என்பது, முன்னுள்ளவற்றான் விடுதலையடைந்தான் என்றறியப்பட்டவன், அவ்வொரே போரில் எவ்வாறு பிற்கூறிய நிலையை யடைந்திருக்கமுடியும்? ஆகவே இரண்டு போர்கள் நிகழ்த்தினனென்றலே யமையும். நிற்க, இரண்டுபோர் நிகழ்த்தினனென்பதை யொப்புக்கொண்டும் இறுதியில் இரண்டினையும் வேறுபிரித்தறிய இயலாதவாறு ஒன்றாக்கி மயங்கக்கூறுவாரும் உளர். அதாவது, சிறைப்பட்ட சேரமானைக் களவழிக்கவிதையாற் பொய்கையார் விடுதலைசெய்தும் அதனைச்சேரமான் அறியு முன்னரே உயிர்துறந்தான் என்பர்; இவ்வாறு கூறின் முரண்பட்ட அவ்விரண்டு கூற்றுக்களும் ஒன்றாய்ப்பொருந்துமென் றெண்ணினார்போலும். இவ்வாறு கூறுவதிலுள்ள இடர்ப்பா டென்னையெனின்? களவழிக் கவிதையின்மூலம் விடுதலை பெற்று அரசையும் அடைந்தான் எனப்பொருள்படக் கூறும் "களவழிக்கவிதைபொய்கையுரை செய்யவுதியன் கால் வழித்தளையை வெட்டியரசிட்டவவனும்" என்ற பரணியடிகட்கு முற்றும் விரோதப்படுகின்றது. மேலும், ஆண்டுக்

கூறியயாவும் சேரமான் விடுதலையைத் தெள்ளிதிற் புலனுக்கு கின்றது. போரிரண்டென்பதற்கு இன்னுமோராதாரமும் உளது. "காவிரிநாடன் கழுமலங் கொண்டநாள்" எனப் பொய்கையார் அப்போரைக் கழுமலத்து நடந்ததெனக் கூறு கிறார். இக்கழுமலப்போரிற் சேரமான் சிறைப்பட்டதற்கே பொய்கையார் களவழிநாற்பதைப் பாடினர். புறநானூற்றுரை காரர் சேரமான் உண்ணுன்சொல்லித் துஞ்சியதாகக் கூறும் பொழுது திருப்போர்ப் புறத்துப்போரில் எனக் கூறுகிறார். ஆகவே இரண்டு ஊர்களில் இரண்டுபோர்கள் நடந்தன என்றே நினைக்கவேண்டியிருக்கின்றது. இவ்வாற்றால் போரிரண்டென் பதும் கழுமலப்போரிற் பாடியதே களவழிநாற்பதென்பதும் நன்கு தெளிவாம்.

இவ்வளவு முரண்பாடுகட்கும் காரணம் தனக்குத்தானே யாதாரமான புறநானூற்றுரையே. அவ்வுரையின் பொருட் செறிவும், அழகும், தொன்மையும் நோக்கின் அதனைக்கொள் ளாது தள்ளல் ஏலாது. ஆதலால் அதனை ஆதாரமாகக்கொண்டு ஆராயின் இதனை இவ்வாறு முடிவுகூறலே ஏற்புடைத்தாம் என்பது வெள்ளிடைமலையாம்.

சோழன்கரிகாற் பெருவளத்தான்

கடல்கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏணாட்டுப் பண்ணை யிருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்.

என்ற, இந்நான்கெல்லையுட்பட்டது சோழநாடு. காவிரி யாற்றின் பெருக்கால் வளங்கொழிக்கும் நாடாதலின் இதற்குப் பொன்னிநாடென்றொருபெயருமுண்டு (பொன்னி-காவிரி) பொன்னிநன்னாடு சோறுடைத்தென்றும் பொன்மொழி பூண்டநாடு. காவிரியின் வரலாற்றை கஞ்சவேட்கையிற் காந்த மன்வேண்ட அமரமுனிவன் அகத்தியன்றனது கரங்கவிழ்த்தலாற் பெருகியதென்றும், நந்தவனம் வளர்த்தற்பொருட்டால் இந்திரன் வேண்டுகோட்படி அகத்தியராற் பெருகிய தென்றும், இன்னும் வேறுவிதமாகவுங் கூறுவர். எவ்வாறு ஆயினும் அதன் முதல்வர் அகத்தியர் என்பது ஒப்பமுடிந்த தாம். அக்காலத்திற் றென்னாட்டிற்கே திலகம்போன்று விளங்கியதும், முக்கிய துறைமுகப்பட்டினமாயிருந்ததும், இருபெருங்காப்பியங்கட் கிருப்பிடமானதும், இன்னும் எண்ணத் தொலையாத பல்வேறு சிறப்புக்களையுமுடையதான காவிரிப் பூம்பட்டினத்தைத் தன் றலைநகராகக் கொண்டிருந்தது. காவிரியின் இருகரைமருங்கினும் தெய்வத்திருப்பதிகள் பலவுடையது.

இந்நாட்டை யாண்டுவந்த மன்னர் சோழர் எனப்படுவர்; இவர்கள் சூரியகுலத்தினர்; குலமுதல்வன்போற் களங்கமில் செங்கோலினர்; வீரர்; தமிழ்ச்சங்கம் நிறீஇத் தமிழைவளர்த்த பெரும்புகழாளர்.

இவருள் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி யென்றொரு சோழன் இருந்தான். இவன் ஒரு பெரிய கொடையாளி; பெரிய வீரர்கள் வரிசையில் ஒருங்கெண்ணப்பட்டவன்; அழுந்தூர்வேளிரை வென்று வேளிடைமகட்கொண்டோன்; இவனது புத்திரனே சோழன்கரிகாற் பெருவளத்தான்.

கரிகாலன் மிக்க இளமையிலேயே தந்தையை யிழந்தான்; அப்பொழுது இவனது விரோதிகள் இவன் அரசாட்சியை விரும்பி இவனைக்கொல்லத்துணிந்தனர். பாவம்! சிறுவனென் செய்வன்? விரோதிகள் பலரிடையிற் றுணையின்றித் தானொரு தனியனாய்த் தன்னைக் காத்துக்கொள்ளுதற்கு எவ்வாறு வலியுடையனாவன்? இவன் பகைவர் இவன் குடியிருந்த இடத்தைத் தீக்கொளுவினர். பிற்காலத்துப் பெரியவீரனாகும் விதியையுடைய இவனை யத்தீ யென்செய்யும்? இவனது அதிருஷ்டமே இவனைக் காப்பாற்றியது. ஆனால், ஒரு கால் மட்டும் சிறிது தீப்பட்டுக் கருமையடைந்தது. அதுமுதலே இவன் கரிகாலன் என வழங்கப்பெற்றான். விதிவலியாற்றீயி னின்றும் அரிதிற்றப்பிய இவன் கருவூர் சென்றனன். இதனை,

சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும்
பிடர்த்தலைப் பேரானைப் பெற்றே—கடைக்கால்
செயிரறு செங்கோல் செலீயினா னில்லை
உயிருடையா ரெய்தா வினை.

என்னும் பாடலால் அறியலாம்.

சங்கநூல்களால் அறியப்படும் வரலாற்றிற்கு விரோத மாகச் சிலர் வேறுவிதமாகவும் கூறுவர். அது வருமாறு, சோணாட்டை உறையூரிலிருந்து ஆண்டுவந்த பராந்தகச் சோழன் என்பான், பரமனை வழிபடற்காக ஒரு முனிவர் வேண்டுகோளால் நந்தவன முண்டுபண்ணி அதற்கு நாகலோ கத்திலிருந்து பூஞ்செடிகளைக்கொணர்ந்து வளர்த்துவந்தான். மலர்களின் அழகையும், மணத்தையும் அறிந்த அவன்மனைவி

தினந்தோறும் அந் நந்தவனத்திலிருந்து மலர்களைக்கொய்து தானணிந்து வந்தனள். இதனை நந்தவனம் வைக்க முன்னம் வேண்டிய முனிவர் அரசனிடத்து அறிவித்தனர். அறிவித்ததும் அரசன் மனைவிமேல் வைத்த காதலால் சிறிதும் கவனித்திலன். உடனே முனிவர் பரமனிடம்சென்று ஈசனே! நினக்கென்றேற்படுத்திய வனத்தினைச் சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய மானிடர் தமக்குரிமையாக்கிக் கொள்வதும் முறையோ? எனமுறையிட்டனர். உடனே பரமன் முனிவரை நோக்கி முனிவரே! வருந்தல் வேண்டாம். இவ்வுறையூரும் அரசனும் சின்னாளில் மண்மாரியால் அழிவெய்துவது திண்ணம். என்றனன்.

அவ்விதமே சின்னாளில்மண்மாரி பெய்யத்தொடங்கிற்று. அதனைக்கண்ட அரசன் தன் மனைவியுடன் தப்பியோடத் தொடங்கினன். மண்மாரியும் தொடர்ந்துசென்று அவனை அழித்தது. தப்பிய மனைவியோ மிகுந்தகஷ்டத்துடன் கருவூர் சேர்ந்து அங்கு கருவுயிர்த்தனள்; அங்குப்பிறந்தவனே நம் கரிகாலன் என்பர்.

ஏது எவ்விதமேனும் தனக்குரிய அரசுரிமைதுறந்து மிக்க எளியனாய்க் கருவூரில் கரிகாலன் இருக்கையில் சோணாடு அரசனில்லாததால் மங்கலமழிந்த மடந்தையெனப் பொலிவழிந்திருந்தது. இதனைக்கண்ட அந்நாட்டவர் யாவரும் ஒருங்கு குழீஇ ஓர் அரசனைப் பெறவெண்ணி அக்கால முறைப்படி யானையின் கையில் மாலையைக் கொடுத்து அது யாவர் கழுத்தில் மாலையைப்போடுகிறதோ அவனே அரசன் என முடிவுசெய்து செல்லவிட்டனர்.

இவ்விதம் கழுமலத்திலிருந்து சென்ற யானை இடையில் ஒருவரையும் மதியாமல் விரைவிற் கருவூர்சென்று ஆண்டு மிக்க இளையனுய்த் தெருவில் விளையாடிக்கொண்டிருந்த நம் கரிகாலன்கழுத்தில் அம் மாலையையிட்டது. உடனே யாவரும் அவனைச் சோணுட்டரசனென முடிசூட்டினர். இவ்விதம் தனக்குரிய அரசுச்செல்வத்தைப்பெற்ருன்.

"கழுமலத் தியாத்த களிறும் கருவூர்
விழுமியோன் மேற்சென் றதனல்"

என்ற அடிகளும் இதனை வலியுறுத்தும்.

அரசியல்

இவன் ஓர் அரசற்கேற்ற சகல நற்குணங்களும் இயல்பாகவே அமையப்பெற்றிருந்தான்; நியாயமுறையில் அதிநிபுணனுயிருந்தான்; இதற்காக இவனைப்பற்றி ஓர்கதையும் சொல்வதுண்டு. அதாவது,

இவன் அரசுரிமைபெற்ற சிறிதுகாலத்திற்குள் முதியோர் இருவர், தமக்குள் ஏற்பட்ட ஒருவழக்கின் நிமித்தமாக நியாயம் பெறவேண்டி வந்தனர். அங்ஙனம் வந்தவர் இவனைக்கண்டு இவனது இளமையைநோக்கி இச்சிறுவன் என்னேஅறிவான்? இவனிடத்தும் எவ்விதம் நாம் நியாயம்பெறுவோம்? என்று இகழ்ந்தனர். அதனை அறிந்த கரிகாலன் உடனே அவர்க்கு ஐயன்மீர்! கவலுதலொழிமின்; அறிவான் முதிர்ந்ததுபோல் வயதாலும் முதிர்ச்சியுற்ற ஒருவர் ஈண்டிருக்கின்ருர்; அவரைக்கொண்டு நுங்கள்வழக்கைத் தீர்த்துக்கொள்ளலாம்;என்று கூறி யுட்சென்றனன். சென்ற சின்னுழிகைக்குள் தொண்டு

கிழவுருக்கொண்டு கையாற்றண்டுதாங்கி நடந்தனன். கரிகாலனே வேற்றுருக் கொண்டுவந்துள்ளா னென்பதைச் சிறிதேனும் நினையாத அவ்வழக்குவேண்டிய முதியோர், வேறொரு பெரியோரென்றெண்ணி மிக்க மரியாதையுடன் வழக்கைக்கூறினர். வழக்கைக்கேட்டு தன்னறிவின் வன்மையால் அவ்விருவரும் உவப்புடன்செல்லுமாறு நியாயம்கூறினன். நியாயத்தினைக்கேட்ட அவ்விருவரும் இப்பெரியோர் யாரோ? என்று வியந்து நிற்புழி சோழன் தன் பொய்வேடங் களைந்து தன்னுருக்கொடு நின்றனன். உடனே அம்முதியோர்இருவரும் அவனேஇவன் என்றறிந்தவுடன் ஆ! நாம் அறிவின்மையால் என்னநினைத்தோம்? என்று தம்மைத்தாமே இகழ்ந்து உருவின் சிறுமையையும் அறிவின் பெருமையையும் புகழ்ந்து கரிகாலனை வாழ்த்திச்சென்றனர்.

இவ்விதம் இருபாலரும் மகிழும்படி நியாயங்கூறுவதை இயற்கையிலேயே அமையப்பெற்றவன். முற்கூறிய கதையினைப் பின்வரும் பாக்களும் வலியுறுத்தும்.

உரைமுடிவு காணா னிளமையோ னென்ற
நரைமுது மக்க ளுவப்ப—நரைமுடித்துச்
சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்.

"இளமைநாணி முதுமை யெய்தி
உரைமுடிவு காட்டிய வுரவோன்."

சோழநாடும் சோழர்குலமும் உலகம்புகழும் உயர்வெய்தியதன் காரணம் இவனே.

போர்கள்

அசிரயல் நிபுணனுயிருந்ததுடன் எதிரற்ற வீரனுயும் இருந்தனன். இவன்செய்த கணக்கற்ற யுத்தங்களில் வெற்றியே யொழியத் தோல்வியென்பதே யறியான். அவற்றுள் வெண்ணிப்புறத்தே பொருததே மிகப் பெரும்போர். அதில் இரு பெருவேந்தரையும் பதினொரு வேளிரையும் முறியடித்து வென்றனன். இதனை,

இரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை
யரவாய் வேம்பி னங்குழைத் தெரியலும்
ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
விருபெரு வேந்தரும் பொருதுகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட்
கண்ணார் கண்ணிக் கருகால் வளவன்
காய்சின மொய்ம்பிற் பெரும்பெயர்க் கரிகா
லார்கலி நறவின் வெண்ணி வாயிற்
சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
இமிழிசை முரசம் பொருதுகளத் தொழியப்
பதினொரு வேளி ரொடுவேந்தர் சாய
மொய்வலி யறுத்த ஞான்றைத்
தொய்யா வழுந்தூ ரார்ப்பினும் பெரிதே.

என்றிவற்றால் அறியலாம்.

இப்போரில் இவனால்வெல்லப்பட்ட இருபெருவேந்தருள் பெருஞ்சேரலாதன் என்பான்ஒருவன். இவன் இப்போரிற் றான்பட்ட புறப்புண்ணிற்குப் பெரிதும்நாணி வடக்கிருந்தனன். இப்போருக்குப் பின் இவனெடு போரெதிர்வார் தென்

ணுட்டில் இலராயினர். தென்னுடுமுழுதும் இவனடிக்கீழ்ப் பணிந்தது. போர்செய்வார்ப் பெருமையால் தினவுமீக்கொண்டு வடதிசைநோக்கிச் சென்றனன். சென்றவன் அங்குள ஆரிய அரசர் அநேகரைவென்று அவர்பாற் றிறைப்பொருள்வாரி னன். தான் வடநாட்டரசரை வென்றமைக் கறிகுறியாக இமய மலேயிற் புலிக்கொடியைப் பொறித்துவிட்டுத் திரும்பத் தன்னுடு மீண்டனன். போனபோன இடந்தொறும் வெற்றிகொண்டு பிரதாபத்தை நிலநாட்டிவந்தனன்.

இங்ஙனம் வடநாட்டுப்போரில் வென்று கொணர்ந்த திறைப்பொருளில் மூன்று முக்கியமான பொருள்கள் இருந் தன. வச்சிரநாட்டரசன் முத்துப்பந்தரும், மகதநாட்டரசன் வித்யாமண்டபமும், அவந்திநாட்டரசன் வாயிற்ருேரணமும் என்னும் இவை மூன்றுமே. இம்மூன்றும் மயனுற் செய்யப் பட்ட தெய்வத்திறம் பொருந்தியவை. இத் திப்பியப் பொருள் மூன்றும் ஒன்றற்கொன்று சேய்நாட்டனவாய் இருந்தன. கரி காலன் வென்றியாற் றம்முள் ஒன்றுகூடின.

மகா வீரப்பிரதாபனுகிய இவன் றன்னுணையை எங்கும் தடையறச்செலுத்தினன். காவிரிக்கும் கரைவகுத்தானென்பர்; தனக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்களிடம் கரையை வகுத்துக் கட்டுமாறு ஆணையிட்டனன்; இவ்வமயத்தில் தன்னுணைமீறிய ஒரு சிற்றரசனைக் கண்ணைப்பிடுங்கித் தண்டஞ்செய்தான்என்பர்.

மணவினையும் மக்கட்பேறும்

கரிகாலன் மணப்பருவம் உற்றதை அறிந்த அவன் மாமன் இரும்பிடர்த்தலையார் என்பவர், குலத்தாலும் நலத்தாலும் தக்க பெண்ணைத்தன் மருமகனுக்கு மணமுடிக்க நிச்சயித்தனர்.

அதாகாலே, அழகே ஒரு வடிவெடுத்ததுபோன்று அமைந்துள்ள பாண்டியநாட்டரசன் மங்கையே தம்மரசருக்கு ஏற்றவள் என உழையிருந்தார் சிலர் கூறினர். பாண்டியன் மகளைப் போன்றே அழகிற்சிறந்து விளங்கும் வேளிர் தலைவனாகிய நாங்கூர் வேளின் மகளையும் பற்றி வேறுசிலர் கூறினர். இரும்பிடர்த்தலையார் அவ்விருவரையுமே கரிகாலனுக்கு மணமுடிக்க எண்ணிப் பாண்டியனிடமும் நாங்கூர்வேளிடமும் சென்று தன் விருப்பத்தை வெளியிட்டார். அவ்விருவரும் அளவிலா உவகை பூத்து ஒருப்பட்டனர்.

மணவினைக்குரிய நன்முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டது. அம்மங்கலநாளில் பன்னாட்டரசரும் வந்து வணங்கி வாழ்த்தினர். பலவிதச்சிறப்புக்களுடன் மணவினை நிறைவேறியது.

கரிகாலன் அவ்விருவரிடமும் வேற்றுமையின்றி இருந்து அளவிலா இன்பம் துய்த்தான். நாளடைவில் பாண்டியன் மகள் நலங்கிள்ளி என்னொரு புதல்வனையும், ஆதிமந்தி என்னொரு புத்திரியையும் ஈன்றனள். இவ்வாதிமந்தியே கற்புக்கு அணிகலமாய் விளங்கும் காரிகையாவள். நாங்கூர் வேள்மகளும் மாவளத்தான் என்னொரு புதல்வனையும் புதல்வி யொருத்தியையும் ஈன்று மகிழ் சிறந்தாள்.

நான்குமக்களும் பல்விதச் சிறப்புக்களுடன் வளர்ந்து தக்கவயதை அடைந்தனர். அவர்கட்கு மணம்முடிக்க எண்ணினன் கரிகாலன். ஆண்மக்கள் இருவர்க்கும் சேரபாண்டியர் குலத்துதித்த மங்கையரை மணமுடித்து வைத்தான். பெண்மக்கட்கும் அவ்வாறே தக்க அரசிளங்குமரரை ஆராய்ந்து மணம் செய்துவைத்தான்.

பெண்மக்கள் இருவருள் ஆதிமந்தியை மணம்செய்து கொண்டவன் சேரர்குலத்தைச் சேர்ந்த அரசிளங்குமரன். அவன்பெயர் அத்தி என்பது. அவன் மகாவீரன். உடல்வலி மிக்கவன்.

அவன் ஒருநாள் காவிரிநதியில் நீராடச்சென்றவன் கால் தவறி ஆழமிக்க இடத்தில் விழுந்துவிட்டான். ஆனல் நீந்துவதில் தேர்ந்தவனுதலின் அதனைச் சிறிதும் பொருட் படுத்தாது அவ்விடத்திலேயே சிறிதுதூரம்வரை நீந்திச்சென்றான். அவ்விடத்தில் நீர் மிக்கவிசையுடன் செல்வதாதலின் அவனைத் தன் வழியே இழுத்துச்செல்லலாயிற்று? அத்தி தன் முழுவலி கொண்டு முயன்றும் கரையைநோக்கி வரமுடியாது போயிற்று. அப்பொழுதுதான் தன்ஆபத்தான நிலையை உணர்ந்தான்.

கரையிலிருந்தார் யாவரும் அத்தியைக் கவனித்தனர். அவன் நீரின்வேகத்துடன் போராடுவதையும் கண்டனர். அவன் எவ்வளவுமுயன்றும் கரையருகில் நெருங்க முடியாமலிருப்பதைக்கண்டு நடுங்கினர். அவ்விடத்தில் ஆதிமந்தியும் நின்று கொண்டிருந்தாள். அவள் தன் கணவனுடைய ஆபத்தான நிலையைக்கண்டு துணுக்குற்றாள்.

இதற்குள் அத்தி வரவரச் சோர்ந்தான். கையை அசைக்கவும் முடியாதநிலையை அடைந்தான். உடனே நீரின்வேகத்தால் அடித்துக்கொண்டு செல்லப்பட்டான். அதுகண்ட எல்லோரும் கரையில்இருந்தவாறே கோவெனக்கதறினர். ஆதிமந்தியோ பித்துப்பிடித்தவள்போல் யாவர்தடுத்தும் கேளாமல் கணவனைப் பார்த்தகண் வாங்காமல் காவிரியின் கரைவழியே ஓடினள்.

சின்னுழிகையில் அத்தியின் உருவம் அவள் கண்ணுக்கு மறைந்தது. ஆதிமந்தியோ பொறுக்கலாற்ருப் பெருந்துயரு டன் "காவிரியே! என்னுயிரை நீ கொண்டுசெல்கின்ருயே;இது நியாயமா? என்னுயிரை என்னிடம் கொடு" எனப் பலவாறு புலம்பிக்கொண்டே நில்லாமல்மேன்மேலும் ஓடலாயினள்.

கடைசியில் அத்தி கடலிற் சேர்க்கப்பட்டான். உடல்வல முெம் மனவுறுதியும் மிக்கவனுதலால் அந்நிலையிலும் கரையை நோக்கிவர முயன்றுகொண்டிருந்தான்.

சிறிது நேரத்தில் கடற்கரையை அடைந்த ஆதிமந்தியும், பலவாறு அழுது புலம்பிக்கொண்டே அங்குநின்ருர் பலரையும் என் கணவனைக் கண்டீரோ என வினவினள்.

அங்கு நின்ருருள் அறிவாலும் வீரத்தாலும் சிறந்த ஒரு பெண் ஆதிமந்தியின் புலம்புதலைக் கேட்டு கடலை நோக்கினுள். சிறிது தூரத்தில் அத்தியின் உருவத்தைக் கண்டாள். உடனே அவள் 'அம்மா! அஞ்சேல்! அதோ பார்! நின் கணவனை' எனக் கூறிவிட்டு உடனே கடலிற்குதித்தாள். எல்லோரும் அப்பெண் ணின் வீரத்தை வியந்து கொண்டிருக்கையிலேயே அவள் அத்தியுடன் கரையேறினள்.

தன் கணவனை உயிருடன் கண்ட ஆதிமந்தி அடைந்த ஆனந்தத்திற்கு அளவுண்டோ! அக்கணமே தன் கணவனைத் தழுவினள். அவனும் சின்னுழிகையில் சோர்வு நீர்ந்து புன்ன கையுடன் மனைவியை நோக்கினன். அதன்மேல் தன் கணவ னைக் காத்த அப்பெண்ணைப் பன்முறை வணங்கிப் பலவாறு புகழ்ந்து தன்னூரைநோக்கித் தன் கணவனுடன் சென்றனள் ஆதிமந்தி.

காவிரியில் அத்திக்கு விளைந்த செய்திகேட்டு துயர் மிகுந்திருந்த கரிகாலன், இவர்வரவால் இழந்த கண்களைப் பெற்றது போல் மகிழ்ந்து மகளையும் மருகனையும் தழுவினான். அதன் மேல் எல்லாரும் ஆதிமந்தியின் காதற்றிறத்தையும் கற்பின் நெறியையும் போற்றினர். ஊரெங்கும் அத்தியின் மீட்சிக்காக விழாக் கொண்டாடப்பட்டது. இவ்வாறு மக்கட்செல்வமும் மிக்கச் சிறப்பும் பெற்று வாழ்ந்து வரலாயினன் கரிகாலன்.

பின்னுரை

இவன் வீரருட் சிறந்தவீரனும், அரசர்க்கரசனும் இருந்ததுபோலவே புலமைத்திறமிகு புலவர்சிகாமணியாயும் இருந்தனன். புலவர்களை மிக்க அன்போடாதரித்து வந்தனன்; வரையாதுகொடுக்கும் வள்ளலாயும் விளங்கினன்; நீதிகடந்தாரை எப்படிக் கடுந்தண்டம் செய்வனோ அவ்வாறே யளவிலாக் கருணையும்உடையன்; இன்சொல்லே பேசும் இயல்பினன்; எவர்க்கும் நல்லோன்; மாதமும்மாரி மழைவளங் கொழிக்கச்செய்யும் செங்கோன்மையன்; தெய்வபக்தி மிக்கவுடையன். சூரியன் எவ்வாறு இருளுக்குக் கொடியனும் தாமரைக்கு நண்பனும் உள்ளானோ, அவ்வாறே யவன்வழி வந்தோனாகிய இவனும் பொல்லார்க்கு எமனும் நல்லார்க்கு நண்பனுமாயிருந்தான்.

பொருநராற்றுப் படைக்கும் பட்டினப்பாலைக்கும் தலைவன் இவனே. பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனார்க்கு பதினாறுலக்ஷம் பொன் பரிசலித்தானென்று,

"தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தோ டாறு நூறாயிரம் பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்"

கலிங்கத்துப்பரணியடிகளால் விளங்குகின்றது. இவ்விதம் இவன்காலத்தே சோணாடு எவ்விதத்தும் மேன்மைபெற்றிருந்தது.

காலம்.

இவனது காலம் செங்குட்டுவன்காலமே. சிறிது முன்னுவிருக்கலாம்; கரிகாலன்மக்கள் கிள்ளிவளவன், நலங்கிள்ளி என்ற இருவர்க்கு விரோதியான பெருங்கிள்ளிக்கு உதவியாக செங்குட்டுவன் நின்று பொருதலால், செங்குட்டுவன்காலமும் கரிகாலன் மக்கள்காலமும் ஒன்றே யென்பதொருதலை; ஆகவே கரிகாலன்காலமும் ஏறக்குறைய செங்குட்டுவன் காலமென்பது பொருத்தமுடைத்தாம். அங்ஙனமாயின்கரிகாலன் நான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தவனாதல் வேண்டும்.

இவனைப் பாடியபுலவர்கள் கருங்குழலாதனார், வெண்ணிக்குயத்தியார், உருத்திரங்கண்ணனார், பொருந ராற்றுப் படை பாடிய முடத்தாமக்கண்ணியார் முதலியோராவர்.

இவ்வாறு அன்றும், இன்றும், என்றும், எவர்க்கும், எவற்றினும்சிறந்து மேம்பட்ட கீர்த்தியினையுடைய கரிகாலனையும் ஒருகாலன் தனதகல்வயிற்றடக்கினன். அந்தோ! நல்லோர், அல்லோர் என்னாது அற்றம்பார்த்துழலும் அருளில் கொடுந்தொழிலாளனையும் அறக்கடவுள் என்பதென்னேயோ?

அந்தோ! அக்காலன் இத்தகைப் பேரரசர், பெரும்புலவர் தம் புலையுடல் எண்ணில உண்டுகளித்து அமையாமல் அவர் தம் புகழுடம்பையும் உண்ண நெருங்குகின்றனே. தமிழரது வீரத்தையும் உண்டனன்; கல்வித்திறனை உண்டனன்; கைத் தொழிலாதிய எவற்றையும் உண்டனன்; முன்னாளில் பன்னாடு கட்கும் முன்னாகஇருந்த நாட்டின் பெருமையையுமுண்டனன்; தமிழ்நாடென்ற பெயரையும் உண்டனன்; கடைசியில் இவ்வள விற்கும் முதலாகிய இன்பப்பெருக்காகிய, அமுதவூற்றாகிய உலகெலாம்போற்றும் ஒருதனித்தமிழையும் உண்ணநேர்ந்த னன். உலகமுழுதும் பரந்திருந்ததைக் கொஞ்சம் கொஞ்ச மாகவுண்டு மிக அணித்தாய் நெருங்கிவிட்டனன்; எல்லாம் அவன்வயிற் றொளித்தன; இருக்கின்றசிறிதும் அவன்வாயில் அகப்பட்டுக்கொண்டு உள்ளே சென்றுகொண்டிருக்கின்றது; ஆய்விட்டது! இன்னும் சிலகாலத்துக்குள் எல்லாம் தொலைந்து விடும்; அப்பொழுது 'தமிழ்' என்று ஒன்று இருந்ததுவோ என்று நினைக்கவும் நம்மால் இயலுமா? ஆதலின், தமிழ் மக் களே! இந்த ஆபத்தான சமயத்திலாவது தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்ளுங்கள்; இல்லையேல் அழிவது திண்ணம். உங்கள் பண்டையோர் வீரமொழிகளைப் பாருங்கள்; காலன் வாய்ப்பட்ட உங்கள் தமிழை, உங்கள் வீரத்தை, உங்கள் கல் வித்திறத்தை, உங்கள் பண்டைப்புகழை, உங்கள் தொழின் முறைகளை, நீங்கள் யார்? என்ற வினாவிற்கு விடையிறுப்பதற் குரிய உங்கள் உண்மையான நிலைமையை எவ்விதமேனும் மீட் டும் கைப்பற்ற முயற்சி செய்யுங்கள்.

ஐயோ! காலனே! நீ ஒருவன்றானா ஆநந்தத்துடனிருக்க வேண்டும்? உலகெலாம் உன்னைப்போல் விரும்பாதா? ஏனோ

நின்நலமே கருதுகின்றாய்? உலகெலா மின்பமளிக்கவல்ல ஒன்றேயுளதாய எங்கள் தமிழை யுண்ணத்தொடங்கி இன்னும் அமைந்திலையே? தெவிட்டிலையோ? நீ அவ்வமுதத்தைப் பருகுவதுபோல் நாங்களும் அதனைப் பருகி இன்பமெய்தல் வேண்டாமா? முற்றும் அழித்தாய்; மிகச்சிறியதாகிய இதனையேனும் விட்டுவிடு; எங்களது வீரம், புகழ், பெருமை இவற்றை நீ யுண்டதன்பயனாக நாங்கள் அடைந்திருக்கும் நிலையைப்பார். பரிதி சென்றவிடத்து தாரகைகள் அரசோச்சுகின்றன; ஆதலின் இனியேனும் எங்கள் தமிழை நலியேயல்?

நலங்கிள்ளி

இவன் முற்கூறப்பட்ட கரிகாற் பெருவளத்தானது மகன். இவனுக்கு மாவளத்தான் என்றொரு தம்பியுண்டு. தந்தையைப்போலவே ஒப்பற்ற வீரன்; அருங்கலைவிநோதன்; அமராபரணன்; தன்னிகரற்ற வள்ளல்; இவனுக்குச் சேட்சென்னியென்றும், புட்பகையென்றும், தேர்வண்கிள்ளியென்றும் பெயர்களுமுண்டு. தன் முன்னையோர் போலவே அருளால் நாட்டையாண்டனன். யாவரும் புகழ்ந்தேத்தும் வண்ணம் பேரரசனாக வீற்றிருந்தான்.

இவன் எப்பொழுதும் போரையேவிரும்பிய பெருவீரன்; இவனது போர் விருப்பத்தைக் கோவூர்கிழார் "சிறப்புடை முறைமையாற் பொருளும் இன்பமும் அறத்தின் பின்னே தோன்றும்" காட்சிபோலச் சேரபாண்டியருடைய இரண்டு குடையும், பின்னாக ஓங்கிய நினது ஒன்றாகிய வெண்கொற்றக் குடை நிறம்பொருந்திய கலைநிறைந்த திங்கள் போல ஓங்கிச் சேய்மைக்கண்ணே விளங்க, நல்ல புகழ்வேட்கையைவிரும்பி

வெல்லும் போரினைச் செய்யும் பாடிவீட்டின்கண்ணே யிருத்த லல்லது நின் நகரின்கண் இருத்தலை உடம்படாய் நீ; கோட்டினது நுனைமுகந்தேய மடுத்து பகைவரது காவலையுடைய மதிலைக்குத்தும் நின்னுடைய யானைகள் அடங்கா; பூசலென்றுகேட்பின் விரும்பும் அணிந்த வீரக்கழலையுடையமறவர், காடுநடுவே கிடந்தநாடு மிகவும் தூரியவாதலால் யாம் போவேமல்லேமென்று கருதார்; ஆதலான், ஓசையுண்டான விழாவினைவிட்டுக் கீழ்கடல் பின்னதாக மேல்கடலினது வெளிய தலையையுடைய திரை, நினது குதிரையினது குளம்பையலைப்ப வலமாக முறையே வருதலுமுண்டாமென்று சுழன்று நெஞ்சம் நடுங்கும் அவலம்பரப்பத் துயிலாத கண்ணையுடையவாயின, வடநாட்டுள்ள அரசுகள் எனப் பொருள்படக் கூறியிருப்பதனாலேயே நன்கு விளங்கும்.

இவனது சேனைப்பெருக்கையும் வெற்றியையும் ஆலத்தூர்கிழார் பின்வருமாறு நன்கு விளக்கியுள்ளார்.

"தலையோர் நுங்கின் றீஞ்சேறு மிசைய
இடையோர் பழத்தின் பைங்கனி மாந்தக்
கடையோர் விடுவாய்ப் பிசிரொடு சுடுகிழங்குநுகர
நிலமலர் வையத்து வலமுறை வளைஇ
வேந்துபீ டழித்த வேந்துவேற் றனையோ
டாற்ற லென்பதன் றோற்றங் கேளினிக்
கள்ளி போகிய களரியம் பறந்தலை
முள்ளுடை வியன்காட் டதுவே நன்றுஞ்
சேட்சென்னி நலங்கிள்ளி கேட்குவன் கொல்லென
இன்னிசைப் பறையொடு வென்றி நுவலத்

தூக்கணங் குரீஇத் தூங்குகூ டேய்ப்ப
வொருசிறைக் கொளீஇய திரிவாய் வலம்புரி
ஞாலங் காவலர் கடைத்தலைக்
காலைத் தோன்றினு நோகோ யானே"

இத்தகைப் பெருவீரன் ஒருசமயம் பாண்டியரோடு பொருது அப்பாண்டியநாட் டகத்ததாகிய ஏழரண்களைக் கொண்டு அவற்றில் தன் புலிக்கொடியை நாட்டினான்; இதனை,

"தென்னம் பொருப்ப னன்னாட் டுள்ளும்
ஏழெயிற் கதவ மெறிந்துகைக் கொண்டுநின்
பேழ்வா யுழுவை பொறிக்கு மாற்றலை"

என்ற அடிகளாலும் அறியலாம்.

சேரன், செங்குட்டுவனது அம்மானென் றறியப்பட்ட சோழன்நெடுங்கிள்ளியொடு ஒரு காரணமாகப் பொருதற்கெழுந் தான். இவனது போர்த்திறங்கண்டஞ்சிய அந்நெடுங்கிள்ளி தன் கோட்டைக்குள்ளே ஒளிந்துகொண்டு வெளிவராதிருந் தனன். நலங்கிள்ளி ஆவூர் முற்றியிருந்தகாலத்து அதனை யடைத்துள்ளிருந்த நெடுங்கிள்ளியைக் கோவூர்கிழார் அவனது செய்கை இளிவரவுடைத்தாம் எனப் பின்வருமாறு கூறுகிறார்.

இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ
திருந்தரை நோன்வெளில் வருந்த வொற்றி
நிலமிசைப் புரளுங் கைய வெய்துயிர்த்
தலமால் யானை யுருமென முழங்கவும்
பாலில் குழவி யலறவு மகளிர்
பூவில் வருந்தலை முடிப்பவு நீரில்

வினைபுனை நல்லி வினைகூஉக் கேட்பவும்
இன்னு தம்ம வீங்கினி திருத்தல்
துன்னருந் துப்பின் வயமான் ரோன்றல்
அறவை யாயி னினதெனத் திறத்தல்
மறவை யாயிற் போரொடு திறத்தல்
அறவையு மறவையு மல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவி
னீண்மதி லொருசிறை யொடுங்குத
னாணுத் தகவுடைத் திதுகாணுங் காலே

இவ்வாறு ஆவூரில் அடைத்திருந்த நெடுங்கிள்ளி தந்திரத் தாற் தப்பிச்சென்று உறையூரடைந்து அங்கும் நலங்கிள்ளி யின் பெயரேகேட்க நடுங்கிக்கொண்டிருந்தான். அப்பொழுது இளந்தத்தன் என்னுமோர் புலவன் நலங்கிள்ளி யிடத்தினின்று தற்செயலாக உறையூர்புகுந்தான். அவனைக்கண்ட காரியாற் றுத்துஞ்சிய நெடுங்கிள்ளிஅவன்தன் பகைவனுகிய நலங்கிள்ளி யினது ஒற்றன் எனக்கருதிக் கொல்லத்துணிந்தான். அப் பொழுது கோவூர்கிழார் அவனைநோக்கி அரசே! என்னே! நின் செயல்; கொடுக்கும் வள்ளியோரை நினைத்துப்பழுமரந்தேரும் பறவையைப்போல, மிக்கதூரமென்றும் கடத்தற்கரிய வழி யுடைத்தென்றும் கருதாது அரியவழி பலவற்றையும் கடந்து, திருந்தாதநாவால் தாம் வல்லபடிபாடி அவர் கொடுக்கும்பரிசி லாற் றுமுண்டு தம்பெரிய சுற்றத்தையும் பாதுகாத்தற்குளதாந் துன்பம் மிக்குளது இப்பரிசிலான் வாழும் வாழ்க்கை. பிறர்க் கொடுமை செய்வதென்பது இவரிடத்தில்லை; படைவலியாற் பகைவரைத் துன்புறுத்தி யடக்கும் நும்மையொத்த தலைமையு முடையர் கல்விவலியாற் றம்மொடு மலைந்தோரை இன்

புறுத்தியடக்குதலான். இத்தகையோர் பரிசில்வேட்டு நின்னிடம்வரின் அவர் விரும்பிய கொடாததோடமையாது அவரைக் கொல்லவுந்துணிதல் நும்போல்வார்க் கேற்புடைத்தன்றும்.

"கோறல்செய் தானுயிர்க் கொலையொன் றேயலாற்
றேறினர்ப் பிழைத்தவன் பழியும் சேருமால்."

எனக்கூறிச் சமாதானம் செய்தனர். அதுகேட்டு இளந்தத்தனை விடுதலைசெய்தான்.

அங்ஙனம் அவ்வூரினின்றும் தப்பி உறையூரையடைந்தானென்றறிந்தவுடன் நலங்கிள்ளியும் விடாதுசென்று அங்கும் முற்றுகைசெய்தான். இவன் வருகின்றானென்பதை யறிந்தவுடன் கோட்டைக் கதவுகளையெல்லாம் அடைத்துக்கொண்டு அச்சமே துணையாக இருந்தான். நலங்கிள்ளிவிடாப்பிடித்தனத்தால் நாடுகள் அடையும் துன்பத்தையும், நெடுங்கிள்ளிக்குண்டாம் இழிவையும் கண்டஞ்சிய கோவூர்கிழார், நலங்கிள்ளியை நோக்கி அரசே! நின்னால் எதிரியாகக்கொள்ளப்பட்ட நெடுங்கிள்ளி பனம்பூவைச்சூடிய சேரனல்லன்; கரியகோட்டினையுடைய வேம்பினைச்சூடிய பாண்டியனும் அல்லன்; உனது தாயாதியரில் ஒருவனாகிய சோழனே; நினதுகண்ணியும் ஆத்தியே; நின்னுடன் பொருவான்கண்ணியும் அன்னதே; ஒருவீரர் தோற்பினும் தோற்பதுங்கள் சோழர்குலமே; இவரும் வெல்லுதல் இயலாது; பகைவனைக்கண்டஞ்சி யடைத்திருந்தானொருசோழன் என உங்கள்குடியே இழிவெய்தும்; ஆதலால், இச்செய்கை நுங்குடிக்குத் தக்கதன்று. இதனையுடனே தவிர்தலேஏற்றதாம்; எனப் பலகூறிச் சந்துசெய்வித்தனர். உடனே நலங்கிள்ளி அவர்கூறிய நியாயங்களை நன்குணர்ந்தான்; நெடுங்

கிள்ளிமேற் பகைமைநீங்கினன்; உடனேபோரும்நிறுத்தப்பட்டது. இதனையறிந்த நெடுங்கிள்ளியும் அச்சநீங்கி வெளிப்போந்தனன். அங்ஙனஞ் சந்துசெய்விக்கப்பட்ட இருவரும் நட்பாளராயினர் என்றே தெரிகின்றது. ஆனல், இந்நெடுங்கிள்ளி இறந்தபின் இவன்மகனகிய பெருங்கிள்ளியென்பானெடு நலங்கிள்ளியொடு சேர்ந்த சோழ ரொன்பதின்மரும் பொருது வெற்றிகொண்டாரென்றும், பின்னுற் செங்குட்டுவனிடம் தோல்வியுற்றோடினரென்றும் தெரிகின்றது. அது நலங்கிள்ளியின் முதிர்ந்தபருவத்திலிருக்கலாம். இறுதிவரை தோல்வியென்பதே அறியாத பெருவீரனய் வாழ்ந்தானென்று கூறுவதென்னெனிற் பலர் சேர்ந்தபொழுதுற்ற தோல்வியாதலானும் மேலும் வயோதிகபருவத்துற்ற தோல்வியாதலாலும் அதனையொருபொருளாக இவன் மேல்வைத் தெண்ணப்படாமையாலேயே எனக்கூறுதலே பொருத்தமுடைத்தாம்.

இவன் வீரருட் சிறந்த வீரனய் இருந்ததுபோலவே புலமைத்திறமும் உடையனயிருந்தான். யுத்தசமயத்திலும் புலவர்கள்சூழ வீற்றிருந்தமையே இவன் கல்வியின்மேலும் கற்ரூர்மேலும் வைத்திருந்த ஆர்வத்தை வெளிப்படுத்தும். இவனது கொடைத்திறத்தைப் புலவர்கள் பலபடியாகப் புகழ்ந்து பாடியுள்ளார்கள். இவன் செல்வமெல்லாம் கற்ரூர்க்கும் பாணர்க்குமே பயன்பட்டன.

> கடும்பின் அடுகல நிறையாக நெடுங்கொடிப்
> பூவா வஞ்சியும் தருகுவ னென்ரூே
> *　　*　　*　　*　　*
> மாட மதுரையுந் தருகுவ னெல்லாம்
> பாடுகம் வம்மினோ பரிசின் மாக்கள்

என்ற அடிகளே அவன் கொடைத்திறனை நன்குவிளக்கும். இவன் கவிபாடுதலினும் வல்லனென்பதனைப் பின்வரும் செய்யுட்களே நன்குவிளக்கும்.

மெல்ல வந்தென் னல்லடி பொருந்தி
யீயென விரக்குவ ராயிற் சீருடை
முரசு கெழுதாயத் தரசோ தஞ்சம்
இன்னுயி ராயினும் கொடுக்குவெ னிந்நிலத்
தாற்ற லுடையோ ராற்றல் போற்றாதென்
னுள்ள மெள்ளிய மடவோன் றெள்ளிதிற்
றுஞ்சுபுலி யிடறிய சிதடன் போல
வுய்ந்தனன் பெயர்தலோ வரிதே மைந்துடைக்
கழைதின் யானைக் காலகப் பட்ட
வன்றிணி நீண்முளை போலச் சென்றவண்
வருந்தப் பொரே எனாயிற் பொருந்திய
தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாய்ப்
பல்லிருங் கூந்தன் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகவென் றாரே.

இதிலிருந்து அவனது உயர்ந்த மனப்போக்கும், பொருட்பெண்டிர் பொய்மை முயக்கத்தின்மேற் கொண்ட வெறுப்பின்மிகுதியும் நன்குபுலனாகும்.

மூத்தோர் மூத்தோர்க் கூற்ற முய்த்தெனப்
பாறர வந்த பழவிறற் றாய
மெய்தின மாயி னெய்தினஞ் சிறப்பெனக்
குடிபுர விரக்குங் கூரி லாண்மைச்
சிறியோன் பெறினது சிறந்தன் று மன்னே

மண்டமர்ப் பரிக்கு மதனுடை நோன்றாள்
விழுமியோன் பெறுகுவ னாயி னாழ்நீ
ரறுகய மருங்கிற் சிறுகோல் வெண்கிடை
யென்றூழ் வாடுவ றலபோல நன்று
நொய்தா லம்ம தானே மையற்று
விசும்புற வோங்கிய வெண்குடை
முரசு கெழுவேந்த ரரசுகெழு திருவே.

இதிலிருந்து அரசாளுதற்குரியோர் யாவர் என்பதனையும் அவரது தகுதியினையும் அறிந்துள்ள அறிவின்ஒட்பம் நன்கு விளங்கும்.

இத்தகைய சோழன், நலங்கிள்ளியினது போரின்மேல் விடாத வேட்கையைநீக்கி அறத்தினுக்கும் பொருட்டாக உறையூர் முதுகண்ணன்சாத்தனார் அவனைநோக்கி,

வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை யெண்ணுங் காலை
யுரையும் பாட்டு முடையோர் சிலரே
மரையிலை போல மாய்ந்திசி னோர் பலரே
புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான வூர்தி
யெய்துப வென்பதஞ் செய்வினை முடித்தெனக்
கேட்ப லெந்தை சேட்சென்னி நலங்கிள்ளி
தேய்த லுண்மையும் பெருக லுண்மையு
மாய்த லுண்மையும் பிறத்த லுண்மையும்
அறியா தோரையும் அறியக் காட்டித்
திங்கட் புத்தே டிரிதரு முலகத்து
வல்லா ராயினும் வல்லுந ராயினும்

வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
யருள வல்லை யாகு மதி
சிறப்பில் சிதடு முறுப்பில் பிண்டமுங்
கூனுங் குறளு மூமுஞ் செவிடு
மாவு மருளு முளப்பட வாழ்நர்க்
கெண்பே ரெச்ச மென்றிவை யெல்லாம்
பேதைமை யல்ல தூதிய மில்லென
முன்னு மறிந்தோர் கூறின ரின்னு
மதன்றிற மத்தையா னுரைக்க வந்தது
அறனும் பொருளு மின்பமு மூன்று
மாற்றும் பெருமநின் செல்வம்
ஆற்ற மைநிற் போற்ற மையே

எனப்பலகூறி அறிவுறுத்தினர். அவ்வுபதேசங்களை நன்கு மனத்துட்கொண்ட நலங்கிள்ளி அதுமுதல் போர்விருப்பம் முழுதும் அறங்களின்மேல் வைத்தனன்; அதுமுதல் இறுதி வரை எண்ணற்ற அறங்களைச்செய்து புகழுடன் வீற்றிருந் தர சாண்டனன்.

இவனது சரித்திரத்தில் ஒவ்வொருபகுதியும் புலவர்களின் மேல் வைத்துள்ள பக்தியை நன்குவிளக்கும். எத்தகைக் காரியமாயினும் அவர்கள் சொன்மீறி நடவான்; அரசனுயிருத் தற்குரிய குணங்களனைத்தும் அமையப்பெற்றவனே யெனினும், அவற்றுள் மிக்குப்பொருந்திப் புகழ்தந்தன இரண்டு. அடக்கமும் பொதுமகளிர் விழையாமையுமே. அவனது அடக்கத்தைப்பற்றிக் கூறுமொருவர்,

செஞ்ஞா யிற்றுச் செலவும்அஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளி திரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமு மென்றிவை
சென்றளந் தறிந்தோர் போல வென்று
மினைத்தென் போரு முளரே யனைத்து
மறிவறி வாகாச் செறிவினை.

என நன்குவியந்து கூறுதலாலறியலாம். பொதுமகளிர் விழையாமைக்கோ "பொரேஎனுயின் றீதில்நெஞ்சத்துக்காதல் கொள்ளாப் பல்லிருங்கூந்தன் மகளிர் ஒல்லாமுயக்கிடைக் குழைகவென்றார்" எனச் சூளுரைத்தலாலேயே அதன்மேல் வைத்த வெறுப்பினை நன்கறியலாம்.

இவனதுகாலமும் ஐந்தாம்நூற்றாண்டே. சோழன் கரிகாலன் மகனெனக் கூறப்படுதலாலும், செங்குட்டுவன் அம்மான் நெடுங்கிள்ளியுடன் பொருதமையாலும் அவர்காலத்தவனென்பது தேற்றம். இவனைப்பாடிய புலவர்கள் கோவூர்கிழார், ஆளத்தூர்கிழார், உறையூர் முதுகண்ணன்சாத்தனார் என்பவராவர்.

முற்றிற்று.

Printed at the Vivekananda Press, Madura:-33.

Curly 8

41190

Curly

27984

மதுரைஜில்லா, சேம்பூர் வித்வான்

வீ. ஆறுமுகஞ் சேர்வை அவர்கள் எழுதிய

நவீன தமிழ் வாசகப் புத்தகங்கள்

இப்பாடப் புத்தகங்களில் கல்வியை எளிதிற் கற்றுக்கொள்ளும் முறைகளும் அவற்றால் அடையும் பயன்களும், வேளாண்மைசெய்யும் விதங்களும், பருத்தி, புகையிலை பயிரிடும் முறைகளும் உபயோகங்களும், கைத்தொழில்முறைகளும்அவற்றால்நாம்அடையும்பயன்களும் கொக்கிப்புழுவினால் உண்டாகும் கெடுதிகளும் அவற்றைஅறவொழிக்கும் மார்க்கங்களும், வியாபாரம்செய்யும் வழிகளும், பருவக்காற்றுகள் உண்டாகும் பருவங்களும் திசைகளும், உலகவர்த்தமானங்களை அறிவிக்கும், சமாச்சாரப்பத்திரிகைகளும் அவற்றை வாசிப்பதனால் நாம் அடையும் பயன்களும், சங்கங்களின் அமைப்பும், நடத்தும் விதமும், கண்யசீலரான டாக்டர் நாயர் பூர்வீகவரலாறும், குடியின் கெடுதிகளும், சாரணச்சிறுவர்கள் கடமைகளும், நீராவியின் சக்தியைக்கண்டுபிடித்தவர் வரலாறும் சோப்புச்செய்யும் விதங்களும், மின்சாரத்தின் நன்மைகளும் கிரகணங்கள் உண்டாகும்விதங்களும்காலங்களும்,நமது தேகத்தில்வியர்வையுண்டாகும் காரணங்களும்.இந்தியபார்லிமெண்ட் வரலாறும் நடத்தும் முறைகளும்,சிசுக்களைக்காப்பாற்றும் வழிகளும், தருமத்தின்பயனும், பானகல் அரசர் பூர்வீக வரலாறும், தமிழர்பெருமையும் புத்தமதத்தைவளர்த்த அசோகன் வரலாறும், தியாகமூர்த்தியாய் அவதரித்து விளங்கிய தியாகராயர் சரித்திரமும், செய்யுட்பாடங்களும் ஆகிய, பல அரியவிஷயங்கள் வகுப்பிற்கேற்றவாறு தெள்ளிய நடையில் மாணவர்கள் எளிதிலுணரும்படி நன்கு அமைத்து விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன.

நவீன தமிழ் வாசகப் புத்தகம் (ஆறும் வகுப்பிற்குரியது)
விலை அணா. 7

நவீன தமிழ் வாசகப் புத்தகம் (ஏழாம் வகுப்பிற்குரியது)
விலை அணா. 8

நவீன தமிழ் வாசகப் புத்தகம் (எட்டாம் வகுப்பிற்குரியது)
விலை அணா. 8

பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்,
பப்ளிஷர்ஸ் புக்ஸெல்லர்ஸ்,
மதராஸ் & மதுரை.